மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

முதல் வால்யூம் பஹுதான்ய வருஷம் மாசிப் பகுதி.

15—2—1939.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

சில்பஸ்ரீ வாழ்த்து

1 ' குழற்கோவலன் ' i
2 ஸ்ரீ. K. கிருஷ்ணமூர்த்தி i

சில்பஸ்ரீ

1 ஸ்ரீ ய. மஹாலிங்க சரஸ்திரிகள் M.A., B.L., ... ii
2 ஸ்ரீ டி. கே. ராமபத்ர சர்மா iii
3 ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் iii

W. B. யேட்ஸ் அனுபந்தம்

1 மஹாகவி யேட்ஸ் ... ... 'கௌண்டின்யன்' ... iv
2 என்னுள்ளங்களிக்குந் தேசம் ... ,, (மொழிபெயர்ப்பு) ... v
3 மோஹம் ... ... ,, ,, ... vi
4 கில்லிகன் குரு ... ... நல்லிச்சேரி அருணாசலமைய்யர் (மொழிபெயர்ப்பு) ... vii

கவிதா விமர்சம்

1 குறவஞ்சி ... ... இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திரு. ச. சோமசுந்தர தேசிகர் ... 73
2 கலையின் விளக்கம் ... ... R. P. சேதுப்பிள்ளை, M.A., B.L.. ... 77
3 அந்நாள் ... ... ரா. ஸ்ரீ தேசிகன். M.A., ... 79
4 அழகும் ஆனந்தமும் ... P. கோதண்டராமன் M.A.,B.L., ஸ்ரீ நளினீகாந்த குப்தா ... 81
5 என் நாவினுளான் ... ... மாயக்கூத்தன் 83
6 அதிதியும் அருளும் ... ... துகளன் 84

விஷயம் : பக்கம்.

புதுக் கற்பனைகள்

1	தாய் வணக்கம்	'கௌண்டின்யன்'	85
2	பாரதமாதா துதி	V. முத்துஸ்வாமி ஐயர். M.A.,L.T.,...	87
3	வரம் (ஒரு சிறு நாடகம்) ...	கே. சுவாமிநாதன்	88
4	தசரதன் விலாபம்	'பார்க்கவன்'	92
5	இட்லியின் திக்விஜயம் ...	'வைதஹவ்யன்'	94
6	ஒரு புத்த போதனை ...	இளைய வாதூலன்	95
7	ஒரு 'கருங்கூத்து' ...	ராவ். ஸாஹிப். பண்டிதர் மு. இராகவ ஐயங்கார்	102
8	கலியின் முதல் தாவா ...	ய. மகாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L., ...	105

அனுஷ்டானப் பகுதி

1	மாட்டுப் போங்கல் ...	டாக்டர் வே. ராகவன் M.A., Ph. D....	113

கீதப்பகுதி

1	கானரஸமும் கவிதையும் ...	டாக்டர் வே. ராகவன்	117
2	பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் கீர்த்தனை ...	மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையர்	119
3	மங்களம் ...	பண்டிதர் ச. சோமசுந்தர தேசிகர். ...	120

சில்பப் பகுதி

1	வாழ்க்கைக்கலை ...	டாக்டர் வே. ராகவன்	121
2	மரங்கள், குடிசைகள், கோயில்கள்	,, ,, ...	123

மொழி பெயர்ப்புப் பகுதி

1	கதைக் கடல் ...	,, ,, ...	129

புஸ்தக விமர்சனம்

1	மாதங்கினி ...	'பார்க்கவன்'	132
2	இராஜராஜேசுவரமும் பிறசோழர் கோயில்களும் ...	பண்டிதர் ச. சோமசுந்தர தேசிகர் ...	133
3	மதுரை நகர் வரலாறு ...	,, ச. சோமசுந்தர தேசிகர் ...	134
4	தமிழ் நேசன் ஆண்டு மலர் ...	விசாரதன்	134

பத்திரிகாசிரியர் குறிப்புகள் 135

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒருபக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறும் பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

...தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி விலை அணா 6.

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. 4.

சில்பஸ்ரீ வாழ்த்து.

(தமிழ் மாணவன், குழற்கோவலன் எழுதியது.)

நேரிசை வெண்பா.

பூவிற்குட் போந்த பொறிவாழ்பூ என்பரால்
காவிற்குட் போந்தஉயர் கற்பகமாம்—நாவிற்குத்
தின்னும் ருசியதனில் தித்திப்பாம் சில்பஸ்ரீ
இன்னும் அதிகம் இதில்.

மலை விளக்குப் போல மகிதலத்தோர் போற்றக்
கலைவிளக்கைக் கொண்டு களிப்பீர்—நிலைவிளக்காய்
பல்லோருதவுதமிழ்ப் பண்பாரும் சில்பஸ்ரீ
எல்லோரும் கொள்வீர் இனிது.

கற்றவரும் மற்றவரும் கண்டுவகை கொண்டினிக்க
நற்றவத்தோர் தந்துதவு நற்புதினம்—பெற்றவரும்
உள்ளத் துவகைகொள உற்றவர்கள் சில்பஸ்ரீ
தள்ளக் கருதா தவர்.

பன்னும் வடமொழியில் வாய்ந்தபொருள் ஆங்கிலத்தில்
என்னுமி வற்றை இயற்றமிழில்—கன்னலெனக்
கொள்ளக் கொடுக்கும் குறிப்பால் நிலவுலகம்
எள்ளா தினிதேற்கு மின்று.

மொழிபெயர்ப்பும் கட்டுரையும் முன்மொழிந்த தொன்றை
வழிவழியே சொல்லும் வனப்பும்—செழியவுயர்
நீதிக்கதைகள் நிறைந்துவளர் சில்பஸ்ரீ
ஓதி உணர்வார் உவந்து.

சில்பஸ்ரீ வாழ்த்து

(K. கிருஷ்ணமூர்த்தி எழுதியது.)

கண்ணு ளார்கண்டு மகிழுங் கலையினை
மண்ணு ளார்மம்ம லறுக்கு மருந்தினை
தண்ணு ளாரிதயப் பண்பாஞ் சில்பஸ்ரீ
நண்ணு வார்மதி நானிலம் வாழ்த்துமே!

சில்பஸ்ரீ

(பிரம்மஸ்ரீ ய. மஹாலிங்கக சாஸ்திரிகள், M.A., B.L., எழுதியது.)

என் நண்பர் இப்பத்திரிகையைத் துவக்கும் முன், தன் நோக்கங்களைத் தெரிவித்து ஒரு பெயர் கற்பனை செய்யும்படி, என்னைக் கேட்டிருப்பாரேயானால், நான் இவ்வளவு பொருத்தமான பெயரைத் தந்திருக்க முடியாது என்று தோன்றுகிறது. வேறு என்ன பெயர் இட்டிருப்பேன் இப்பத்திரிகைக்கு, என்று இப்போது நான் சொல்லத் துணியவில்லை. நான் எதைப்பொறுக்கி இருந்தாலும் அது இப்பெயருக்கு இணையாகாது. இவ்வாசிரியர் வேறு சிலரைக் கேட்டிருந்தால், 'கலைக்கொடி' என்றாவது 'கலைக்கல்பகம்' 'சில்பமணி' என்றாவது சொல்லியிருக்கலாம். இதைப்படிப்பவர் சற்று யோசித்துப்பார்க்கலாம். அவ்விதப்பெயர்களை விட 'சில்பஸ்ரீ'யில் ஒரு வசீகரம் இருக்கிறது.

பெயரைப்போலவே சில்பஸ்ரீக்குப் படமும் அமைந்தது விசேஷம். சக்தித்ரயத்தின் மர்மங்கள் அடங்கப்பெற்ற இவ்வம்மை, தத்தாத்ரேய மூர்த்தியின் உவமைக்குப் பாத்திரமாகிறாள். இதுவும் ஒரு சுபக்குறிதான்.

புத்தி கற்பனைக்கும் அமைப்புக்கும் வித்யாசமுண்டு. அமைப்பில் தைவீகம் கலந்திக்கிறது. அதில் அம்ருதத்வம் அல்லது சாச்வதத் தன்மை உண்டு. கலைகள் புத்தி கற்பனையைத் தழுவி எழுச்சி அடைந்தனவாகவும், அமைப்பு என்ற தைவீகத் தன்மை பொருந்தினதாகவும் இருக்கலாம். புத்தி கற்பனையைமட்டும் ஆதாரமாகக்கொண்ட கலைத்தொண்டுகள் மட்டம் தான். அவை ஸ்ரீ என்னும் அழியா அழகு வாய்ந்தவைகளாயில்லாமல் கலைத்தொழிலாக மட்டும் இருக்கப்பட்டவை. ஸ்ரீ என்பது தைவீகமான அம்சம். அதை விவரித்துக்கூறுதல் அரிது. அதை 'லாவண்யமிவாங்கனானாம்' என்று ஒரு கவி சுட்டிக் காட்டினார். அவ்வளவுதான் அதைப் பற்றிக் குறிப்பிடமுடியும். ஆனால் அனுபவத்தில் யாவருக்கும் தெரிந்தவிஷயம். அவ்வித ஸ்ரீ, கலைக்கு, நிலையாக நிற்கக்கூடிய உத்தம கலைக்கு—இன்றியமையாதது எனப் புகட்டும் பெருமையை உடையது சில்பஸ்ரீ என்ற நாமதேயம்.

ஆனால் கலாஸ்ரீ என்று சொல்லியிருக்கலாமோ? சில்பஸ்ரீ என்பதில் அனுப்ராஸம் அமைந்திருக்கிறது. அதனால் அது மேல் என்றால், கலையும் சிற்பமும் ஒன்றா, வெவ்வேறா என்ற பிரச்னை பிறக்கிறது. ஸம்ஸ்க்ருதத்தில் சில்பம் என்பது கலை, என்பதின் ஓர் உறுபு. சில்பம் ஒருவித கலை. 'சில்பரத்னம்' என்ற க்ரந்தத்தில், கல்தச்சு வேலைத்திறம் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலை என்ற பதத்தில் ஸங்கீதம், நாட்யம், கவிதை, சில்பம், சித்திரம் முதலியன யாவும் உள்ளடங்கினவை. ஆனால் இங்கு இப்பதத்தின் பொருத்தம் எப்படி? தமிழில் இப்பதத்திற்கு வழங்கும் பொருள் விசாரிக்க வேண்டுமோ? ஏன், ஸம்ஸ்க்ருதத்திலேயே 'சில்பம்' என்ற பதத்திற்கும் மற்றொரு பிரஸித்தமான அர்த்தம் இருக்கிறது. சில்பம் என்றால் எந்தக் கலையிலும் ஏற்படக்கூடிய ஒரு தேர்ச்சி. மேலும், ஸாமான்யமாக எந்தக் கலையையும் சில்பம் என்று வியவஹரிப்பதும் உண்டு. 'பாத்ரவிசேஷந்யஸ்தம் குணாந்தரம் வ்ஜாதி சில்பமாதாது:' என்றார் காளிதாஸர். ஆகையால் அந்தந்தக் கலையில் தைவீக அமைப்பு அம்சங்களைத் தெளியத் தெரிவிக்க முயலும் ஒரு மாதப்பத்திரிகை இது என்று பொருள் படுகிறது.

கலைத்திறங்களில் இந்த ஸ்ரீயை எழும்பச் செய்வதும், பாற்கடலில் அந்த ஸ்ரீயை எழும்பச்செய்ததுபோல ஒரு பெரிய காரியம் தான். லேசானதல்ல. மத்தியில் ஹாலா ஹலம் கூடக் கிளம்பும். அசுரர்கள் முறைத்துக் கொள்வார்கள். ஆனால் தேவத்தன்மையின் வன்மையால் ஜயம் பெறலாம்.

சில்பஸ்ரீ

(பிரம்மஸ்ரீ டி. கே. ராமபத்ர சர்மா எழுதியது.)

சில்பஸ்ரீயின் விஜயம் நாட்டிலே நல்ல கலோதயத்தின் நற்குறி. அறிவு நிறைந்த மருகியை ஆதரிக்கும் மாமி போன்று செல்வி கலைமகளைத் தாங்கிவரும் கற்பனை போற்றத் தக்கது! சரித்திர பூர்வமாக அங்கீகரிக்கப் பெற்ற "தமிழ் நாட்டின் கலை உண்மையை" சில்பஸ்ரீ வையகத்திலுள்ளோர்க்கெல்லாம் நன்கு எடுத்து விளக்குவாளென்று நம்புகிறேன். வட மொழி பயின்று வேலையின்றி வருந்தும் வாலிபர்க்கும்—படிக்காசுத்தம்பிரான் பரிகசிப்பது போன்று தமிழைக் கற்றும் தக்க ஆதரவின்றித் தவிக்கும் தமிழ்ப் புலவர் மணிகளுக்கும் சில்பஸ்ரீ ஒரு வழி காட்டுவாளாக. அன்னை நினைத்தால் உணவுக்குப் பஞ்சமில்லை; அது போல் தம் போன்ற கலோத்தாரகர் மிக மிகத் தீவிரமாக முயன்றால் ஒவ்வொரு கலைக்கும் ஒரு சில பகீரதர்களை உண்டு பண்ணலாம். அடுத்து முயன்றால் ருஷியாவிலே மூளைப்பஞ்சத்தினால் வாடிய மேதையர்க்கெல்லாம் மகா கவி டாகூர் மருந்தளித்ததுபோல், தாங்களும் ஒரு பெருங் கலை வெள்ள முவந்தளிக்காலாம். அதற்குரிய சக்தியை சில்பஸ்ரீயின் வடிவமான ஸ்ரீ தேவி அருள் செய்வாளாக. 'ஸசாமர ரமாவாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா".

சில்பஸ்ரீ

மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
பிரம்மஸ்ரீ டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதியது.

ம-ா-ா ஸ்ரீ கா. வே. ராமசந்திரையரவர்கள் ஆரம்பித்துள்ள "சில்பஸ்ரீ" என்னும் பத்திரிகையைப் பார்த்தேன். ஸங்கீதம், நடனம் முதலிய கலைகளைப் பற்றியும் அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகளும் புதுக் கதைகளும் இதில் வெளிவருமென்று அறிந்து மகிழ்கின்றேன். கலைகளில் ஆராய்ச்சியுடைய பலர் இப்பத்திரிகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகளின் உதவியால் தமிழ் நாட்டினருக்கு கலைகளினிடத்தில் அபிமானம் வளருமென்பது என் கருத்து.

நல்ல முறையில் சிறந்த விஷயங்களை வெளியிடத் தொடங்கியுள்ள இப்பத்திரியைத் தமிழ் நாட்டார் ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

மஹா கவி·யேட்ஸ்

(கௌண்டின்யன்)

சென்ற மாதம் ஆங்கில கவிதிலகமான உயில்லியம் பட்லர் யேட்ஸ் கால கதியடைந்த நிமித்தம் கற்பனை யுலகத்துக்கே செல்வம் குறைந்ததெனலாம். அவர் பூர்ணயுஸாக விருந்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைகளிலும் அரிய பெரிய கிரந்தங்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றவர். அயர்லாந்து தேசத்தில் 73 ஆண்டுகளுக்கு முன் ஓவியர்மணியான ஜே. பி. யேட்ஸ் என்பவர் புதல்வனாய் ஜனித்து, சித்திரம், சாஸ்திரம் முதலியன பயின்று, கவி பாடுவதில் இயற்கையாயுள்ள திறமையை ஒரு மனப் பட்டு ஒழுங்கே வளர்த்தவர். அன்னியருக்கடிமை பூண்டு, ஒளி மழுங்கிக் கிடந்த தம் நாட்டின் பண்டைச் சரித்திரத்தையும், தலைமுறை தத்துவமாய் வந்தும், தாய் பாஷையையே வெகுவாய்த்துறந்து 'நாகரீகம்' படைத்தவர்களால் முற்றிலும் மறக்கப்பட்டுக் கிராமங்களிலும் நாடோடி ஜனங்களிடத்திலுமே ஒருவாறு காணப்பட்ட ஐதிகங்களையும், நம்பிக்கைகளையும் அவைகளுக்கு லக்ஷியமான 'கேலிக்' பாஷையில் எழுதப்பட்ட கிரந்தங்களையும் மிகப் பாடுபட்டுத் தேடி யெடுத்துக் கவிகள் திரும்பக் கையாளும்படிப் பேருதவி செய்தார். இவ்விதம் தேசத்துக்கும், எழுத்தாளர்களுக்கும், கவிதைக்குமே புத்துயிர் அளித்த இக் கைங்கரியத்தில் இவருடன் ஒத்துழைத்தவர் 'ஏ. இ' என்று ப்ரஸித்தி பெற்ற கவி ஜார்ஜ் ரஸ்ஸெல், வெகு அழகான பல நாடகங்கள் இயற்றின லேடி க்ரிகரி முதலியவர்கள். இவர்கள் ஏற்படுத்திய 'ஆபி தியேட்டர்' என்னும் நாடகச்சாலையின் பயனாக; ஜே. எம். ஸிஞ்ஜ் முதலான அநேக மேதாவிகளால் அபூர்வமான நாடகங்கள் வெளி வந்து, ஆங்கிலத்தில் மிகவும் சீர் குலைந்திருந்த அக் கலையைக் கைதூக்கிவிட்டன.

யேட்ஸின் காவியங்கள் பல நடைகளும், விசித்திரமான சொல் அமைப்புகளும், அர்த்த புஷ்டி, த்வனி விசேஷம், செவிக்கினிமை என்ற மகா காவியங்களுக்கின்றியமையாத குணங்களும் ததும்பி நிற்பன. புதிது புதிதாகக் கிளம்பும் அவர் கற்பனைகளில் மூப்பின் சோர்வையோ அருட்கவியின் ஓய்வையோ எள்ளளவும் காண முடியாது. ஆனால் இளமையில் இயற்றிய கவிகளில் மாதுர்ய மிகுதியும், பிற்காலத்தில் செய்த கற்பனைகளில் கட்டிடச் சீர்மையும் ஞானத்தின் மேன்மையும் முக்கியமாய் விளங்கும்.

மேநாட்டுக் கவிகளிடையே இந்திய நாகரீகத்தின் மகிமையையும் சூக்ஷ்மத்தையும் வாஸநாபலத்தால் கண்டிருந்த வெகு சிலருள் யேட்ஸே முக்கியமானவர். கண்டறிந்தது மட்டுமல்ல. தன் கவிதையிலும் நமது ஆர்ய மனோ பாவங்களை நன்கு துலக்கி யிருக்கிறார். அமானுஷமான சக்திகளில் நம்பிக்கை வைத்ததோடு, அவைகளை அனேகம் பாட்டுகளுக்கு ஆதாரமாகவும் கொண்டுள்ளார். வரகவியான அவருக்குத் தத்துவ மார்க்கத்தைக் காட்டும் நம் சாஸ்திரங்களில் அளவில்லாப் பிரேமையிருந்தது. இதற்கு அத்தாக்ஷி ஸ்ரீ புரோஹித் ஸ்வாமியின் உதவியைக் கொண்டு தசோபநிஷத்துகளையும் பாதஞ்சலயோகஸூத்திரங்களையும் மொழி பெயர்த்து, முக்கியமாய் மேநாட்டாருக்கு அவைகள் பயன் படுமாறு செய்ததொன்று போதாதோ? அன்னத்தைப் போன்ற பகுத்தறிவும், உதார குணமும், அழியா ஊக்கமும் உடைய இவர் இருபத்தைந்து வருஷத்துக்கு முன் நமது மகா கவி ரவீந்திர நாதரின் 'கீதாஞ்சலி'யைப் பார்வையிட்டுப் பேரானந்தம் எய்தி, அதற்கு ஒரு அரிய முன்னுரை ஸமர்ப்பித்து, உலகமெல்லாம் நமது கவியைப் போற்றும்படி செய்த புண்ணியர். அவர் போலே யிவரும் 'நோபெல்' பரிசு பெற்றவர்.

இவர் கவிச்சுவையை ஆங்கிலந் தெரியாதார் ஒருவாறு ஊகிக்கும் பொருட்டு, 'இன்னிஸ்ப்ரீயின் ஏரித்திட்டு,' 'தம்மைத் தாமே தண்ணீரில் கண்டு மகிழ்ந்த முதியோர்' என்ற தலைப்புகள் கீழ் அவர் பாடிய பாட்டுக்களைத் தழுவி சாமான்னியர் பாடும் சந்தங்களில் இங்கமைத்திருக்கிறோம். ஆங்கிலத்தில் அக்கவிகளில் காணப்படும் சொல்லழகும் நடையமைப்பும், முற்றிலும் வேறான அலங்கார லக்ஷணங்கள் பொருந்திய நம் தமிழில் பிரதிபிம்பித்துக் காட்டுவது ஸாத்திய மில்லாததால், ஏதோ ஸ்தூலமாக பாவங்களையும் நயங்களையும் காட்டத்தான் முயற்சி செய்திருக்கிறோம் என்று மட்டும் தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிற்று.

என்னுள்ளங்களிக்குந் தேசம்

போவேனிப்போ நான் —
என் உள்ளங்களிக்குந் தேசம்
போவேனிப்போ நான்.

வேய்வேனங்கே நான்—
மூங்கிற்சிம்பால் மண்குடிசை
வேய் வேனங்கே நான்.

நடுவேனங்கே நான்—
நட்டமாய்ப் பட்டாணி வரிசையொன்பது
நடு வேனங்கே நான்.

தருவேனப்போ நான்—
தேனீக்கள் கூடுகட்டக் கூடுமொன்று
தருவேனப்போ நான்.

ரமிப்பேனங்கே நான்—
தனிமையிலே தேனீக்கள்
ஒலி நிறைந்த தனிவெளியே
ரமிப்பேனங்கே நான்.

சாந்தம் பெறலாமங்கே
சாந்தம் தவழ்ந்து வரும்—

உஷையின் முக வேடிலிருந்
துதிர்ந்து வரும் சாந்தம்
சுவர்க் கோழி கூவுமிடம்
கூடிவரும் சாந்தம்

ஒளிபடைத்த நடு நிசியும்
ஊதாவூர்ண நடுப் பகலும்
அந்தியிலே பண்படைத்த
பறவை ரக்கை நிறம்பிவரும்—

சாந்தம் பெறலாமங்கே
சாந்தம் தவழ்ந்து வரும்.

போவேனிப்போ நான்—
அல்லும் பகலுமங்கே
அலைமோதும் ஏரித் தண்ணீர்
மெல்ல மெல்லக் கரையோரம்
வந்து வாவென்றழைக்கிறது—
போவேனிப் போ நான்.

போவேனிப்போ நான்—
அல்லும் பகலுமிங்கே
சந்தடியாம் சாலையிலே
சாம்பற் பூத்த திண்ணையிலே
ஹ்ருதய குஹரந்தனிலே
கேட்கிறதே காண்.

மோஹம்

மூப்புமேலிட்ட மாந்தர் சொல்லக் கேட்டேன்,
"மாறுது எல்லாம், மறைகிறோமே யாம்;"

கழுகு நகமொத்த கைகளும்—முழங்
கால்கள் தண்ணீரண்டை முறுக்கிக் கிளம்பின
முள்ளுமரமது போலவும்—வாய்ந்து
மூப்புமேலிட்ட மாந்தர் சொல்லக் கேட்டேன்,

"அழகு நிறைந்தது அகிலமும் வீணாக
ஆற்று ஜலம் போலே போகிறதே பார்."

கில்லிகன் குரு.

(நல்லிச்சேரி அருணாசலய்யர் மொழிபெயர்த்தது.)

(கும்மி மெட்டு.)

1 அல்லும் பகலுமயர்ந்திருந்தார் அவர்
ஐயர் பீடர் கில்லிகன் முதியோர்;
சொல்லில்—அவர் ஜனம் பாதி படுக்கையில்,
துஞ்சுவர் பாதி பசுந்தரைக் கீழ்.

2 அந்தியில் ஓர் நாள் அயர்ந்து நாற்காலியில்
ஆடியமர்ந்தே இருக்கும் வேளை,
"முந்த வரவேணும்,' என்றொரு ஏழை
முடுகவே, தானும் வருத்தமுற்றார்.

3 ஓச்சலொழிவிலாதி யானுழைக்க மக்கள்
ஓயாது சாகவே தாமுதித்தார்—இத்
தீச்சொல்லுக்காகவே, தேவனே, மன்னியும்.
சீரிலா வார்த்தை எனதலவே!

4 காலேமடித்து நற்காலியிற் சாய்ந்தவர்
கருணைக்கடலைத் தொழுதயர;
மாலைப்பொழுது போய் வானில் மீன்ஒன்றொன்றாய்
வந்த உலகினைப் பார்க்க வென்றே.

5 கோடிக் கணக்காக மீனம் பூக்கக், காற்றில்
கொண்ட இலைகள் அசைந்தாட,
வாடுமுலகம் உறங்கவேன்றே இருள்
வையக மூட விடுத்தனனே.

6 காலே மறு நாள் பட்சிகள் வண்டுகள்
கானங் கேட்டே கதிரோன் வரவே,
வேலே செய குரு கில்லிகன் தான்செல
வேகம் படுக்கை விட்டே எழுந்தார்.

7 "நாற்காலியிற் சாய்ந்து நானுறங்க ஏழை
ஞாலம் விடுத்தனனோ? அந்தோ!
பார்க்காது தூங்கியதே பாவம்," என்று
பாயும் குதிரைமேல் ஏறிச் சென்றார்.

8 தேய்வுறும் இட்டேரி தீதாம் சதுப்பினில்
தீவிரமாகப் பரியூர்ந்தார்—
நோயாளன் மனைவி தாள் திறந்து, "ஐய,
நும்கருணையாற் திரும்ப வந்தீர்!"

9 "ஐயோ பாவம்! அவன் என்னிலையோ?" என,
"ஐய, ஒரு மணி முன் இறந்தார்."
மெய்சோர முதியார் துக்கமுண்டப்போது
காற்றில் மரமென ஆடினரே,

10 "தாங்களும் சென்ற மறு க்ஷணமேயவர்
தன்மன நிம்மதியாய் இறந்தார்."
வீங்கி இவ் வார்த்தையில், பீடர்கில்லிகன்
வியந்து முழந்தாளிட்டே துதிப்பார்.

11 "இரவினில் வானகம் மீனம் பதித்தவர்
ஏங்கி வருந்தும் மனத்தவர்க்கே,—
பரிவுடன் நாயேனுக்கும் உதவ ஒரு
தூதுவனைத் தந்தருளினரே.

12 செவ்வான் அணிந்தே சேகந்தனைக் காப்பவர்,
சீராய்க் க்ரஹங்களை யோட்டுமேவர்,
எவ்வர்க்கும் ஈனனென எனக்குமவர்
இரங்கினரோயான் துயின்றிருக்க!"



கவிதா விமர்சம்.

குறவஞ்சி

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திரு—ச. சோமசுந்தர தேசிகர்]

தமிழ் மொழியிலே பிற்காலத்தார் நூல் வகைகளைத் தொண்ணூற்றாறெனப் பிரித்தனர். முற்காலத்திலே, அதாவது தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில், சங்ககாலம் என்று சுட்டப்படும் காலத்தில் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறென்ற கணக்கு இருந்ததாகத் தெரிய வில்லை. மிகப் பழைமையுடையதாகக் கருதப்படும் பன்னிருபாட்டியல் என்ற இலக்கண நூலிலே அறுபது வகைப் பாவினங்களேகூறப்பட்டுள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டதான வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியலில் பிரபந்தவகை தொண்ணூற்றாறு என்ற விளக்கம் காணப்பட வில்லை. இலக்கணவிளக்கம் என்ற நூலில் ஐம்பத்தைந்து தொடர்நிலைச் செய்யுட்கும் இருபத்திரண்டு தனிநிலைச் செய்யுட்கும் இலக்கணம் வகுக்கப்பட்டுளதாயினும் உழத்திப்பாட்டு, குறத்திப்பாட்டு முதலாயவற்றின் பெயரே காணப்பட வில்லை. 'இவை அவைபோல்வன பிறவுமெல்லாம்' என்ற இலேசில் அடங்கும்போலும். மேலே காட்டிய பன்னிருபாட்டியல்

'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே'

என்று விளக்கும். முன் நடந்தது, குறத்தி தலைவியைக் காணும் போது நடப்பது, பின்னர் நடக்கப்போவது இவைகளைக் கூறுவதெனக் காண்கிறோம். ஆயினும், வீரமாமுனிவரது சதுரகராதியிலே, 'குறத்திப்பாட்டு தலைவன் பவனி வரவு, மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாப்போந்த தலைவனைக் கண்டு மயங்கல், திங்கள் தென்றல் முதலிய வுபாலம்பனம், பாங்கி யுற்றதென்னென வினவல், தலைவி பாங்கியோடு உற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூது வேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங் கூறல், குறத்தி வரவு, தலைவி குறத்தியை மலைவள முதலிய வினவல், குறத்தி மலைவள நாட்டுவள முதலிய கூறல், தலைவன் றலைவளங்

கிளைவள முதலிய கூறல், குறி சொல்லி வந்தமை கூறல், தலைவி குறி வினவல், குறத்தி தெய்வம் பராவல், குறி தேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசிலுதவி விடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணி குத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனோடு குறத்தி யடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்று வினவலு மாண்டாண்டு குறத்தி விடை கூறலு மாகக் கூறல், பெரும்பான்மையு மிவ்வகை யுறுப்புக்களால் அகவல், வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் இச் செய்யுள்களை இடைக்கிடை கூறிச் சிந்து முதலிய நாடகத் தமிழால் பாடுவது' என்று காணப்படுகிறது. பன்னிருபாட்டியல் காலத்துக்கும் வீரமாமுனிவர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்திலே இக் குறத்திப் பாட்டு கலம்பகத்தின் ஒருறுப்பாய் நின்று குறத்தி வரவு, விரிச்சியோர்தல், பயன் இவைகளைக் கூறிற்று. அதுவே குறம் என்ற நூலாகி குறத்தி வருகை, தலைவியிடம் தன் பெருமை கூறுதல், காசுதூசு வைக்க வேண்டுதல், மலைவளம் கூறுதல், குலப் பெருமை கூறுதல், குறி சொன்ன விடங்களைக் கூறுதல், தலைமுறை கூறுதல், பரிசில் கேட்டல், குறிபார்க்கப் பிள்ளையார் பிடித்து வைக்கச் சொல்லுதல், நிமித்தங் கூறல், கைபார்த்து இரேகையின் பயன் கூறுதல், தலைவி பெருமை கூறுதல், வாழ்த்து இவைகளுடன் முடியும். மீனாட்சியம்மை குறம், வள்ளியம்மை குறம் என்பவை இவ்வினத்தைச் சார்ந்தவை.

இதனினும் விரிவுடையது குறவஞ்சி என்பது. வஞ்சி பெண் எனப் பொருள்படும். குறவஞ்சி யென்ற சொல் குறப் பெண் என்று பொருள்படும். நூலாசிரியர் தனது நுண்ணறிவுக்கேற்ப பாட்டுடைத் தலைவனது பெருமை தோன்றும்படி குறத்தி வாய்மொழியாகப் பல செய்திகளைக் கூறுவர். இக்குறவஞ்சியும் ஆடற் கேற்றதும் நூலளவில் நிற்பதுமென இருவகையாகும். அதனாலே, குறவஞ்சி நூல் இயல், இசை நாடகமாய தமிழ் மொழியின் மூன்று பகுதியையும் தன்னுள் அடக்கிக் காட்டும். பாக்களெல்லாம் இயற்றமிழிலுள்ள பா, பாவினங்களிலமைந்தும், அவற்றைப் பாட வேண்டிய முறை சொல்லவேண்டிய வகைகளை இன்னின்ன இராகங்களில், பண், திறம் இவைகளில் பாட வேண்டுமென்ற நியதி கூறியும், இன்னின்ன விதத்தில் நடிக்க வேண்டு மென்ற முறை காட்டியும் கூறப்படுதலினால் குறவஞ்சி என்ற நூல் இயல் இசை நாடகமான மூன்று பகுதியும் அடங்கி யதாகும்.

திருக்குற்றாலக் குறவஞ்சி, அர்த்த நாரீசுரர் குறவஞ்சி, திருமலை யாண்டவர் குறவஞ்சி, வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி முதலாயவை முன்னினத்தைச் சார்ந்தவை. திருவாரூர்க் குறவஞ்சி, சரபேந்திரக் குறவஞ்சி முதலாயவை ஆடற்கேற்பப் பாடப்பட்டவை. இவற்றுள் சரபேந்திரக் குறவஞ்சி கட்டியக்காரன் வருதல், கணபதி தோன்றுதல், மகாராஜாவின் பவனி, மதனவல்லி கண்டு மயலுறுதல், சந்திரோபாலம்பனம் முதலியனவும், பின் குறத்தி வருகை முதலியனவும் உடையது. திருவாரூர்க்குறவஞ்சியில் அவ்வாறன்றிக் காப்பு மங்களங்களுக்குப் பின்னர் இராசமோகினி தோன்றுதலும், அவளது விரகதாபமும், பாங்கிதோன்றலும், தலைவியின் புலம்பலும், பாங்கி குறிகேட்க வேண்டுமெனக் கூறலும், அப்பொழுது குறவஞ்சி தோன்றுதலும் காணப்பெறும். திருக்குற்றாலக் குறவஞ்சியில் கட்டியக்காரன் வரவை யடுத்துக் குற்றால நாதர் பவனி காணப் பெண்கள் வருதல், வசந்தவல்லி வருதல், வசந்தவல்லி பந்தடித்தல், வசந்தவல்லி விரகதாபம், சந்திரோபாலம்பனம், வசந்தவல்லி பாங்கிக்குச் சொல்லுதல், பாங்கி தேற்றுதல், பாங்கி தூது, குறத்தி தோன்றுதல், அவள் மலைவளங் கூறுதல், அவள் நாட்டுவளங் கூறுதல், தல மகிமை கூறுதல், கிளை விசேடங் கூறுதல், குறியின் விசேடம் வினாதல், குறத்தி குறியின் விசேடங் கூறுதல், பல குறியும் சொல்லுவேனெனல், கடவுட் பராவல், வேண்டல், தெய்வ வணக்கஞ் செய்தல், குறி சொல்லுதல், சிங்கன் வருதல் முதலியன காணப்படும். இவ்வாறு காலஞ் செல்லச் செல்ல குறவஞ்சிப்பாட்டு வளர்ந்து கொண்டே வந்துளது எனலாம். ஒப்புமை பற்றி ஒரு பகுதியைக் கீழே குறித்து, இவ்வுரையை நிறுத்துகின்றேன்.

கடவுட் பராவ வேண்டல்

திருக்குற்றாலக் குறவஞ்சி

ஸ்ரீராகம் — அடதாள சாபு

1. தறை மெழுகு கோலமிடு
முறை பெறவே கணபதியை — யம்மே குடந்
தாங்காமுப் பழம்படைப்பாய்
தேங்காயு முடைத்து வைப்பா — யம்மே

2. அறுகு புனல் விளக்கிடுவாய்
அடைக்காய் வெள்ளிலை கோடுவோ — அம்மே வடை
அப்பமவல் வர்க்க வகை
சர்க்கரையோ டேட்போரிவை — யம்மே

3. நிறைநாழி யளந்துவைப்பா
யிறையோனைக் கரங்குவிப்பா — யம்மே குறி
நிலவரத்தைத் தேர்ந்து கோள்வாய்
குல தெய்வத்தை நேர்ந்து கோள்வாய் — அம்மே

4. குறி சோல்லவா குறி சோல்லவா
பிறைநுதலே குறி சோல்லவா — அம்மே ஐயர்
குறும்பலவர் திருவுளத்தாற்
பெரும்பலனுங் குறி சோல்லவா — அம்மே.

சரபேந்திர பூபால குறவஞ்சி

ராகம் பாசு — திச்ர தாளம்

1. சாணகத்தான் முழச்சதுர
மெழுகிவிளக் கேற்றிவைத்தி — டம்மே அதில்
தந்திமுக மைந்தனையே
சந்தணம்பூ வறுகணிந்தி — டம்மே

2. காணலுறு கனிவகையேள்
பொரிதேங்காய் நிவேதனஞ்சேய் — யம்மே பின்பு
கவினுறுவெற் றிலைதுவர்க்காய்
வைத்தோருபொற் காசும் வைத்தி — டம்மே

3. மாணுறுதூ பங்காட்டு
மந்திரத்தா லருச்சனைசேய் — யம்மே எதிர்
வந்தனஞ்சேய் தேத்திடேன்றன்
மனக்குறிப்பைக் குறித்துக்கோள்வா — யம்மே

4. நீணிலங்கோள் சரபோஜி
மன்னவர்வாழ் தஞ்சைவள — ரம்மே உன்றன்
நீண்மலர்க்கை தன்னையிங்கே
நீட்டுகுறி பார்த்துரைக்க — வம்மே.

திருவாரூர்க் குறவஞ்சி

ராகம் மோகனம் தாளம் ஆதி

பல்லவி

நான்சொல்லுங்குறி பொய்யாது
என்சொற்படி செய்வா யம்மே

அநுபல்லவி

அல்லியங் கோதை பங்காளர்
ஆரூர் வெற்பினில் மானே நான்

சரணங்கள்

1. சித்திரச் செம்பொன் மேடைமேலே
செம்பவளக்கால் நிறுத்தி
கொத்துமுத்துப் பந்தலிட்டுக்
கோலமிட்டுப் பத்தியாய்
நடுவிலொருபைம் பொன்னினாலே
கும்பமும் வைத்துச் சுற்றி
நவமணியாலே தோரணங்கட்டிச்
சிங்காரஞ் செய்வாய் நான்

2 கொந்தலர் சரங்கள் விட்டுக்
குளிர்பன்னீர் நீர்தெளித்து
இந்திர நீலப் பலகைமேல் இன்பமாகவே
தந்திமுகனை யமைத்துச்
சாம்பிராணித் தூபமிட்டுக்
கந்தகஸ்தூரி நிறைத்துக்
கற்பூரத் தீபம் வைப்பாய் நான்

3. கொப்பரையவல் மோதகங்
கோதில் லாப்போரி விளங்கனி
முப்பழங் கற்கண்டு சீனி
முதலாகப் படைத்துச்
செப்பமுடன் வேலவர்க்குத்
தேனுந் தினைமாவும் வைத்து.
ஒப்பில்லா வள்ளிக் கிரத்தின
ஓலைமுத்து மாலை வைப்பாய் நான்

4. அன்னமே தேவ தீர்த்தநீர்
ஆடிவெண் ணீறணிந்து
சொன்னவன்னப் பட்டுடுத்திச்
சுசிகர மாகவேதான்
செந்நெல் நிறைநாழி முத்துச்
செங்கையா லளந்து வைத்துச்
சன்னிதி முன்னே பணிந்து
தயவாய்க் குறிகேளம்மே நான்-

கலையின் விளக்கம்.

(R. P. சேதுப் பிள்ளை, M.A., B.L., எழுதியது.)

அழகுவாய்ந்த பொருள் என்றும் ஆனந்தம் தரும் என்னும் உண்மையை ஓர் ஆங்கிலக் கவிஞர் அருளிப் போந்தார். கண்ணினைக் கவரும் அழகையும், கருத்தினைக் கவரும் அறிவையும், விழுமிய தெய்வ நலங்களாகக்கருதி வழிபட்ட பெருமை பாரத நாட்டினர்க் குரியதாகும். அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் கொண்டு நல்லறிஞர் போற்றினார்கள். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக்கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளின் பெருமையைப் பாரதியார் போற்றிப் புகழும் முறை புதியதோர் இன்பம் தருவதாகும்.

இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவின் கலையென்றும், பயன்கலை என்றும் பகுத்துக் கூறுதல் வழக்காகும். கவின்கலைகள் கண்ணையும் செவியையும் கவர்ந்து, அவற்றின் வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டுவனவாம். பல திறப்பட்ட மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாய கலைகள் பயன் கலைகள் எனப்படும். இவ்விருவகைக் கலைகளின் வடிவமாகக் கலைமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் அழகுற அருளிப் போந்தார்.

செஞ்சொற் கவி இயற்றும் நல்லியற் கவிஞர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும் உலகினர்க்கு ஒளிநெறி காட்டும் உயரிய மறையிலும், கலைமகள் மகிழ்ந்துறைவாள். இன்னும், இன்னிசை வீணையை மலர்க்கரத்தேந்திய கலைமகள் மக்கள் பேசும் மழலை மொழியிலும், மாதர் இசைக்கும் மதுரப் பாட்டிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், சிறையாரும் மடக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருப்பாள். அன்றியும் மாடங்களை அழகு செய்யும் ஓவியங்களிலும், கோயில்களிலமைந்த சீரிய சிற்பங்களிலும் கலை மங்கையின் அழகே இலங்குவதாகும். எனவே, செவியினைக்கவரும் இயற் கவியும் இன்னிசையும் கண்ணினைக்கவரும் ஓவியமும் சிற்பமும் அறிவுத் தெய்வத்தின் உறையுளாகும்.

இவ்வுலகில் வாழும் மக்கட்குப் பயன்படும் பொருள்களை ஆக்கி அளிக்கும் வினைஞர் பலராவர். இரும்பைக் கொன்று வெம்படை வடிக்கும் கருங்கைக் கொல்லரும், திண்ணிய மரத்தைத் தறித்து முறித்துப் பணிசெய்யும் தச்சரும், குழைந்த மண்ணாற் பாண்டங்களை வனையும் குயவரும், பட்டாலும் பருத்தி நூலாலும் ஆடைகள் நெய்யும் சாலியரும் உலகவாழ்க்கைக்குப் பயன்படுங் கலைகளைப் பயின்று பணி செய்கின்றார்கள். இத்தகைய பணிகளிலும் கலைமாது பண்புற்று இலங்குவாள்.

இன்னும் வேதம் பயிலும் வேதியரும் வீரம் விளைக்கும் வேந்தரும், வான்பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும் ஒருங்கே வணங்கும் விழுமிய தெய்வம் அறிவுத் தெய்வமேயாகும். மாந்தர் உள்ளத் தாமரையில் இனிதுறைந்து அவர் அறிவினுக்கறிவாய் நின்று புன்னெறி விலக்கி நன்னெறி காட்டும் தெய்வம் கலைத் தெய்வமேயாகும். மேலோரென்றும் கீழோரென்றும் எண்ணாது, செல்வரென்றும் வறிஞரென்றும் கருதாது, முதியரென்றும் இளையரென்றும் பாராது, எக்குடிப்பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக என்று அருள் கூர்ந்தழைத்திடுந் தெய்வம் அறிவுத் தெய்வமே யாகும்.

இத்தகைய் தெய்வத்தை நிறைமொழி மாந்தராய நம்முன்னோர் மறைமொழியாற் போற்றினார்கள். ஆண்டுதோறும் எண்ணும் எழுத்துமமைந்த ஏடுகளை வரிசையாக அடுக்கி அணிவிழா எடுத்தார்கள். விரையுறு நறுமலர் தூவி வணங்கினார்கள். வண்ணமும் சுண்ண

மும் வழங்கினர்கள். இவ்வாறு ஆண்டு தோறும் நிகழும் நாமகள் விழாவினைக் கண்ட பாரதியார்

" செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தன மிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன் மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம் "

என்று சாற்றியருளினர். ஆண்டிற் கொரு முறை கலைமகளுக்கு மலர்மாலை புனைவதும், சந்தனம் சாத்துவதும் மந்திரம் மூரல்வதும், வந்தனை செய்வதுமே உரிய வழிபாடென்று கருதுதல் பெருந்தவறாகும். 'பொக்க மிக்கவர்' பூவையும் நீரையும் கலைமகள் பொருளாகக் கருதமாட்டாள். அங்ஙனமாயின் நாமகளுக்கு உகந்த வழிபாடுதான் யாதோ என்று அறிய விரும்புவார்க்குப் பாரதியார் நல்வழி காட்டுகின்றார். தமிழ் நாட்டிலுள்ள வீடுதோறும் கல்வியின் ஒளி விளங்குதல் வேண்டும். வீதி தோறும் இரண்டொரு கல்லூரி இலங்குதல் வேண்டும். நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்குதல் வேண்டும். கல்வி நலம் அறியாத கசடர் வாழும் ஊர்களை எரியினுக்கு இரையாக்குதல் வேண்டும். இவ்வாறு அறியாமையை அழித்து ஒழித்து யாண்டும் கலையின் மணம் கமழச் செய்தலே நாமகளின் அருள் பெறுதற்குரிய நல்ல வழிபாடாகும்.

நாட்டிலுள்ள ஏழை மாந்தர்க்கு எழுத்தறிவித்தல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அற மென்று பாரதியார் பகரும் திறம் அறியத் தக்கதாகும்.

" இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்"

என்று பாரதியார் அறிவித்துப் போந்தார். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அறத்தின் பெருமை அறிந்து அதனை ஆர்வமுற வளர்த்த நாடு நம் நாடாகும். வருந்தி வந்தவர் அரும் பசி களைந்து அவர் திருந்திய முகங் கண்டு திளைத்த நாடு இந் நாடாகும். கொழு கொம்பின்றிக் குழைந்து கிடந்த சிறு முல்லைக் கொடியின் துயர் கண்டு தரியாது, அக் கொடி படருமாறு தன் பொற்றேரை நிறுத்திச் சென்ற புரவலன் வாழ்ந்த நாடு இந் நாடாகும். வழி நடந்து செல்லும் ஏழைமக்கள் வெங்கதிரோன் கொடுமையால் வருந்தா வண்ணம் இனிய சாலைகளும் சோலைகளும் வகுத்தமைத்து அறம் வளர்த்த நாடு இந்நாடேயாகும். மும்மைசால் உலகுக்கெல்லா முதல்வனாய இறைவனுக்குச் செம்மைசான்ற கோயில்களும் தளிகளும் எடுத்த நாடு இந்நாடேயாகும். இங்ஙனம் அன்ன சாலைகள் அமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும் சிறந்த அறங்களே எனினும், அறிவை வளர்க்கும் கலாசாலைகள் நிறுவுதலே தலையாய அறமென்று பாரதியார் அறிவுறுத்தினர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்னும் உண்மையைப் பழந் தமிழ் மக்கள் பொன்னே போற் போற்றினர். கல்வி நலம் வாய்ந்தோரே மக்களாவ ரென்றும் அந்நலம் அமையப் பெறாதமாக்கள் விலங்கனைய ரென்றும் பழந் தமிழ்ப்பனுவல் பகுத்துரைக்கின்றது. 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்றார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர். எனவே, உடம்பினை வளர்க்கும் அன்னசாலையினும் உயிரினை வளர்க்கும் அறிவுச்சாலை சிறந்ததென்று அறைதலும் வேண்டுமோ? "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி"யாய இறைவன் 'கல்லார் நெஞ்சில் நில்லான்' என்னும் உண்மையை உணர்வோமாயின் இறைவனை வணங்குதற்குரிய ஆலயங்களை அமைப்பதற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் வேண்டும் என்பது இனிது விளங்குவதாகும். இதனாலேயே கலைநல மறியாது வருந்தும் வறிஞர்க்கு

எழுத்தறிவிக்கும் அறம் ஏனைய அறங்களினும் நூறாயிரம் மடங்கு மேலான தென்று பாரதியார் அறிவித்துப் போந்தார். இத்தகைய கல்விச்சாலைகளை நாடெங்கும் நாட்டுதலே கலைமகள் உள்ளத்தை மகிழ்விக்கும் உயரிய வழி பாடாகும். கல்லூரிகளிற் போந்து எண்ணும் எழுத்தும் பயிலும் மாணவன் கண்ணெதிரே கலைமகளின் வீணையும் கையும் விரிந்த முகமலரும் விழுமிய காட்சி அளிப்பனவாகும்.

அந்நாள்

(ரா. ஸ்ரீ தேசிகன், M.A., எழுதியது.)

பொழுது சாய்கிற வேளை. ஆனால் ஆகாயத்தில் இன்னும் அந்திச் சிவப்பு மாறவில்லை. என் மச்சு வீட்டின் வெளி மாடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு சற்றுத் தூரத்தில் துள்ளி விளையாடுகிற கடலின் அலைகளைப் பார்த்த வண்ணமே யிருந்தேன். பரந்த கடற்கரை மணலில் கவலையற்றுச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். கலகலவென எழும் அவர்களுடைய சிரிப்பொலியும், தடதடவெனக் கிளம்பும் அவர்களுடைய கைகொட்டலின் ஆர்ப்பரிப்பும், ஆரவாரமும் கடற் காற்றின் மீது மிதந்தது வந்தன. கவலையரித்துத் தின்னும் என்னுள்ளத்தே உறங்கிக் கிடக்கும் பண்டைய உணர்ச்சிகளை அவைகள் கிளறி விட்டன. துக்கமும் இன்பமும் மாறி மாறி அலை அடித்தன என் மனத்தில்.

வாடினமலர்களுக்கும், தேய்ந்த அழகுகளுக்கும் கலைந்தகனவுகளுக்கும், சிதறிய எண்ணங்களுக்கும், கருகின ஆசைகளுக்கும், இரங்குகிற தன்மை நம்மிடத்தில் வேரூன்றி யிருக்கிறது.

“அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில் இந்நிலை அடைந்தோம்” என்ற உணர்ச்சி சதா வாராமல் போக வில்லை. வருங்காலத்தைப் பற்றி அச்சம், உவகை, திகைப்பு முதலியன எழும். கழிந்ததைப் பற்றி ஒரே இரக்கந் தான். கழிந்த கஷ்டங்களில்கூட ஓர் இன்பத்தைக் கண்டு விடுகிறோம். காலமும் கற்பனையுஞ் சேர்ந்து சதி செய்து அவைகளுக்கு அலாதியான அழகையும், மணத்தையும், ஒளியையும் கொடுத்து விடுகின்றன. கனிகாலத்தை அழகு பெறச் சித்திரித்த ஆங்கில கவி கீட்சுக்கு முதல் முதல் மலர் அரும்பும் வசந்த காலத்தின் இன்னிசை எங்கேயோ ஓடி ஒளித்து விட்டதே என்ற எண்ணமும் ஏக்கமும் வருகின்றன. மூப்புப் பலகணி வழியாய் பால்ய இளம்புல் தடத்தைப் பார்ப்பது மனிதனுடைய இயல்பே.

கதிரொளி இளமை மறைந்ததை விசனித்துப் பாடிய கவிகளில் சங்ககாலத்துத் தொடித்தலை விழுத்தண்டினார் ஒருவர். இவரெழுதிய பாட்டுப் புறநானூற்றி லுள்ளது. பாட்டெழுதியவருடைய பெயர் இன்னதென்று தெரியாத நிலையால் பாட்டில் வருகின்ற ஓரடியையே பெயராக வைத்தார்போலும் இந்நூலைத் தொகுத்தவர்.

“இனி நினைந்திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயமாடு மகளிரோடு கைபிணைந்து
தழுவு வழித் தழீஇத் தூங்கு வழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோடேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடைமிடைந்த சில சொற்
பெருமூ தாளரோ மாகிய வெமக்கே”

இப்பாட்டில் ஒரு தொண்டு கிழவன் இளமைச் செல்வத்தை இழந்ததை நினைந்து புலம்புகிறான். பூணையுடைய தண்டின் மீது தாங்கி நிற்கிறான்; உடம்பு கிழவனுக்குக் கிடுகிடுவென ஆடுகிறது; இருமல் வந்து கொண்டே யிருக்கிறது; அதற்கிடையில் சில சொற்கள் சொல்லுகிறான். இந்தத் தள்ளாத நிலையில் பாலியத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி தாவி இவனுடைய ஞாபகத்திற்கு வருகிறது.

ஓர் அழகான பொய்கை, செறிந்த மணல் தடத்தில் வண்டலால் அமைக்கப்பட்ட ஒரு பொம்மைக்குப் பூக் கொய்து சூடி விளையாடும் மகளிரோடு இவனும் விளையாடுகிறான். அவர்கள் * தழுவின இடத்திலே இவனும் தழுவுகிறான். அவர்கள் எங்கே சின்னஞ் சிறு குருவி போல் ஓடி விளையாடுகிறார்களோ, இவனும் அங்கே ஓடிக் குதிக்கிறான். கள்ளங்கபடில்லாத ஒரு கல்லா இளமை. நீருக்கு மேலே உயரத் தாழ்ந்த மருதக் கொம்பின் மீதேறி தொப் என்று குதித்து அடியிலுள்ள மணலைக் கொண்டு வருகிறான். அலைகள் எழுகின்றன. கரையிலிருக்கிறவர்கள் அச்சம் கலந்த ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள்.

இப்படித் தலைகால் தெரியாமல் திரிந்த அந்நாட்கள் "போயினவே, போயினவே இனி வருமோ" எனக்கு என்று இந்தக் கிழவன் ஏங்குகிறான். இந்த பாட்டில் இரண்டு படங்கள் நம் முன் நிற்கின்றன—சூது வாது அறியாத பாலியத்தின் முறுக்கு வேகம், இரத்த ஓட்டம் இவைகளைக் காட்டுகிற ஒரு படம்; தளர்ச்சி, ஒடுக்கம், நடுக்கம், உடலும் ஆவியும் சோர்ந்து இன்றைக்கு விழுமோ நாளைக்கு விழுமோ என்ற நிலை, முதலியவைகளைக் காட்டுகின்ற மற்றொரு படம்.

இவ்விரண்டையும் ஒன்றுக் கொன்று எதிரே வைத்து அமைத்திருக்கும் சாமர்த்தியத்தைப் பார்த்தால் அவர் உண்மையான கவியென்பது நன்கு புலனாகும்.

இந்தப் பாட்டை வாசிக்கிற பொழுது தாமஸ் மூர் எழுதிய 'அந்நாள் ஒளி' (The Light of Other Days) என்ற பாட்டு என் சிந்தைக்கு வருகிறது. இக் கவியும் காலப் பனி மூட்டத்தில் மறைந்த போன பல பொருள்களுக்கு இரங்குகிறார்.

தூக்கம் வருவதற்கு முன் ஒரு கிழவனுக்கு அடிக்கடி பழைய நினைவுகள் வருகின்றன. ஞாபகத்தால் எழுப்பப்பட்ட அநேக உருவங்கள், படங்கள் அவன் சிந்தையரங்கில் தோன்றி மறைகின்றன. சின்னஞ் சிறு பிராயத்துச் சிரிப்பு அழுகை, இலைகள் போல உதிர்ந்து போன நண்பர்களின் சல்லாபங்கள், காரிகையார் காதற் கனவுகள், எங்கேயோ மறைந்து கிடக்கிற மணங்கள், ஒளிகள், சப்தங்கள் முதலியன அவன் கற்பனைச் செவிகளில் விழுகின்றன. ஒரு விருந்து கலைந்து போனபோது தனியா யிருக்கும் விருந்திட்டவனுடைய நிலைபோல் இவன் நிலை வந்து விட்டது. "சேஷஹோமம் ஆன வீடுமாதிரி வெறிச்சென்று இருக்கிறதே" என்று நாம் அடிக்கடி சொல்லுகிற வழக்கம். இத்தகைய தனிமையைச் சித்திரித்த பாடல் கலித் தொகையி லிருக்கிறது.

கல்லெனக் கவின் பெற்ற
விழாவாற்றுப் படுத்த பிற்
புல்லென்ற களம் போலப்
புலம்பு கொண்டமைவாளோ

தாமஸ் மூர் எழுதிய பாட்டிலுள்ள அனுபவங்கள் எல்லோருக்கும் நிகழக்கூடிய அனுபவங்கள். அவர் பாட்டில் காணப்படும் உருவங்கள் கனவுத் தோற்றங்களே. அநேக படங்கள் கிளம்பி ஒன்றிலொன்று கரைந்து விடுகின்றன. ஆனால் புறநானூற்றுப் பாட்டில் ஒரு துண்டான சித்தி

* 'தழுவு வழித்தழீஇ' என்ற பாடத்தைக் கொண்டு 'அவர் தழுவின் இடத்தே தழுவி' என்று பொருள் கண்டார் உரையாசிரியர். 'தங்குவழித்தங்கி' என்ற பாடத்தைக் கொண்டோமாகில் 'ஸ்திரீ புருஷ வித்யாசத்தையு மறியாத அச்சிறுமிகள், மார்கழி மாதத்தில் திருப்பாவை நோன்பு பூண்டு, விடியற் காலத்தில் பூக்கொய்து பாவைக்குச்சூட்டி, பின்பு சிறுவருடன் கைபிணைந்து குரவைக் கூத்தாடி, அக்கூத்தில் நிற்கு மிடங்களில் நின்று, அசையுமிடங்களில் அசைந்து', என்பது பொருளாகும். 'கல்லா இளமை' என்பது பயம் அறியாத இளமை போலும்.—பத்திரிகாசிரியர்.

ரம் கொஞ்சங்கூட முனை மழுங்காமல் வியக்தமாய் நிற்கிறது. ஒரு தனி அனுபவத்தைப் பார்க்கிறோம். அந்தத் தனி அனுபவத்தில் அகில ஜன அனுபவமும் திகழ்கிறது. தனி அனுபவத்தில் அகில அனுபவம் ததும்பப் பாடுவதுதான் உயர்ந்த கவியின் தன்மை.

இவர் தந்த படம் இயற்கைப் படம். பிசைந்த மண், கொய்த மலர், முதலியவைகளை அப்படியே தொட்டு அனுபவிக்கிறது போலிருக்கிறது. மலரின் மணமும், மண்ணின் வாசனையுங்கூட எழுகின்றன இதை வாசிக்குந்தோறும். பொங்கிவருகிற உணர்ச்சியில் படத்தின் உருக்குலையாமல் வைத்துக்கொள்ளுவது சாதாரண காரியமில்லை.

இது மாதிரியான பாடல்களில் தான் தமிழ்க் கவிதையின் தெளிந்த ஊற்றுக்கள் தென்படுகின்றன. அவைகளின் தூய அமுதப் புனலை அள்ளி அள்ளிப் பருகுவதில் நமக்கு எவ்வளவு இன்பம், எவ்வளவு ஆறுதல்.

அழகும் ஆனந்தமும்.

(P. கோதண்டராமன், M.A., B.L., மொழிபெயர்த்தது)

[இது ஸ்ரீ நளினீகாந்த குப்தாவின் "ஒளிவழியே" என்னும் வசன காவியத்தினின்று தொகுத்துத் தமிழ்ப் படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீ நளினீகாந்த குப்தா வங்க இலக்கிய உலகில் பெயர் வாய்ந்தவர்களில் ஒருவரும் ஸ்ரீ அரவிந்தரின் பிரதம சீடர்களில் ஒருவருமாவர்.—பி. கோ.]

அழகின் உட்கருத்தே உண்மை. தன் அகத்தில் ஒன்றாகத் திரண்ட அழகே அவ்வுண்மை.

சம்பூரண வாக்குடைய ஆனந்தமே அழகு. தான் தானே ரமிக்கும் அழகே அன்பு. அழகு பொழியும் ஒளியே அறிவு. அழகு செய்யும் வசீகரமே சக்தி.

உண்மையை அழகில் பதித்து மீண்டும் சிருஷ்டித்தலே கலை யென்பது. ஆனந்தத்துடன் இயங்கும் உண்மையின் ஒயிலே வண்ணம். ஒரு பொருளின் இயற்கையான அம்சமே அப்பொருளின் உண்மையாம். தன் ஒழுக்கத்தைப்பற்றி நிற்கும் ஜீவனே உண்மை. சத்திலிருந்து வருவது சத்தியம்.

உருவத்தை யடைந்த ஆனந்தமே அழகாகும்.

வாக்கில் பூரணமாக வெளிப்பட நாடும் உள்ளக் களிப்பே கவிதையாகும். உள்ளத்தின் விகாஸமே வாக்கு. வாக்கு தன்னறிவின் இயல்பைக் காட்டும். வாக்கின் பரிபக்குவம் ஒருவனது தன்னறிவை அளந்து காட்டும்.

சம்பூரண வாக்கும் உருவமும் பெற்ற ஆத்மானந்தமே அழகு.

எங்கு ஆத்மா வாக்கைப் பெறுதிருக்கிறதோ எங்கு சைதன்யத்தின் வண்ணம் வியக்தமாக வில்லையோ, அங்கே விரூபம் மூர்த்தீகரிக்கிறது. எவர்கள் தங்களுக்கே உண்மையா

யிராமலும், வாய்மை யில்லாமலும், உள்ளம் விகாஸ மடையாமலு மிருக்கின்றனரோ, அவர் களே குரூபிகள்.

இயற்கையா யிருப்பதும் அழகாயிருப்பதும் ஒருவிதத்தில் ஒன்றே எனலாம். கோணலும் விகாரமும் ஒருங்கே யுள்ளன.

அழகு என்பது நிறை, பொருத்தம், லயம், நன்கமைந்த உருவம், இவற்றால் அல்ல.

ஒரு உருவம் அழகாயிருக்க, அலங்கார மாயிருக்க வேண்டுவதில்லை.

வெறும் வடிவழகும் ஒரு சக்திதான்; ஆனல் அது ஆழமற்ற தொரு சக்தியாகும். ஆத்ம விகாஸத்தால் பொலிவுற்ற வடிவத்தில் எல்லா வற்றையும் இயைத்து தீர்க்கமாக ஒன்று படுத்தும் வண்ணம் ஒன்றுள்ளது.

அழகில் அவதரிக்கும் உண்மையே கலை.

கடவுளே எல்லா உண்மைகளுக்கும் மேலான உண்மை, எல்லா அழகுகளுக்கும் மேலான அழகு. கடவுளின் அவதாரமே உயர்கலை யாகும்.

கடவுளை விலக்கின கலை தலையற்ற முண் டமே.

அது அழகின் தாழ்ந்த உறுப்புக்களாலேயே அமைக்கப்பட்டதாகும்.

அதற்குத் திறமை யிருக்கலாம், ஆனல் பெருமை கிடையாது.

அது புலன்களைப் பிரீதி பண்ணலாம், ஆனல் ஆத்மாவைப் பரவசப் படுத்த முடி யாது.

ஓசையும் இசையும் கலையின் முக்கியாம்சம். பகவானே முழு இசையும் சம்பூரண சந்தமும் ஆவார். தெய்வ இசை, சந்தம், இவையின் அம்சமே கலையழகை அளக்கும் அளவு கோலாகும்.

வாழ்க்கைக்கலை விஷயத்திலும் இப்படியே.

எல்லாமே அழகுடையன; ஏனெனில், முற் றும் அழகியவர் எப்பொருளிலும் இருக்கிறார்.

சிருஷ்டி முழுவதிலும் கலைக்கு விஷய மாகாத பொருள் ஒன்றுமே யில்லை.

கடவுள் எங்கும் பிரஸன்னமாயிருக்கிறார்; ஆனல் ஸாராம்சத்தில் மட்டும்தான்.

அணுவிலிருந்து பிரம்மாண்டம் வரையி லுள்ள வியக்தியில் அந்த பிரசன்னம் வேறு பட்டும் விருத்தியடைந்தும் இருக்கின்றது.

பரமன் பக்திமானிடமும் பாபியிடமும், ஞானத்திலும் அஞ்ஞானத்திலும் சமமாகவே வசிக்கிறார். அவர் செயலும், சலனமு மற்ற பிரம்மம் ஆவார்.

பிரம்மம், செயல் சலன முற்று ஞானி யிலும் ஞானத்திலும் உருக்கொண்டு தம்மை வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்.

செயல் புரியும் கடவுளையும், சிருஷ்டிக்கும் சக்திவாய்ந்ததாய் சுபாவத்தில் ஊன்றியுள்ள உணர்வின் ஆனந்தத்தையும், மேன்மேலும் வெளிப்படுத்தி அவதரிக்கச் செய்வதே வாழ் வின் முக்கியமான முயற்சியாகும்.

கலாபிவிருத்தியுங்கூட, கடவுளின் உயரிய அவதாரத்தை நோக்கி மேன்மேலும் விரி வடையும் உணர்வுடனும் மேன்மேலும் ஆழ மாகும் ஆனந்தத்துடனும் திகழும் ஆத்மாவின் அபிவிருத்தியை அளவிடும் சாதனமாயிருப் பதில் தான் இருக்கிறது.

என் நாவினுளான்.

(மாயக்கூத்தன் எழுதியது)

பரம்பரன் மனத்துள்ளான் என்றூர்கள் முதலாழ்வார்கள்; எவருடைய மனத்திலே உள்ளான் என்றல் 'உள்ளுவாருள்ளத்திலே உள்ளான்' என்றூர்கள். 'மற்றையோர் மனமெல்லாம் மனமாகாது, வெறுங் கல்லேயாம்' என்பது தோன்ற, திருமங்கை மன்னர் 'உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே' என்றூர். பரம்பரனை உள்ளாத உள்ளமே இல்லை என்று கொண்ட நம்மாழ்வாரோ, 'மாயன் என் நெஞ்சில் உள்ளான்; மற்றும் யாவர்க்கும் அஃதே' என்றூர். ஆனல் ஆழ்வார்க்கு உள்ளத்திலே மட்டுமன்று பரம்பரன் வீற்றிருப்பது; தன்னுடைய அரிய பெரிய மாயா சக்தியினல் ஆழ்வாரை ஒரு நொடிப்பொழுதும் பிரியாமல், அவரது உயிரிலும் மனத்திலும் வாக்கிலும், பரமபதத்திலே போல வீற்றிருக்கிருன், 'அருமா மாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே ஒரு மாநொடியும் பிரியான் என் ஊழி முதல்வன் ஒருவனே' என்று அவரே விஸ்மிதராகும்படி. இவ்வாறு ஆழ்வாருடைய நாவோடு நாவாய் ஒட்டிக் கொண்டு 'நாளணைந்து ஒன்றும் அகலான் என்னுடைய நாவினுளானே' என்னுமாறு பரம்பரன் இருப்பது ஏன் என்ற வினவிற்கு ஆழ்வார் பாடல்களிலே பல இடங்களில் விடை அமைந்துள்ளது.

'நா வாயில் உண்டே, நமோ நாரணு என்று ஓவாது உரைக்கும் உரை உண்டே' என்பர் பொய்கையாழ்வார். பகவந் நாமத்தை நவில்வதற்கென அமைந்த நாவினல் 'நாராயணு' என்று நவிற்றும் இன்பத்தை எய்தாமல், பாரிலுள்ள பற்றைகளை யெல்லாம் பாடப் புகுந்து பச்சைப்பசும் பொய்கள் பேசுவர் அழுக்கு மானிடச் சாதியர். அவ்வாறின்றி, வாய்கொண்டு மானிடம் பாட இசையாத ஆழ்வாரையும் அவர் தமது சித்தத்தை நோக்கி, 'திருமாலின் சீர்க்கடலுள் பொதிந் திருக்க வாராய்; நாவின் தொடைக்கிளவியுள் பொதிவோம் நற்பூவைப்பூ வீன்ற வண்ணன் புகழ்' என்று காழ்த்து உபதேசிப்பதையும் 'திருமாலவன் கவி யாது கற்றேன்' என்று ஏங்குவதையும் காணச் சகியாத பரம்பரன் அவருடைய நாவிலே புகுந்து நல்லின்கவி பாடுகிருன். இவ்வுண்மையை

1. என்னைத் தன்னுக்கி என்னல் தன்னை
இன்கவிபாடிய ஈசன் என்றும்

2. தன் சொல்லால் தான் தன்னைக்
கீர்த்தித்த மாயன் என்றும்

3. என் நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி
தூமுதல் பத்தர்க்குத் தான் தன்னைச்
சொன்ன அப்பன் என்றும்

4. என்னுகியே
தப்புதலின்றித் தனைக் கவி தான்
சொன்னுன் என்றும்

5. ஏர்விலா என்னைத் தன்னுக்கி என்னல் தன்னை
பார்பரவின் கவிபாடும் பரமரே என்றும்

6. நன்கு வந்து என்னுடனுக்கி என்னல் தன்னை
வன்கவி பாடும் என் வைகுந்த நாதனே என்றும்

7. என்னுக்கி என்னல் தன்னை
வைகுந்தனுகப் புகழ வண்தீங்கவி
செய்பவன் என்றும்

8. ஏர் விலா என்னைத் தன்னுக்கு என்னல் தன்னை
சீர்பெற இன்கவி சொன்னவன் என்றும்

9. என்னைத் தன்னுக்கி என்னல் தன்னை
உறப்பல இன்கவி சொன்னவன் என்றும்.

10. என்னல் தன்னை
பதவிய இன்கவிபாடிய அப்பன் என்றும்

ஒருதரத்திற்குப் பத்துத்தரமாகச் சொல்லுகிருர் ஆழ்வார்.

இவ்வாறு 'மாமாயன் மாயக்கவியாய் வந்து' ஆழ்வாரின் நெஞ்சும் உயிரும் உள் கலந்து நின்று ஆழ்வாரேயாகி 'தென்னாதென' என்று 'பண்ணார் பாடல், இன்கவி'களால் தன்னைத்தான்பாடி, தன்னைத்தானே துதித்து ஆழ்வாருக்கும் பிறருக்கும் கொள்ளக் குறைவிலாக் கவியமுதம் தந்து தளிர்ப்பிக்கிறான். அதனாலேதான் நம்மாழ்வார் தம் திருவாய் மொழிப்பட்டு ஓடும் கவியமுதத்தைத் தொண்டரும் உண்ண உதவி செய்து தாமும் உண்டு, 'பரமபதத்திலே சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்றிருந்தாலும் இக் கவியமுதத்தின் நுகர்ச்சிக்கு ஈடாகாது' என்று கருதுகிறார். தம் நாவிலே எழுகின்ற இன்கவிகளை 'யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்' என்று வீறு பேசுகிறார். 'தேவும் எப்பொருளும் படைக்க' என்று தன் திருவுந்திப் பூவிலே நான்முகனைப் படைத்த மாயத்தைக்காட்டிலும், காக்கும் இயல்பினனாய் ஒரு பொருளும் புறத்தே விடாமல் முழுவதையும் தன்னுள்ளே அடங்கவைத்து ஓராலிலையிலே கிடந்த மாமாயத்தைக் காட்டிலும் பெரியதான பெருமாமாயத்தால் மாயக்கவியாகி, 'என் நா'வை ஒரு நொடிப்பொழுதும் பிரியாதிருந்து 'இருந்தமிழ் நூல் இவை' என்று நானே அதிசயிக்குமாறு அவன் பாடுகிறான் என்பர் ஆழ்வார். 'பாடும் என்நா அவன் பாடல்' என்றும் 'உலகம் படைத்தான் கவி ஆயினேன்' என்றும், 'வானக்கோனைக் கவி சொல்ல வல்லேன்' என்றும் நாவீறு பேசி 'நாவீற'னென்று ஆழ்வார் சிறப்புற்றது எவ்வாறு என்ற வினாவிற்கு ஆதியம்பகவன், 'நாவினுளானாதலின் அவன் இன்னருள் கொண்டே ஆழ்வார் ஆயிரம் இன்தமிழ்பாடினார் என்று விடையளிக்கிறார் மதுரகவி யாழ்வார்.

அதிதியும் அருளும்.

(துகளன் எழுதியது.)

நம் பெரியோரை வழி படுவதற்கு காலம் இடம் பொருள் முதலியவற்றைத் தேடுவதில்லை; பெரியோர்களின் தரிசனம் நம்முடைய பிரயத்தனத்தால் கிட்டுவதன்று; வருந்தி யழைத்தாலும் வாரார் பெரியோர்; அவர்கள் எதிருச்சையாய் வரப்பெற்றால் அன்று அப்பொழுதே அவர்களைப் பூஜிக்க வேண்டும். திதியும் பொழுதும் குறிப்பிட்டு வருகிற பிதரர் முதலியோருக்குச் செய்யும் பூஜையினும் அதிதிக்குச் செய்யும் பூஜையே சிறந்ததாகின்றது.

அதிதிகள் கடவுளுக்கு ஒப்பாவார்கள். கடவுளின் அருளும் அதிதியின் வரவுபோலவே காலம் இடம் பொருள் ஏவல் முதலிய கட்டுக்களுக்கு அடங்காதது; தன்னிச்சைப்படியே வருவது; நாம் எவ்வளவு முயன்றாலும் வருவிக்க இயலாதது.

இவ்வுண்மையை திருநாவுக்கரசு சுவாமிகள் வெகு அழகாக விளக்கியுள்ளது கவனிக்கத் தக்கது. கடவுளைப் புமானாகவும் ஆன்மகோடிகளைப் பெண்டிராகவும் கொண்டு பாடுவது ஒரு முறை. அம்முறையைக் கையாண்டு சிவபிரான் பலி தேர்ந்து திரிவதன் தத்துவத்தை விளக்குகிறார் அப்பர்ஸ்வாமிகள். திருவெண்காட்டிலே கோயில் கொண்டுள்ள விகிர்தனைக்கண்டு ஆனந்த மடைவதற்காக பக்தர்கள் அனைவரும் பெண்மையை மேற்கொள்கிறார்கள். அவ்வாறு சிறந்த பெரியார் நேற்று ஓடு ஒன்றைக் கையிலே ஏந்திக்கொண்டு 'பிச்சையிடு' என்று என் வீட்டு வாசலுக்கு

(133-ம் பக்கம் பார்க்க)

புதுக் கற்பனைகள்.

* தாய் வணக்கம்

(கௌண்டின்யன்)

இனித்த ஜலமும் தித்தித்த பழமும்
தணுத்த தென்றலும் தந்திடும் தாய்
பசுங்கதி ரழகும் நிலவொளி யொழுகும்
பூரித்த இரவினைப் போர்த்திய தாய்

ஒளிர்ந்த தளிரும் மலர்ந்த மலரும்
மலிந்து வளரும் வள முடையாள்
சிரித்த முகமும் சுவைத்த குரலும்
நினைத்த வரமெனக் கீன்றருள்வாள்

அன்னையே, அடிபணிந்தேன்—சுகம் தரும்
உன்னையே அடிபணிந்தேன்.

முப்பது கோடி தொண்டையிலே
முட்டிக்கிளம்புதுன் கோலாகலம்
அறுபதுகோடி தோள்தட்டு முன்
ஆண்மை யிகழ்வரோ மாநிலத்தார்

* வங்காளத்தில் பேராசிரியர் பங்கிம் சந்த்ர சட்டோபாத்தியாயரால் அமைக்கப்பட்டு உலக ப்ரஸித்தி பெற்ற 'வந்தே மாதரம்' கீதத்தைத் தழுவி எழுதப்பட்டது.

அறுப்பவளே—பகை
தகர்ப்பவளே—பண்ட
பெருத்தவளே—ஐயம்
தரித்தவளே—எங்கள்
அன்னையே!

வித்தையும் நீயே, விளையும்
சிரத்தையும் நீயே,
உள்ளமும் நீயே, அதன்
உண்மையும் நீயே,
உடலிலே உயிரும்
கரத்திலே வலியும்
உள்ளத்திலே யூறும்
பக்தி ப்ரவாஹமும்
நீ யன்றி வேறில்லையே!

பல பதுமை வாயிலாய்
மந்திர மொவ்வொன்றிலும்
வழி பட்டோ மனுதினமும்
உன்னையே—எங்கள் இறை
அன்னையே!

தசவித ஆயுதமேந்திய சிவசக்தி
தாமரைத் தளந்தனில் கேளிக்கும் ஹரிஸதி
தெள்ளிய வாக்தரும் தேவி ஸரஸ்வதி
மூவரும் நீயென்று கண்டேன்
நித்தமுன் பேரருள் விண்டேன்.

மாசற்றவள் — கோதை
நிகரற்றவள் — நல்ல
தண்ணுற்றவள் — மிக்கப்
பண்புற்றவள் — எங்கள்
அன்னை.

பச்சைத் திரு மேனி
பணிவோர்க் கிரங்குவாய்
புன்னகை பூத்தவளே!
பொறுத்திடும் மேதினி!
பக்தரைத் தாங்குவாய்!
பேரணி பூண்டவளே!

அன்னையே, அடிபணிந்தேன்.
இதம் தரும் உன்னையே அடிபணிந்தேன்.

பாரதமாதா துதி

V. முத்துஸாமி ஐயர், M.A., L.T.,

(கும்மி மெட்டு)

1. ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம்.

2. கண்டங்களெங்கும் காணும் நற்காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம்.

3. நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர் சாரும் சிற்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம்.

4. மன்னனைத் தெய்வமாக் குடிகளும், மன்னவன்
மன்னுயிர் தன்னுயிர் ஆகவுமே
மதித்து வரும் பெருமாண்புசேர் இந்திய
மாதா! உனக்கு நமஸ்காரம்.

5. ஞால மெங்கும் வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம்.

வ ர ம்

ஒரு சிறு நாடகம்

(கே. சுவாமிநாதன் எழுதியது)

காட்சி 1

[மாம்பலத்தில் ஒரு வீட்டில் முன் அறை. மூன்று நாற்காலிகளில் ருக்மணி அம்மாளும், அவள் புருஷன் ராகவ அய்யரும், அவர்கள் மகன் பாலகிருஷ்ணனும் உட்கார்ந்திருக்கிறார்கள். அகராதி சகிதமாய், தகப்பனும் பிள்ளையும் குறுக்கெழுத்துப் போட்டிப் பத்தியம் பூர்த்தி செய்கிறார்கள்.]

பாலு:—ஆம். குறுக்கே 'கேவலம்' தான் அப்பா; 'கேடயம்' இல்லை. அகராதியை வேண்டுமானால் பாருங்கள்.

ருக்:—அகராதியைப் பார்ப்பானேன்? பாலு சொன்னால் சரியாய்த்தான் இருக்கும்.

ராகவ:—அதென்ன, ஒரே போடாய்ப் போட்டு விட்டாயே? பாலு என்னைவிட ரொம்பப் புத்திசாலி என்று முடிவு செய்து விட்டாயோ?

ருக்:—அந்த முடிவு நான் செய்ததில்லை. பத்திரிகை ஆசிரியர்தான் ஒரு முறைக்கு இருமுறையாய்ச் செய்து விட்டார். நீங்களும் தான் ஐந்து வருஷமாய், நூற்றுக் கணக்காய், போட்டிகளுக்கு விடை அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். காலணா பரிசு வந்தது கிடையாது. அவன் நாலு அனுப்பியதில் இரண்டுக்குப் பரிசு கொடுத்து விட்டார்கள். பாலு புத்திசாலி என்பதில் சந்தேகமென்ன?

ராகவ:—போதும், போதும். வாயை மூடு! மகாப்பெரிய பரிசு வாங்கி விட்டான், உன் பிள்ளை! இருபதும் முப்பதும் வாரி இறைத்து, இரண்டும் மூன்றும் வாங்கி விட்டானே!

ருக்:—கோபம் எதற்காக? நமது குழந்தை நம்மை மிஞ்சினால் நமக்குத்தானே பெருமை?

ராகவ:—போதும், உன் உபதேசத்தை நிறுத்து.

ருக்:—என் உபதேசத்தில் ஒன்றும் பழுதில்லை. எல்லாம் நான் சொல்லுகிறபடி நடந்தால் ஒரு கஷ்டமும் வராது. திருவல்லிக்கேணி மாடவீதியில் அழகாக ஒரு வீடு வாங்குங்கள் என்று அடித்துக் கொண்டேன்.

ராகவ:—ஐயையோ! ஆரம்பித்து விட்டாயா பழங்கதையை! உண்மையிலே உனக்காகத்தானே மாம்பலத்திலே வீடு வாங்கினேன்; உன் தம்பி வீட்டுக்கிட்டே.

ருக்:—ஆமாம். கேசவன் வீட்டுக்கும் நமது வீட்டுக்குந்தான் ஒரு மைல் தூரம் இருக்கிறதே! இரண்டு வீடும் மாம்பலம் என்றால் என்ன? அது ஒரு மூலை, இது ஒரு மூலை. அதுவும் எந்த வேளையில் வீடு வாங்கினேனோ? நாம் குடிவருவதற்கு முன் கேசவனுக்கு வேலை மாற்றி பெஜவாடாவுக்கு அப்பால் எங்கேயோ பூரியாம் — அந்தப் பூரிக்குப் போய்விட்டான்.

ராகவ:—எங்கே போனால் என்ன? நாள் தவறினாலும் அவனிடமிருந்து அருமை அக்காளுக்குக் கடிதம் வரத் தவறாது. உன் பிள்ளையும் நீயுமாய்ச் சேர்ந்து கொண்டு கேசவன் பெண்ணுக்குத்தான் பாலு தாலி கட்டவேண்டும் என்கிறீர்கள்.

ருக்:—ஏன்? உங்கள் தங்கையிடமிருந்து உங்களுக்கும் தினம் கடிதம் வந்து கொண்டு தானிருக்கிறது. அவள் பெண்ணைத்தான் பாலு கட்டிக்கொள்ள வேண்டுமென்று நீங்களும் விடாமல் சொல்லுகிறீர்கள்.

[பத்திரிகைப் போட்டியிலிருந்து தலையைத் தூக்கி.]

பாலு:—அம்மா, அம்மா, முடித்து விட்டேன். இந்தப் பரிசும் நிச்சயமாய் எனக்கே வரும். நாலே நாலு வார்த்தைகள் தான் சந்தேகம். பத்து விடையனுப்பினால் இரண்டுக்காவது பரிசு நிச்சயம்.

தியாகய்யர் அவர்களின் ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள்.

(பிரம்மஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள்)

பல்லவி

ஸ்ரீ நாரத! நாத ஸரஸீருஹ ப்ருங்க!
சுபாங்க!

அனுபல்லவி

தீனமானரக்ஷக! ஜகதீச! பேசஸங்காச!

சரணம்

வேதஜனித! வரவீணாவாதன தத்வஜ்ஞ!
கேதகரத்ரிதாபரஹித! கேசரவினுத!
யாதவகுலஜாப்த ஸதா மோத ஹ்ருதய!
முனிவர்ய!
ஸ்ரீத! த்யாகராஜனுத ஸ்ரீகர! மாம்பாலய.

ஸ்ரீநாரத—ஏ நாரதஸ்வாமி !

நாதஸரஸீருஹ ப்ருங்க—நாதமாகிற தாமரை புஷ்பத்திலிருக்கும் வண்டு போன்றவரே !

சுபாங்க—வெண்ணிறமுடைய அழகிய சரீரமுடையவரே !

தீனமானரக்ஷக—எளியவரின் மானத்தை காத்தருளுபவரே!

ஜகதீச—உலகத்திற்கதிபதியானவரே!

பேசஸங்காச—சந்திரனைப் போல் பிரகாசிப்பவரே!

வேதஜனித வரவீணா வாதன தத்வஜ்ஞ—வேதத்தினின்றும் உதித்த ச்ரேஷ்டமான வீணையை வாசிப்பதின் மர்மம் அறிந்தவரே!

கேதகர த்ரிதாப ரஹித—துக்கத்தை தருகின்ற ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களாகிற மூவகைத் தாபங்களால் தாக்கப்படாதவரே!

கேசரவினுத—தேவர்களால் புகழப்பட்டவரே!

யாதவகுலஜாப்த ஸதாமோதஹ்ருதய—யாதவகுலத்துதித்த ஸ்ரீகிருஷ்ணபகவானால் அடையப்பட்டு என்றும் ஆனந்த பரிதமான ஹ்ருதயத்தை யுடையவரே!

முனிவர்ய—மஹர்ஷி ச்ரேஷ்டரே!

ஸ்ரீத—மங்களத்தை கொடுப்பரே !

த்யாகராஜனுத ஸ்ரீகர—தியாகராஜனால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு அவனுக்கு க்ஷேமத்தை யளிப்பவரே !

மாம்—என்னை பாலய—ரட்சிப்பீராக.

உத்யோகத்தில் உயரவோ, வியாஜ்ஜியத்தில் வெற்றி பெறவோ, எலக்ஷனில் ஜெயிக்கவோ, வியாதி குணமாகவோ, பந்தயங்களில் பரிசு பெறவோ, எதிர்பாராத வகையில் பணங்கள் வந்து குவியவோ—அது அதற்குத் தக்கவாறு முழு பலத்துடன் ரக்ஷைகள், கவசங்கள், தெவுடுகள், தாயத்துக்கள், சக்கரங்கள், நேராக சித்தர்களிடமிருந்து வரவழைத்து வியாபாரம் செய்கிறேன். சக்தி சற்றும் குன்றினுல், பலன் இல்லாவிட்டால், கொடுத்த பணம் வாபீஸ்.

பாலு :—இது நல்ல யுக்தி, அப்பா! இது ஒன்று வாங்கிப் போட்டால் போட்டிப் பந்தயங்களில் ஆயிரக்கணக்காய்ப் பரிசு பெறுவது சுலபமாகிவிடும்.

ராகவ :—இந்த உருப்படிகளில் எதை வாங்கி என்ன செய்தால் பலன் கிடைக்கும்?

சாமி :—உங்களுடைய மனோரதம் எதுவாயிருந்தாலும் அது சீக்கிரம் நிறைவேறுவதற்குத் தகுந்தவழி சொல்லுகிறேன். உங்களுக்கென்னவேண்டும் இப்போது? கேஸ் ஏதேனும் ஜெயிக்க வேண்டுமா? விரோதிகள் யாரேனும் நாசமாய்ப் போகவேண்டுமா? வேலை காயமாக வேண்டுமா? சொந்த வீடு ஒன்று வேண்டுமா? என்ன வேண்டும்?

ராகவ :—இதெல்லாம் எனக்கு ஒன்றும் வேண்டாம்.

பாலு :—ஏனப்பா, அப்படிச் சொல்லுகிறாய்? நமக்குத்தான் கடன் தீர்க்க இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமே!

ருக் :—ஆமாம் வெகு அழகாயிருக்கிறது. இந்தக் கலியுகத்தில் ரக்ஷையாலும் கவசத்தாலும் பைபையாய் ரூபாய் வந்து குதிக்கப் போகிறதாக்கும்!

சாமி :—என்ன அம்மா இப்படிச் சொல்லிவிட்டீர்களே! இதோ பாருங்கள், இது ஒரு நாகச்சக்கரம். இதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு, ஒரு நிமிஷம் தியானம் செய்து, வேண்டுமென்ற வரத்தைக் கேளுங்கள். அறுபது நாழிகைக்குள் உங்கள் மனோரதம் கைகூடாவிட்டால் அதன் விலையை எனக்குக் கொடுக்க வேண்டாம்; இந்த வியாபாரத்தையும் நான் விட்டுவிடுகிறேன்.

ருக் :—இந்தச் சக்கரத்தின் விலை என்ன?

சாமி :—இப்பொழுதே என்னை நம்பி வாங்கிக் கொண்டால் ஒரு ரூபாய். அப்புறம் வந்து பலனளித்த பிறகு வாங்குவதென்றால் விலை ஏழு ரூபாய். உங்கள் இஷ்டம் போலச் செய்யவும்.

பாலு :—அம்மா, அம்மா, ஒரு ரூபாய் கொடுத்து ஆறு ரூபாய் லாபம் பண்ணி விடலாம்.

[ராகவன் ஒரு ரூபாய் கொடுக்க, சாமி மற்ற கவசங்களைப் பையில் போட்டுக் கொண்டு வெளியே புறப்படுகிறான்.]

சாமி :—நான் போய் வருகிறேன். உங்கள் சிநேகிதர்களிடமும் சிபார்சு செய்ய வேண்டும். ஞாபகம் இருக்கட்டும்: சக்கரத்தைச்சுற்றி, இருகைகளையும் குவித்து, கிழக்கே பார்த்து நின்று, தியானம் செய்து, வேண்டிய வரம் கேளுங்கள்.

[போகிறான்]

ருக் :—இது என்ன பைத்தியம்! இப்படி வள்ளிசாய் முழு ரூபாயைத் தூக்கிக் கொடுப்பார்களோ ஒரு செப்புத் தகட்டுக்காக?

ராகவ :—நன்றாய்ச் சொன்னாய்! இதுவா செப்புத்தகடு?

பாலு :—இல்லை, இல்லை. நாகச்சக்கரமன்றோ இது?

ராகவ :—ஆம். கேட்ட வரங்கொடுக்கும். இனிமேல் நமக்கு ஒரு குறைவுமில்லை.

பாலு :—ஏனப்பா, அப்படியானால் இப்பொழுதே வரங்கேட்டு வாங்கிவிடுவதுதானே? அந்த ரூபாய் இரண்டாயிரத்தையும் பார்க்க எனக்கு ஆசையாயிருக்கிறது.

ருக் :—இது என்னடா விளையாட்டா? தகப்பனும் பிள்ளையும் இவ்வளவு சுலபமாய்ப் பணம் சம்பாதிக்கப் பார்க்கிறீர்களே! இந்தக்

காலத்தில் வரமேது, சாபமேது? போன ரூபாய் போகட்டும். வேறே பணத்தின்மேல் ஆசை வேண்டாம்.

பாலு:—அப்பா, எனக்கு மில்லுக்குப் போக நேரமாச்சு. நான் போகட்டுமா?

ராகவ:—சரி, நீ போய்விட்டுவா. நீ போன பிறகு நான் ஸ்நானம் செய்து விட்டு பயபக்தியாய் வரத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[பாலு போகிறான், திரை விழுகிறது]

காட்சி 2.

[இரண்டு மணி நேரம் ஆனபிறகு, ராகவனும் ருக்மணி அம்மாளும் உட்கார்ந்திருக்கிறார்கள்]

ருக்—நீங்கள் செய்வது ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. இந்தப் பூஜை, தியானம் எல்லாம் நமக்கு அடுக்காது.

ராகவ:—பூஜை செய்தபோது நாகசக்கரம் உயிர்பெற்ற மாதிரி கையில் சுழன்றது. நிச்சயம் நினைத்தது கைகூடும்.

[தபாற்காரன் வெளியே கதவைத்தட்டி "ஐயா, ஐயா" என்கிறான். ராகவன் வெளியேபோய் இரு கடிதங்களுடன் திரும்பி வருகிறார். இரண்டிலும் மூலையில் மஞ்சள் தடவியிருக்கிறது. ஒன்றை ருக்மணியிடம் வீசி எறிந்து விட்டு, ஒன்றைத் தான் படிக்கிறார்.]

ராகவ:—பார்த்தாயா! கைமேல் பலன் வந்து விட்டது. என் தங்கை எழுதியிருக்கிறாள், 2000 ரூபாய் ரொக்கம் கொடுத்து விடுகிறாளாம். 'சீக்கிரத்தில் கல்யாணத்தை முடித்து விடுங்கள்' என்கிறாள்.

ருக்:—இதில் புதிது ஒன்றையும் காணோமே. இந்தப் பல்லவிதான் ஆறுமாதமாய்ப் பாடிக் கொண்டு வருகிறாளே! என் தம்பி கேசவன் எழுதி யிருக்கிறான், பாவம், மிகவும் கஷ்டப் பட்டுச் சேர்த்து விட்டதாயும், ரூபாய் இரண்டாயிரத்தையும் கொடுக்கத் தயாரா யிருப்பதாயும். சீக்கிரத்தில் கலியாணத்தை முடிக்க வேண்டு மென்று எழுதுகிறான். பெண்ணை மணந்து கொள்வதில் தடை ஒன்றும் இல்லையே?

ராகவ:—அப்பாடா, தாயும் பிள்ளையும் ஜெயித்து விட்டீர்களா! போகட்டும். வியாபாரி வார்த்தை பொய்யாக வில்லை. உன் தம்பியிடமிருந்துகூட பணம் பெயருவதானால் சக்கரத்தின் மகிமையே மகிமை!

[வெளியில் மோட்டார் ஹார்ன் சத்தம் கேட்கிறது. மோட்டார் கதவு திறந்து மூடப்படுகிறது. நீளச் சட்டை, தலைப்பாகையுடன் சாம்பசிவ முதலியார் உள்ளே நுழைகிறார்.]

சாம்ப:—ஐயா, நான் ஜின்னி மில் ஆபீஸ் மானேஜர்.

ராகவ:—சொல்ல வேண்டுமா என்ன? எனக்குத் தெரியுமே நன்றாய் உங்களை. பாலகிருஷ்ணனுக்கு ரொம்ப வேண்டு மென்கிறவராச்சே. துரையின் மோட்டார் காரைப் போட்டு அடிக்கிறாப்போலிருக்கிறதே, என்ன விசேஷமோ?

சாம்ப:—உங்களிடத்தில் தான் பேச வேண்டும் என்று வந்தேன். துரை அனுப்பினார்.

ராகவ:—துரையா அனுப்பினர்? எதற்காக?

சாம்ப:—பாலுவைப் பற்றி—

ராகவ:—பாலுவைப்பற்றி என்ன ஐயா?

சாம்ப:—இன்று சற்று நேரத்துக்கு முன் — மில்லில் — ஒரு விபத்து — நடந்து விட்டது. ஏதோ ஒரு சக்கரமாம் — அதைப் பற்றிப் பேசிக் கொண்டு — பாலகிருஷ்ணன் — கொஞ்சம் — அஜாக்கிரதையா யிருந்து விட்டான். — —

ராகவ:— ஐயையோ! அப்புறம்......?

சாம்ப:—பாலு சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்.

[கதவுக்குப் பின்னாலிருந்து கதறுகிறாள்.]

ருக் :—ஐயோ, பானு!

ராகவ :—ஆமாம், ஐயா, குழந்தை இப்போது எங்கே யிருக்கிறான், எப்படி யிருக்கிறான்?

சாம்ப :—இறந்து விட்டான்.

ராகவ, ருக் :—ஐயையோ. பானு, பானு, மோசம் பண்ணி விட்டாயே!

சாம்ப :—என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு வேறோரிடத்தில் வேலை யிருக்கிறது. துரை உங்களிடத்தில் ஒன்று மட்டும் சொல்லச் சொன்னார். சட்டரீதியாய் இந்த விபத்துக்காக மில் முதலாளிகள் நஷ்ட ஈடு கொடுக்கக் கட்டுப்பட்டவர்களல்லர். ஆயினும் அவர்களாக மனமிரங்கி பால கிருஷ்ணன் குடும்பத்தாருக்குப் பரிதாபக் கொடையாக ஒரு தொகை கொடுப்பதாகச் சொன்னார்.

ராகவ :—(ஒன்றும் விளங்காமல்) தொகையாவது கொடையாவது! என்ன அது?

சாம்ப :—ரூபாய் இரண்டாயிரம்.

[திரை விழுகிறது.

(W. W. Jacobs, கதையைத் தழுவி எழுதியது.)

தசரதன் விலாபம்

(பார்க்கவன் எழுதியது)

நெடுங்காலம் தவம் கிடந்து உன்னைப் பெற்றேன். நெடுங்காலம் உலகாண்டு அயர்ந்த நான், என்னினும் பூமியை இனிது பாலிப்பாய் எனத் தேர்ந்து, உனக்கு முடி சூட்டி, உன் திருமணக் கோலத்தைக் கண்ட கண்களால் உன் திருமஞ்சனக் கோலத்தையும் கண்டு, பின்பு வனமேகி வானப்ரஸ்தம் கைக்கொள்ள எண்ணினேன். விரதோபவாஸங்களை முடித்து அபிஷேக வித்தனான நீ, மங்களோத்ஸவத்தை அறிந்தால் கௌஸல்யையினும் பெரிதும் மகிழ்வாள் கைகேயி என்று எண்ணினவனாய், நீயே அவளுக்கு நற்செய்தியைத் தெரிவிக்க, விசித்ர அலங்காரங்களால் சோபிக்கும் நகரத்தையும், உனக்கென்று அமைத்த ரத்ன கசிதமான ஸிம்ஹாஸனத்தையும், குதூகலித்த மித்திரவர்க்கத்தையும், விளையாட்டிலும் உன் அபிஷேகத்தை அபிநயிக்கும் சிறுவர் கூட்டங்களையும் கவனியாதவனாய், கைகேயிமுன் சென்றாய். அவளோ, கண்டார் கண்ணையும் கருத்தையும் கவரும் உன்னை, மனிதர் புகாத, நெடுங்கானம் படரப் போ என்றாள், என் ராமாவோ! வனம் புகத் தக்க என்னை விடுத்து, நடந்தறியாத உன்னை, தேரொழிந்து, மாவொழிந்து, களிறொழிந்து நடந்து கானேகுக என்றாள், என்றாள்! நாடு, நகரம், கோயில், மெல்லணை, சந்தனக் குழம்பு, சாமரம் எல்லாவற்றையும் துறந்து, படாதன பட்டு, நிர்மானுஷ்யமான, நெடுங்கானம் படரப்போ என்றாள், என் ராமாவோ! வனத்தை அரசினும் பெரிய பரிசாக ஏற்ற உன் மிருதுவான தேஹத்தில், உயர்ந்த மெல்லிய பீதாம்பரத்தை நீத்து முள்ளெனத் தைக்கும் மரவுரியைப் பூண்டு, நறுமணங் கமழும் உன் நீலக் குஞ்சியைச் சடையிட்டு, மண்வெட்டியும் கோடரியும் கையில் தாங்கிய உன் கோலத்தைக் கண்டும் சாகாத என்னை, ராக்ஷஸரினும் க்ரூரனான என்னை, வரித்தாயே உன் பிதாவாக, ஓ! புருஷோத்தமா! என்னைக் காட்டிலும் வனத்திலுள்ள புலி கரடி சிங்கங்கள் சாதுக்கள் என மதித்து, அன்று மைதிலியுடன் நகரப் பிரவேசம் செய்த நீ, இன்று வனப் பிரவேசம் செய்தனையோ? பாராளும் செல்வத்தைப் பரத தம்பிக்குக் கொடுத்து மகிழ இவளன்றோ

காரணம் என்று கைகேயி சொற்கொண்டு களித்தவனே! கூசாமல் உன்னை வனம் புகுத்தி அரசடைந்த அக் கைகேயியின் மகிழ்ச்சி, உன் இன்பத்தினும் பெரிதாயிருந்தது. பூமியைப் பாலிப்பதற்கென்றே உன் திருமஞ்சனத்தைக் கோரிய நான், நன்றாக மாநிலத்தை ஆள்வித்தேன், என் மகனே!

அஸ்த்ர சஸ்த்ரங்களை விச்வாமித்ரரிடம் அப்யஸித்த நீ, மரவுரி உடுக்கவும் காட்டில் பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து கல் அணையில் கண் துயிலவும், நடந்து நடந்து நெடுங் கானம் கடக்கவும், என்னை வகை வகையாக வதைக்கவும் அப்யஸித்தனையோ! அநாதையைப்போல் காட்டில் திரியும் லோக நாதா! செம்புழுதியையும் காட்டருவியின் செந்நீரையும் உனக்குகந்த செஞ்சந்தனமாகக் கொண்டனையோ? மைதிலியும், முள்தைத்துப் பிரவாஹமிடும் தன் மெல்லடிக்குருதியை செம்பஞ்சுக் குழம்பாகக் கொண்டனளோ?

அறநூல், நீதிநூல் வல்ல வஸிஷ்டரே! ஸுமந்திரரே! மஹாபாபியான கைகேயி சொல்ல அவளைவிடப் பெரிய பாபியான நான் கேட்க, நான் வனம் போவதற்குப்பதிலாக அவன் போவதைப் பார்த்தும், தடுக்காமல், பேசாமல் இருக்கிறீர்களே! தூமறையீர்! இது தருமம் தானே? நெடுங்கானம் படரப் போவென்றாள், என் ராமாவோ!'

என்று பத்து திக்குகளிலுள்ளோரையும் ஜயித்த அதிபராக்ரமசாலியான தசரதன் கையுயர்த்தி அந் நெடுங்கானம் அன்றியும், தன் ஆயுளினும் நீண்ட பதினாலு வருஷங்களன்றியும் கால முள்ளளவும் ஏழு லோகங்களிலும் கேட்குமாறு 'ராமாவோ' என்று நெடுங்குரலிட்டுப் புலம்பினான்.

பின்னும் 'ஜனகன் மடக் கொடிமேல் அக்கைகேயி மரவுரி இட்ட பெரும்பழியைக் கண்டும் கண் அழியாத இழிதகையேன் நான். நீ போகுங்கால் எழுந்த புழுதிப்படலத்தைக் கண்டேன். பின் சென்ற யானை குதிரைகளின் அடிச்சுவடுகளைக் கண்டேன். உன் திருமணத்துக்கும் முனிவருடன் அனுப்பச் சம்மதியாத நான், என்னை விட்டு கணப்பொழுது பிரிந்தாலும் சகியாமல் ஸுமந்திரனை விட்டு அழைப்பித்துக்கண்ணெதிரே எப்போதும் நிறுத்திக் கொண்டிருந்த உன்னை, இப்போது காணேன், காணேன்! உன்னை, இப்போது காணும் வனசரர்களும், இனி திரும்புங்கால் காண இருக்கும் இவர்களுமே பாக்கியசாலிகள். துணைவா! துணைவா! தோன்றாய்! தோன்றாய்! தேவி கௌஸல்யே! ராமனுடன் என் திருஷ்டியையும் இழந்தேன். கைகேயியைக் காணும்போது இருந்த கண், இப்போது உன்னைக் காண இல்லாது ஒழிந்தது. அத்தோளழகன் வருமோ, வருமோ? கண்ணுடன் எல்லா இந்திரியங்களும் மங்குகின்றன. ஸ்பரிசம் மட்டுமே உளது. ராமமாதாவே! லோகநாதனைப் பெற்றெடுத்துத் தீண்டியனுபவித்த உன் திருக்கைகளால், தீண்டத் தகாத இக்கடையேனையும் தீண்டுவாய்' என்றான்.

தேவி கௌஸல்யை அரசனைத் தன் மெல்லிய கரங்களால் அணைத்தாள். ராமன் கானகம் புகுவதற்கு முன்னேயே, அரசன் வானகம் புகுந்தான்.

இட்லியின் திக்விஜயம்.

(வைதஹவ்யன் எழுதியது)

அன்று எங்கள் வீட்டு வாசலில் திண்ணையில் தூங்கியிருந்தேன். திண்ணை என்றால் எனக்குப் பரம இஷ்டம்; திண்ணை தூங்குவதோ கரும்புதான். வெள்ளைக்காரன் முப்பது தளமுள்ள 'ஸ்கை—ஸ்க்ரேபர்'களையும், ஆகாயத்தை எட்டும் 'லைட்—ஹவுஸ்'களையும் வெகு லகுவாய்ச் செய்து விடுகிறான். ஆனால் அவன் திண்ணை அருகில் கூட இன்னும் வரவில்லை. திண்ணை எந்ததினுசாக இருந்தாலும், முதுகு வளைவுக்கும், திண்ணைச் சாய்வுக்கும் பொருத்தமில்லாத திண்ணையே தமிழ் நாட்டில் இராது என்று சொல்லி விடலாம். 'ஈஸி சேரை'யும், 'ஸோபா'வையும் குப்பையில் தள்ளுங்கள், ஸார்! நமது கல்வியே திண்ணையில்தானே ஆரம்பித்தது. காலைமாட்டிக்கொள்ள ஒரு கொக்கியோ, கம்பியோ, கயிறோ இருந்தால் திண்ணைக்குச் சமானமான படுக்கை எது? எந்த மஹானுபாவன் இதை முதல் முதல் ஏற்படுத்தினானோ, அவன் ஞாபகார்த்தமாக, ஸநாதன தர்மம்போல நமக்குத் திண்ணை தூங்கும் தர்மமும், ஸ்வபாவமாகவும், அநாதியாகவும் ஏற்பட்டுள்ளது. வெள்ளைக்காரனுக்கு சிங்கம் அடையாளம்; ரஷியாக் காரனுக்குக் கரடி; சாயபுவுக்குப் புலி; தேவாங்கை நமக்கு அடையாளமாகக் கொள்ளலாம். திண்ணை இல்லாமலே, நாம் திண்ணையில் பண்ணுவதை அது பண்ணுகிறது.

இதிலிருந்து நான் சோம்பேறி என்றாவது, சாதாரண மனிதன் என்றாவது எண்ண வேண்டாம். திண்ணையை உத்தேசித்து எல்லா வித்வான்களும் என் வீட்டில் தான் இறங்குவது. கம்பளிவாலா என்ற வடதேசத்துக் கோடீச்வரன், பொடியில்லாமல் மூக்கோட்டை அடைத்துப்போய், வெறும் பட்டையை என்னிடம் கடன் வாங்கினவன் இன்னும் திருப்பிக் கொடுக்கவேயில்லை. என். நண்பர்களுள், கோடீச்வரர்கள் தான் அதிகம்.

அப்போது ஒரு தந்தி வந்தது. தந்தியென்றால் எனக்கு மிகப் பிரியம். லெட்டர் ஒரு பெருங்காவியம். கார்டு, சிறு காவியம். தந்தியோ ஒரு கண்ணி மாதிரி. வைக்கோல் வழியாக உறிஞ்சப்படும் 'விம்டோ'வைப்போல துளித்துளியாய் அனுபவிக்கத் தக்கது. தந்தியின் அடியில் 'கம்பளிவாலா' என்று கையெழுத்திருந்தது. மேலே "பெரிய கல்லுரல்—பெரிய இட்லிப்பானை—இட்லி கொழக்கட்டை பண்ணத் தெரிந்த ஆள்—'ஏர்மெயி'லில் அனுப்பவும்" என்று இருந்தது. கல்லுரலையும், இட்லிப் பானையையும், 'ஏர் மெயி'லில் அனுப்ப வேண்டியிருந்தால், அதற்குத் தந்தி அடிக்காமல் லெட்டர் எழுதுவது பொருந்துமா? என்னையறியாமலே சந்தோஷம் மேலிட்டு, ஆநந்த பாஷ்பம் வடிக்கலானேன். ஏன் என்றால், நம்மை இவ்வளவு பேருமாகச் சேர்ந்து இளப்பம் செய்து வருகிறார்கள். இந்த மலைவிழுங்கி வடக்கு தேசத்துப் பேர்வழிகளுக்கு நாம் அப்பளம்போல இருக்கிறோம். நமது கோமட்டியின் புளுகெல்லாம் நம்மிடம் தான் பலிக்கிறதே யொழிய, அவன் மார்வாடியிடம் அகப்பட்டுக் கொண்டால் தவி தவி என்று தவிக்கிறான். வட்டிப்புலிகளான நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சாயம் மூல்தானி வந்தவுடன் வெளுத்து விட்டது; வியாபாரத்தில் சூரனான நமது 'அவுதுர்மா'வை ஸூராத்து சாயபு ஒரே விழுங்காய் விழுங்கி விடுகிறான். நமது அவமானமோ பொறுக்க முடிய வில்லை. இந்த சமயத்தில் தமிழ்நாட்டு இட்லியும் கொழுக்கட்டையும் உத்தர தேசத்துப் பிரபுவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன என்றால், எவ்வளவு ஆறுதலான விஷயம்! மஹாப்பிரபோ! கம்பளிவாலா! ஆதியில் இந்த இட்லி கொழுக்கட்டைகளைக் கற்பித்த மஹா புருஷனுடைய யோக்கியதையையும், நமது சமூஹ ஒற்றுமையையும் ஏககாலத்தில் காட்டிய சதுர்மூர்த்திகளுள் 'அத்திரிமாகு' சாயபு ஒருவன்; நீ ஒருவன்; கோதண்ட ராமய்யன் ஒருவன்; அந்த பேரில்லாத மராட்டியன் ஒருவன்.

கோதண்டராமையன் யார் என்றால்,

'கோபாலனாத்திலே கொழுக்கட்டை
பண்ணினாள்
கோதண்ட ராமையன் திருடி விட்டான்'

என்ற பத்யத்தின் நாயகன். கிருஷ்ணன் வெண்ணெய் திருடினன்; கோதண்ட ராமை யன் கொழுக்கட்டை திருடினன். ஆநந்த பைரவி ராகத்தின் மூர்ச்சனைகளை யெல்லாம் 'கொழுக்கட்டை' என்ற இடத்திலேயும், நவ ரஸங்களையும் 'திருடி விட்டான்' என்ற இடத் திலும் பார்க்க வேண்டும், எங்கள் மாமா பாடும்போது.

மராட்டியன் யார் என்றால்: பம்பாயில் ஒரு தமிழ் ஐயர், ஹோட்டல் வைத்து, தினம் தயாராகும் உண்டிவகை களைச் சுவரில் கரியில் எழுதி வந்தார். அங்கே ஒரு பக்தன்—மஹாராஷ்டிர தேசத் தில் ஜனித்தவன்—பக்தர்களுக்குப் பிறப்பி டம் மஹாராஷ்டிரமல்லவா?—பிரதி தினமும் தலையில் பாகை அணிந்தவனாய், வருவதுண்டு. அவனுக்குத் தமிழ்ப் பாஷை தெரியாது; இருந்தாலும் பக்தியின் அதிசயத்தால் தன் குடைக் காம்பைக் கொண்டு சுவரில் 'இட்லி' என்று எழுதப்பட்டிருக்கும் வரியைத் தவறா மல் குத்துவான்; அது ஆனபிறகு 'கொழுக் கட்டை'யைக் குத்துவான். இப்படிப் பல காலம் ஆராதித்து வந்தான். திடீரென்று அவனுக்கு ஞாபக மறதி ஏற்பட்டு விட்டது. ஆனால் எது மறந்தாலும் பக்தி அதிசயத்தால் இட்லி கொழுக்கட்டைகள் எழுதப்பட்ட இடங்களைமட்டும் மறக்கவே யில்லை. அவ னுக்குத் தெரியும் அவைகளின் அருமை.

இட்லி கொழுக்கட்டைகளின் புராணத்தை விசாரித்தால், அவை அனாதி என்று ஏற்படு கிறது. மோஹஞ்சதாரோ ஹராப்பா முத லிய ஊர்களிலிருந்த பேர்வழிகளும், அவர் கள் முன்னோர்களும், இவற்றின் பக்தர்கள் என்று தெரிகிறது. பிள்ளையார் அங்கேதான் முதல் முதல் இவைகளை ருசிபார்த்தார்போல இருக்கிறது. தெலுங்கர்களையே தமிழ் இட்லி ஜயித்து விட்ட தென்றால், அதன் பெருமைக்கு வேறு சாக்ஷி ஏன்? கதரைப் போலவும், ஹிந்தியைப் போலவும் இட்லி பாரத தேசம் பூராவும், திக்விஜயம் செய்து வருகிறது. தற்சமயம் இங்கு தோன்றி யுள்ள 'ஹிந்தி எதிர்ப்பு' இயக்கத்தைவிட மிக மும்முரமாக வடதேசத்தில் 'இட்லி யின் வழிபாடு' இயக்கம் நடந்து வருகிறது. இதைத் தடுப்பவர் யார்?

தந்தியில் ஆரம்பித்து வெகு தூரம் திண்ணை தூங்கிவிட்டேன். அப்போது என் தர்மபத்தினி 'ராத்திரிக்கு என்ன பலஹாரம்' என்று நாணிக்கோணி நின்றாள். "வேறென்ன, இட்லியைப் பண்ணித் தொலை; தின்று தொலைக்கலாம்" என்று, வட இந்தியர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கும் பாவனையாக ஹிந்தியில் சொன்னேன்.

ஒரு புத்த போதனை

(இளைய வாதூலன் எழுதியது.)

உபோத்காதம்

மஹான் கௌதமரைப்பற்றி அதோ உள்ள இமயக் குன்றுகள் என்னை அடிக்கடி நினைவூட்டுகின்றன. அதோ உள்ள அந்த வெள்ளியக் குன்றுகள்! அந்தக் கருத்தடர்ந்த வனாந்தரம்!

வானுயர்ந்தவரைகளும், வளைந்து நெளிந்து செல்லும் வெள்ளமிக்குடைய நதிகளும், ஆபத்தில் மனிதனின் அறிவை ஸ்தம்பிக்கச் செய்வதுபோன்ற அந்தக் கருத்த டர்ந்த வனாந்தரமும் கௌதமரது கவனத் தையும், கருத்தையும் ஈர்த்தன வென்பதில் தடையேயில்லை.

புத்தரோ, இறைவனின் திருவுருவை இயற்கையிலேயே கண்டு களித்தவர். அக்

கானகங்களிலும், அக்குன்றுகளின் மீதும் அவர் நீண்ட நாட்கள் சாந்தியை அனுபவித்தவர். அக்காலங்கள் தான் பாரதவர்ஷத்தின் வியவகாரப் பெரும் பகல்களாகும். தவமும், மனித அறிவைத் திகைக்கவைக்கும் அத்புத யோக சித்தியும் அவரிடமிருந்து அப்பொழுது வெளியாயின. தன்னருகே பறவையினங்கள் புடை சூழ அவர் வீற்றிருப்பது வழக்கம். அவைகளைத் தமது ஸஹோதரர்களைப்போல அவர் நேசித்து வந்தார். அப்புட்களும், அமைதியும் மதுரமும் பொருந்திய தம் இன்னிசைக் குரல் கொண்டு கூவி அவரைச் சூழ்ந்து வாழ்ந்து மகிழ்ந்தன. அமைதியானதும் அன்புங் கொண்ட அவரது நிலை, அச்சமயம் உலகிற்கே பல ஆசிச் செய்திகளை வெளியிட்டது.

ஆம், "பிக்ஷுவே! எழுந்திரும். ஆசார்ய கௌதமரை நாடிச் செல்வோம்!" என்ற ஒரு தனிமையான தொனி அன்று அம்மலைச் சாரலருகே கேட்டது.

I

ஞானோதயம் பெற்ற ஸித்தார்த்தர் வேணுவனத்தினின்றும் கபிலவாஸ்து நோக்கி வருகின்றார் என்ற செய்தி, காட்டுத் தீப்போல பாரத மெங்கும் பரவியது. பிரபாஸநகரத்தின் இராஜ வீதிகளிலே புத்தரைப் பற்றிய பல கதைகள் கோஷிக்கப்பட்டன. அத்தேசத்தின் வேந்தன் ஒரு வாலிபன். இம்மை வளம் எல்லாம் நிரம்பப் பெற்றவன். செல்வத்திலும், களியாட்டத்திலும், மனைவியின் கேளிக்கையிலும் மதியைப் பறி கொடுத்த அவனுடைய உள்ளம் திடீரென மாறிவிட்டது.

காரணம், போதிஸத்வரைப் பற்றிய கதைகளை அவன் கேட்டிருந்தான். அரசைத் துறந்த அடிகளன்றோ அவர்! வாலிபத்தின் வெறியை வீழ்த்திய வீரரன்றோ கௌதமர்! புலனை யடக்கிய பெரியோர் அன்றோ அவர்! மாயையின் சோதனைகளில் எல்லாம் வெற்றி கொண்டு விளங்கும் அவரைச் சரணமடையவே அவன் மனம் ஆசை கொண்டது.

பிரபாஸ நகரமுழுவதும் போதிஸத்வரைக் காண்பதற்குத் திரளாகக் கூடி விட்டது. ஜனங்கள் எல்லோரும் தமது அரசன் பெரியவரை எதிர் கொண்டு உபசரிக்க ஏற்பாடொன்றும் செய்ய வில்லையே என வருத்தங் கொண்டனர். ஹேமாவின் யௌவன மணங்கமழும் அரசாங்கத்தில் பெரியவருக்கு இடம் ஏது?

பதினொரு நாழிகைகள் சென்றன பகலில். பிக்ஷுக்களின் நூற்றுக்கணக்கான கூட்டம் பிரபாஸ நகரத்தின் ராஜ வீதிகளில் காணப்பட்டது *'நமோ புத்தாய, நமோ தர்மாய, நமஸ் ஸங்காய' என்ற ஜப உருக்களின் இடைவிடாத ஒலி அப்பிக்ஷுக்களைச் சூழ்ந்து எதிரொலி செய்தது. கண்ணபிரானின் குழலோசையில் கருத்திழந்த பசுக் கூட்டங்கள் போல, மக்கள் அப்பிக்ஷுக்களின் தேஜஸ்ஸில் லயமடைந்தனர். மனைகளை மறந்தோரும், மனைவியை மதியாதவர்களும், பின் தொடர்கின்ற சிறுவர்களைச் சிந்தியாதவர்களுமாகவே அவர்கள் காணப்பட்டனர்.

நகர மக்களின் கவனத்தை ஈர்த்துச் செல்லும் அப்பிக்ஷுக்களை, மறையுமளவும் பிரபாஸ நகரத்து வேந்தன் வைடூர்யன் சாளர வாயிலாக நோக்கிச் சிந்தித்த வண்ணம் நெடுமரம்போல் நின்றான்.

II

வர்ஷாகாலம்! நள்ளிரவு! அரண்மனையில் சயனக்ரஹத்துள் உறக்க மின்றிச் சிந்தனையின் வடிவாகவே வீற்றிருந்தான் வைடூர்யன். 'தனது இளமை நிலையாத பொருள்' என்றே அவன் நெஞ்சம் பறையறைந்தது. தன்னைச் சூழ்ந்து விளங்குகின்ற எல்லாப் பொருள்களும் அரசனுக்கு வெறுப்பை யளித்தன. ஆசையாகிற மது வெறியில் அவைகள் தன்னை வளர்த்து விட்டதை அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். மனித அறிவைக் கடவுளினின்றும் — நித்திய சுகத்தினின்றும் பிரித்து வைப்பதில் இயற்கையைக் காட்டிலும் இச்செயற்கைப் பொருள்கள் பெரிதுஞ்

* புத்த சங்கத்திலுள்ளார் ஜபிக்கும் திரிபிடகமூல மந்த்ரம்.

சக்தி பூண்டவை என்றே அவன் தீர்மானித்தான். அவனையும்மீறி அவனது உதடுகள், "ஆம்!, இனித் தாமதிப்பது வீணே! விடுதலைக்கு விரைய வேண்டும்," என்றன.

அழகிய திரைச்சீலையை மென்மையான கரம் ஒன்று சற்று விலக்கியது. வானத்தை மறைத்த கார்மேகத்தைக் கிழித்துப் பிரகாசிக்கும் பூரண மதி என ஹேமாவின் வதனம் காணப்பட்டது. அவளது முககமலத்தில் அரும்பிய இள நிலவையும் பழிக்கும் புன்னகை, வைடூர்யனின் வாழ்க்கை மலரில் அகாலத்தில் பெய்து பாழாக்கச் செய்யும் பனிபோலிருந்தது. அவனது வைராக்கிய வெறிகொண்ட கண்கள் ஹேமாவைப் பார்க்கக் கூசின. ஆதலால் அவளை வெறுப்பவன் போல அவன் தனது வலக்கரத்தை எதிரே நீட்டி முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டான்.

"இதென்ன பிரேமா, இன்றைக்கு?" என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கினாள் அவ்வழகி.

"ஊஹூம்! என்னருகில் வராதே!" என்று முழுபலத்துடன் அழுந்தக் கூவினான் அரசன்.

கல்லாகச் சமைந்தாள் ஹேமா. வைடூர்யனின் கண்கள் மின்வெட்டுக்கள் போன்று இரக்கத்தையும் கொடுமையையும் மாறிமாறிக் குறித்தன. தெளிந்த வானைப் போன்றிருந்த ஹேமாவின் வதனம் சட்டென இருண்டு கலவரம் சூழ்ந்து விளங்கியது. நிசப்தத்தைக் கலைத்து ஹேமா, "ஆர்ய! அடியாள் புரிந்த குற்றம் என்னவோ? ஏன் இந்த வெறுப்பு?" என்று கேட்டுக்கொண்டே துணிவுடன் அவன் முகத்தைத் திருப்ப முயன்றாள்.

"ஹேமா! என்னைத் தொடாதே! இனி நான் உன் பதியல்ல!"

"எப்படி?"

"ஏப்படியா, பிறவியை வேண்டாமென வெறுத்த எனக்கு உன்னுடைய சகவாசம் மீண்டும் ஜன்மத்தைக் கொடுக்கும் சாபமல்லவா? உன்னை வேண்டுகின்றேன். தீர்க்கமாகச் சிந்தனைசெய். என் நல்வாழ்வைக் குலைக்க நீ விரும்ப மாட்டாயல்லவா!"

"ஒருநாளும் நான் தங்கள் இச்சைக்குக் குறுக்கிடமாட்டேன். இருக்கட்டும், நாதா! எனது அன்பு தங்களுக்குப் பிறவியை கொடுக்கும் சாபமென்று கூறிய கயவன் யாவன்?" என்று கலகலவென நகைத்தாள் ஹேமா.

"பதியின் மொழியைப் பரிஹஸிக்கும் பண்பற்றவளே! 'கயவன்' என்று கூறின உன் நாவைச் சேதிக்கவில்லை, ஆம்! ஆசார்ய புத்தனின் கொள்கையும் அங்ஙனம் இல்லை. சை! என்முன் நில்லாதே. இன்றே எங்கேயாவது ஓடிவிடு" என்று கடூரமாக மொழிந்தான் வேந்தன்.

"நாதா! எனக்குத் தாங்கள் ஒருவர்தான் புகலிடம். நீங்களே என் பதி — என் வாழ்வின் இன்பம்:— எனது சுவர்க்க யாத்திரையின் தோழன் — எனது அறியாமையிருளைப் போக்கும் ஆதித்தன். உமது போதனைகளே எனக்கு அமுதம். ஆசார்ய புத்தனைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?" என்று கண்ணீருடன் முழங்தாளிட்டாள் ஹேமா. அவனத் இடதுகை அவனையு மறியாது அவளது சிரத்தைத்தாங்கச் சென்றது.

அந்தோ! வைராக்யம்! தேள் கொட்டப்பட்டவன் உதறுவதுபோல் படபடப்புடன், "உனது மாய அழகு என் அறிவை மீண்டும் கொள்ளை கொள்ளுகின்றது. நான் அறிவாகிய அப்பொக்கிஷத்தை இக்கொள்ளையிலிருநது காப்பாற்ற வேண்டும். ஆம்!" எனக் கூவிக்கொண்டே சரேலென அவ்வறையை விட்டு வெளியேறினான் வைடூர்யன்.

வர்ஷாகாலத்து மேகங்கள் மதியை மறைக்க முயன்று முடிவில் வெற்றி பெற்றுவிட்டன. காரிருளில் பிரபாஸ நகரம் புதையுண்டது. சில்லிட்ட கிழைச்சாரல் காற்று 'ஊ' வென இழைந்து ஊதிக் கொண்டிருந்தது. அரண்மனையினின்றும் வடக்கு நோக்கிக் கேட்கும் குதிரையின் குளம்படிச் சப்தத்தை

உள்ளம் நோக ஏற்றுச் சாளரத்தின் வழியே அக்காரிருளை நோக்கிக் கொண்டிருந்தாள் ஹேமா.

III

*நியக்குரோத வனத்தில் மஹான் கௌதமர் சீடர்களுடன் தங்கியிருந்த பொழுது வைடூர்யன் அங்கு உதயகாலத்திற்கு வந்தான். அவ்வனத்தை நெருங்க அவனது முகத்தில் கருணையின் ஒளி பெருகியவண்ண மிருந்தது. பளபளவென்னும் பட்டாடைக்குள் அவன் சரீரம் மறைந்திருந்தது. விடுதலை வேட்கை கொண்டவன் என்பதைக் கண்கள் விளக்கின. வாழ்க்கையின் யாத்திரைக்குரிய பாதையை ஆசார்ய புத்தனன்றி வேறு எவராலும் காண்பிக்க முடியாதென்றே அவன் நிச்சயித்திருந்தான். அவன் போதிஸத்வரின் ஸந்நிதானத்தை முடிவில் வந்தடைந்தான்.

போதிஸத்வரின் முன்பு அவன் சென்னி மண்ணுற வணங்கிக் கூப்பிய கரங்களுடன், "பகவ! நான் ஒரு க்ஷத்திரியன். எனது பெயர் வைடூர்யன். பிரபாஸத்தின் தலைவன். ஜீவ சிகிச்சைக் காரராதலின் தங்களிடம் நான் ஒரு நோயாளியாய் வந்துள்ளேன். என்னைத் தாங்கள் அங்கீகரிக்க வேண்டுகின்றேன்," என்றான்.

பிக்ஷுக்கள் அவ்வேந்தனின் யௌவன முகத்திலே வைராக்கிய ஒளியைக் கண்டு வியந்தனர். ஆசார்யரின் சாந்தத் தோற்றத்தையும் அரசனையும் மாறி மாறி அவர்கள் நோக்கிய வண்ணமிருந்தனர். முனீந்த்ரரின் கண்கள் தியானத்திலே மூடியிருந்தன. கொடிய மௌனம் அவர்களிடையே வாசம் செய்தது. ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் கௌதமர் எளியவரே! பகட்டாடை யணிந்த பார்த்திவராயிருந்தால் அவருக்கென்ன?

நிசப்தத்தைக் குலைத்தவண்ணம் கவலையாற் சுளித்த நெற்றியுடன் வைடூர்யன், "பகவ! எனக்கு அருளுங்கள். தங்களைச் சரணமடைய நீண்ட நாட்களாகக் காத்திருந்தவன் நான். சாஸ்திரங்கள் யாவையும் படித்துள்ளேன். விதி விலக்கறிந்துக் கர்மாக்களைச் செய்பவன். தர்மத்தின் உருவைச் சதா தியானிப்பவன். தங்களது சிஷ்யனாக விரும்புகிறேன்," என்றான்.

அரசனின் உறுதியையும் விடா முயற்சியையும் சீடர்கள் வியந்தார்கள். ததாகதர் அரசனுக்கிரங்கலாகாதா என்றே அவர்கள் நினைத்தார்கள். அவ்வளவிலே போதி மாதவனின் புன்னகையுடன் கூடிய வதனம் மலர்வதை அவர்கள் கண்டனர்.

மிகவும் சாந்தமான 'முடியாது' என்ற கேவல வார்த்தை மட்டும் அப்பொழுது அவரிடமிருந்து உண்டாயிற்று.

பிரமித்தான் வைடூர்யன்! ஆம், சாஸ்திரப் பயிற்சியும் கொள்கை யற்றக் கர்மாக்களும் ஒருவனது வாழ்க்கையைப் பரிசுத்தமாக்கா என்றே நினைத்து வருந்தினான் அரசன். நாணமும் பணிவும் பிடித்துந்த அவன்: "முனீந்திர! தாங்கள் என்னை ஏற்றுக் கொள்ள நான் செய்ய வேண்டியது என்ன; பணிமின்!" என்றான்.

சாக்கியசிம்மரின் பதில் பெரிதாயில்லை. "போராடு, பெறுவாய்!" என்பதே. துயரத்துடன் வைடூர்யன், "ஆர்ய! நான் போராடுவேன். மீண்டும் எப்பொழுது தங்களைக் காண்பது?" என்று கேட்டான். புத்தர் சொன்னார்: "வர்ஷாகாலம் முடிந்த பின்பு" என்று.

IV

வைடூர்யன் ஊர்ந்து சென்ற புரவியின் திரும்பாத குளம்படியோசை ஹேமாவைப் பரிபவப்படுத்திவிட்டது. சயனக்ரஹத்துள் அவள் தலைவிரி கோலமாக ஒடிந்து வீழ்ந்த பூங்கொம்பு போன்று விளங்கினாள். எதிர்பாராத சம்பவத்தால் அவளது யௌவன அறிவு, காரண காரியத்தை ஊஹிக்

*ஆலமரச்சோலை. இது பிரபாஸ தேசத்துக்கும் கபிலவாஸ்துக்கும் இடையிலிருப்பதாக பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன.

கமுடியவில்லை. விம்மி விம்மி அழுதாள். அவள் கண்களை மூடுவதும் விழித்து மருண்டு நோக்குவதுமா யிருந்தாள். உதடுகளும் நாவும் உலர்ந்தன. உஷ்ண சுவாசம் அவளுடைய அறிவு கலக்கத்தை வெளிப் படுத்தியது. அவள் தனது அழகிய நீண்ட கூந்தலைத் தலையணையில் புரட்டி அலட்டுவது வெண் மேகங்களினிடையே விரைந்தோடும் மதிபோன்றிருந்தது.

"மீண்டும் உனது மாய அழகு என்னைக் கொள்ளை கொள்ளுகின்றது. நான் என்னுடைய அறிவாகிற பொக்கிஷத்தை அக்கொள்ளை யினின்றும் காப்பாற்ற வேண்டும்," என்ற வைரோயனின் வெறுப்பு மிக்க வார்த்தைகள் அவள் செவிகளைத் துளைத்த வண்ணமிருந்தன. மாய அழகு! உலகில் ஜனன ஹேதுவா அது? ஹூம்! இதுதான் கடவுளின் நியதியோ? சாஸ்திரங்களின் முடிபும் இதுதானோ? அப்படியாயின் இவ்வுலகில் ஏன் யௌவனத்தின் சிருஷ்டி?

இம் மூன்றுவினாக்களுக்கும் அவளால் யாதொரு விடையுங் காண முடியவில்லை. சிந்தனைக்கடலுள் அமுங்கி அமுங்கி எழுந்தாள் ஹேமா. புலன்களும் ஓய்ந்தன. மறு இரவின் முற்சாமம் கடந்ததும் அவளுக்குத் தெரியாது.

கல்லறையும் சவமும் போன்ற ஹேமாவின் அந்தப் புரத்தை நோக்கிப் பரபரப்புடன் ஓடி வந்த விசாகை, "தேவி! அரசர் வந்து விட்டார். இப்பொழுது தான் அவர் தமது குதிரையினின்றும் இறங்கி நேரத் தமது ஏகாந்த அறையை நோக்கிச் சென்றார். நான் அவரைப் பார்த்தேன்," என்றாள்.

இம்மொழியில் ஹேமாவின் உடல் சிலிர்த்தது; புலன்கள் துள்ளி யெழுந்தன. நெட்டுயிர்ப்புடன் விழித்துப் பிரமித்தாள். "என் பிரேமையையா நீ பார்த்தது?" என்றன அவளது உலர்ந்த உதடுகள்.

"ஆமாம் தேவி! உமது அன்பரையே நான்கண்டது!" என்று விசாகை கூறி முடிப்பதற்குள் ஹேமா ஆவேச முற்றவள் போல் அரசனின் ஏகாந்த அறையை நோக்கி விரைந்தாள், வைரோயரைப் பார்க்கும் ஆவலில்! எதற்காக, எங்கு திடீரென்று போனார் என்டதை அறிந்து கொள்ள அவள் விரும்பினாள். ஆனால் அவ்வறைக்குள் அவள் நுழைந்ததும் அவளது கலவரம் மிகுந்தது. 'படீல்' என்ற சப்தத்தைத் தொடர்ந்து வைரோயன் முணு முணுக்கும் சில வார்த்தைகளைக் கேட்டதும் அவளுடைய எண்ணம் யாவும் சிதறின. அரசர் அணிந்திருந்த பொற்கிரீடம் அவ்வறையினுள் சுக்கல் சுக்கலாகிக் கிடந்தது. நக்ஷத்திரங்களை அந்தி வானம் வாரியிறைத்தது போல் அதில் பதித்திருந்த இரத்தினக்கற்கள் சாளரத்தூடுவரும் நில வொளியில் மினுக் மினுக்கென ஒளி வீசின. சிந்தனையின் பயங்கர உருவென விளங்கிய நிழற் புறத்தே தனது முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த வைரோயனையும் அவள் பார்த்தாள்.

"நாதா! இதென்ன அவசரம்? யார் மீது இவ்வளவு கோபம்?"

"யார் என்னைக் கேட்பது?"

"தங்களுடைய பிரியை ஹேமா தான்!".

அவ்வளவே! அரசனுடைய சிந்தனையாவுஞ் சிதறின. அறையின் வாயிற் புறம் விழுந்தது அவன் பார்வை. குருட்டு நிலவில் துக்கத்தின் பிம்பம் எழிலுடன் வசீகரப் பார்வையுடன் நிற்பதை அவன் கண்டான். விஷதாரையை ஒத்த பின்வரும் பதங்களை அவளது மெல்லியநெஞ்சம் நோகச் சட சடவென்று அவன் பொழிந்தான்.

'பாபக்கலமே! பிறவிக் காரணமே! மீண்டும் உன் தரிசனமா? நான் அன்றே கூறிவிட்டேனே! உன் பதியல்ல வென்று" என்றதும் அவன் துயரப்பிரயாசையுடன் தன் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டான். சண்ட மாருதத்தில் அகப்பட்டக் கதலி யென நடுங்கினாள் ஹேமா. அவளது அன்புடைய நெஞ்சம் இனி துன்பத்தை பொறுக்க முடியவில்லை. உணர்ச்சியின் வெறி உச்சந்தலைக் கேறியது. உள்

ளிருந்து உறுதி வீறிட்டெழுந்தது. அழகை யும் யௌவனத்தையும் ஒருங்கே மறந்தாள். சதிபதி வாழ்க்கையில் வெறுப்பு, இடி முழக்கங் கேட்ட கிழங்கு முளைகள் போல மெல்ல மேலோங்கி வளர்ந் தது. இனித் தன்னிலையைப் பற்றி அவ ளுக்குப் பயமில்லை. பிரக்ருதியின் தன்மை யுடன் தன்னை ஒப்பிட்டாள்.

"நான் இதோ வெளியேறுகின்றேன். ஆனால் அன்பரே, பத்தினிகளால் ஜனன ஹேது உண்டென்று கூறிய பெரியோர் யாவரோ? அவரது திரு நாமத்தைக் கேட்க விருப்பங் கொண்டுள்ளேன்," என்றாள் ஹேமா அழுத்தத்துடன்.

"மகான் கௌதம புத்தர்" என்றான் அலக்ஷியத்துடன் அவன். கொடிய நிசப்தம் அவர்களிடை நீடித்தது." "ஹூம்! நான் விடை கொள்ளுகிறேன். என்னை முடிவாக ஆசீர்வதியுங்கள்!" என்றாள் குவித்தகரங்க ளுடன் ஹேமா.

முழந்தாளிட்டு வேண்டும் அழகினை வெறுப்போன் இவ்வுலகில் யாரே உளன்? வைடூர்யனின் வைராக்கிய அறிவும் அவனை ஒரு கலக்குக் கலக்கியது. கண்ணீர்த் துளி களிற் சில தன்னையுமறியாமலேயே அவளது சிரத்தின் மீது விழுந்ததை அவன் பார்க்க வில்லை.

"உம்" என்று வைடூர்யன் உத்தரவிட்ட அக்கணமே இளமை வாய்ந்த அச்சதிபதிகள் ஒருவரை யொருவர் இழந்தனர்.

V

பிரபாஸ நகரத்திலே அமைக்கப்பட்ட வொரு அழகிய விஹாரத்துள்ளே அரசைத் துறந்த வைடூர்யன் சாதகபக்ஷி போல வர்ஷா காலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அரசர் பௌத்த மதத்தைத் தழுவி ஒரு பிக்ஷுவாக விரும்புகின்றனர் என்ற ஒரு பொது வதந்தி மட்டில் அந்நகரத்து மக்களி டையே உலவி வந்தது.

அரசன் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த வர்ஷா காலமும் முடிவில் வந்துற்றது. அவன் மனம் என்றுமில்லாத மகிழ்ச்சி கொண்டது. 'எப்படியும் இந்தத் தடவை என்னை அவர் சீடனாக அங்கீகரிப் பார்' என்றே அவன் உள்ளம் உறுதி கூறி யது. அப் பெருங்களிப்புக்குரிய இளமை தன்னிமிடமிருந்து அழிந்து போனதை அவன் தெரிந்து கொண்டானில்லை. தசைப் பற்றற்ற தேகத்துடன் இலையுதிர் காலத்து விருக்ஷம் போல அவன் விளங்கினான். லக்ஷி யத்தில் விரைந்த நோக்குடைய அவன் கண் கள் மட்டும் கருவண்டுகள் போலப் பிரகா சித்தன.

வர்ஷா கால முடிவை யறிந்த அரசன் தள்ளாடித் தள்ளாடி நியக்ரோதவனத்தை நோக்கி நடந்து சென்றான். சீஷர்கள் மத்தியில் வாழ்க்கையை வென்ற வீரர் கௌதமரைக் கண்டான். அவர் பாதங்க ளிலே வீழ்ந்தான். கண்ணீர் ததும்பக் கூப்பிய கைகளுடன், "ஆசார்ய! காலந் தவ றாது விரும்பிவந்த என்னை அங்கீகரியுங்கள். நான் தங்களது ஆணையை நிறைவேற்றினேன். வைராக்கியத்தின் முழு பலங் கொண்டு போராடினேன்." என்றான் வைடூர்யன். புத்தர் நகைத்துக் கேட்டார், "எப்படி?" என்று.

"ஆசையாகிற மனோவெழுச்சிக் குரிய பொருள்களை அறவே நீங்கி வாழ்ந்தேன். அரியணையைத் துறந்ததால் அகந்தையை ஒழித்தேன். அறுசுவை யுண்டியை வெறுத்த தால் புலன்களை வென்றேன். யௌவன வெறியால் என் கருத்தை உணராது இரண் டொரு தடவைகளில் மீறி நடந்த என்னு டைய இளமனைவியைத் துறந்ததால் ஜன்ம ஹேதுவினின்றும் பிழைத்தேன். அல்லும் பகலும் அமைதியுடன் விஹாரத்துள் தங்கி அருந்தியானம் புரிந்தேன்," என்றான் அவன்.

உடனே, "நீ என் ஆக்ஞையை மீறி விட்டாய்" என்றார் சாக்கிய சிம்மர். வைடூர் யனின் இடுங்கியக் கண்கள் இவ்வுத்தரத்தில்

பெரிதும் ஏமாற்றத்தைக் கண்டன. கண்ணீர் வடிய அவன், "தந்தையே! எதில் நான் தவறி விட்டேன்?" என்று பிரார்த்தித்தான். போதிஸத்வர் தம்மருட்கண்ணை மலர்த்தி வைடூர்யனை நோக்கிப் பச்சாத்தாபத்துடன் பின் வருமாறு சொன்னார்.

"உனது இளமனைவி குற்றவாளி யென்று நீ கூறினாய். யௌவனத்தால் அவள் விடுதலை விஷயத்தில் ஈரொரு தடவைகள் உன்னை மீறி நடந்து விட்டாள் எனறுங் கூறினாய். ஆனால் அவளுடைய உள்ளத்தை நீ உணர்ந்தாயில்லை! ஸ்த்ரீகளின் இதயம் அன்பின் உருவானது. பூவினும் மென்மையானது. மணமிகுந்தது. பிரிவு ஆற்றாது. வாழ்க்கையை வெறுப்புடன் நோக்கிய நீ தலையாய அன்பை இழந்து விட்டாய். அன்பையிழந்த உன்பால் பொறுமை எங்ஙனம் உண்டாகி யிருக்கக்கூடும்? உன்னை மட்டிலும் நீ பரிசுத்தமாக்கிக் கொள்ள விரும்பினாய். அன்பில்லாதவன் துறவு பூண்டால் நிர்வாணம் கிட்டி விடுமா? நான் அப்படி உனக்கு போதிக்கவில்லை. அன்பும், பரிசுத்தமும், இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் இடையே யுள்ளதுமே எனது கொள்கை!" என்று.

இடியரவங் கேட்ட நாகம் போல் நடுங்கினான் வைடூர்யன். முழு பலத்தாலும் அடக்கப்பட்டிருந்த அவன் மனம் திடீரெனக் கூண்டினின்றும் வெளியான புலிபோல வியவகார உலகத்தில் ஸஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது.

',பகவ! மீண்டும் எப்பொழுது நான் வருவது?"

"போராடு, அடுத்த வர்ஷா காலத்தில் இங்கு வா!" என்றார் அப்பெரியார்.

VI

பிரபாஸ நகரை நோக்கி வந்த வைடூர்யனின் மனைவுலகில் இப்பொழுது ஒருவளே தனியரசு செலுத்தி வந்தாள். அவளது யௌவன அழகான பூரணமதி வைடூர்யனின் அறிவாகும் புவிமிசைப் பெய்த நிலவுபோன்று அவன் உள்ளத்தைக் குளிரச்செய்தது. ஆம், ஆசார்யபுத்தனின் கட்டளை 'ஹேமாவுடன் அன்பு வாழ்க்கை நடத்துவதே யாகும்!' என்றது அவன் நெஞ்சம். ஆனால் அவளை மீண்டும் காண்பதில் அவன் மனம் ஆவலையும், கோழைத் தனத்தையும் ஒருங்கே காட்டியது. விஹாரத்தை யடைந்தவேந்தன் ஹேமாவை அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

புத்தர் புகழ்ந்த அவளை அன்புடன் வணங்கி மன்னிப்புப் பெற அவன் விரும்பினான். அவளுடைய அழகினுள் அன்பைக் காண ஆர்வங் கொண்டு அவன் அடிக்கடி வாயிற்புறத்தை நோக்கிய வண்ணமிருந்தான்.

"ஆம்! எப்பொழுதும் அன்புடன் நடந்துகொண்ட அவளை முன்னம் இருதடவைகளில் வெறுத்துக் கொடுமையாகப் பேசினேன். என் வைராக்கியத்தைப் பற்றிக் குறிப்பாக நான் கூறிக்கொண்டிருக்கையில் கலகல வென நகைத்தாளே! அச் சிரிப்பில் நான் என் கோபக்கனலைக் காட்டினேன் அன்றோ. அப்பொழுதும் அவள், "நாதா, நீங்களே என் ஆசார்யர், புத்தனைப்பற்றி எனக்கு என்ன தெரியும்?" என்று கூறின அவளுடைய அன்பின் லக்ஷியத்தை உணராத நான் குரோத வார்த்தைகளைக் கடூரமாகக் கூறினேன். "ஆம்! உண்மைக்குப் போராடுவோன் சினமற்றவன்!" என்ற புத்தரது சொல்லின் பொருள் இப்பொழுதன்றோ தெரிகின்றது, என்றுச் சிந்தித்த வைடூர்யன், திடீரென, "பிரியே! ஹேமா! உனது சாந்தத்தை நான் பெறலாகாதா? எனது மூடவைராக்கிய வெறியில் உனது சாந்தம் என்ற சாந்து கொண்டு அழகு என்ற கற்களால் கட்டிய அன்பெனும் கோயிலைச் கடுஞ்சொற்களாம் கடப்பாரை கொண்டு இடித்து விட்டேனே! இயற்கையின் எழிலே! உன்னை எங்கு கண்டு வணங்குவேன்? அன்பின் நிலையே! ஹேமா! நீ ஏன் இன்னம் வரவில்லை. உன்னைக் கண்டு மன்னிப்புப் பெறுவிடில் ஏன் வாழ்வு. அதோகதிதான். பத்தினிகளால் இனி ஜன்மஹேதுவில்லை என்பதை உணர்ந்தேன். நான் இழந்து பெற்ற என் சுய அறிவைக் காண நீ

விரைந்துவா" என்று விஹாரத்துள் மனவெட்டுக்கள் போன்று தோன்றி மறையும் உருவெளியுடன் பிதற்றிக் கொண்டிருந்தான்.

இரவின் முற்சாமங் கடந்து விட்டது. "அரசே!" என்ற கூப்பாடு விஹார வாயிலில் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தான் வைடூர்யன். கண்ணீருடன் நின்ற ஹேமாவின் அந்தப்புர கஞ்சுகி பாஹுகனைக் கண்டான்.

"பாஹுக! என் உயிர்நிலை?" என்றான் படபடப்புடன். "அரசே! தாங்கள் இனி அவளை நினைக்கவும் ஒண்ணாது. இதோ வருகிறார்கள் பகவதி!" என்ற பதிலைத் தொடர்ந்து, "ஹா! பகவதியா? இல்லை, என் பிரிய ஹேமாதான் அவள்! அன்பை உலகுக்கே— எனக்கே புகட்ட வந்த அப்ஸரஸ்! அவள்! ஹேமா! என் ப்ரியே!" என்று கூவிக் கொண்டே பாஹுகன் குறித்த வீதியோடு ஓடினான் வைடூர்யன்.

'நமோபுத்தாய, நமோதர்மாய, நமஸ்ஸங்காய' என்ற ஜப உருக்களை உச்சரித்து வந்து கொண்டிருந்த உருவின் முன்னிலையில் ஸிம்மஸ்வப்ன முற்ற கஜேந்திரனைப் போலத் திகைத்து முழந்தாளிட்டான் வைடூர்யன். அவனது ஒட்டி யுலர்ந்த கபோலங்களிலே கண்ணீர்ப் பெருக்கெடுத்தோடின. 'அவளது அழகானது, கனிந்தகாளவாய் போன்றிருந்தது. விருப்பை மிகுதியும் உண்டாக்கும் பொற்குவையென அதனுள் அன்பு கனன்றது. ஹேமாவின் இருகரங்களையும் அவனது கரங்கள் நடுங்கியவாறு பற்றின. வெப்பமாக்கப் பட்டப் பூமியில் பெய்த பெருமழைபோல ஹேமாவின் அருட்கண்களின் பார்வையால் அரசனது இதயம் உறைபனி போலாயிற்று.

"ஹேமா! என் அன்பே!" என்றன அவனது உதடுகள். பயங்கரப் புன்னகை! முன்னம் இப் புன்னகையை அவன் உணர்ந்தது வேறுவிதம். இதே புன்னகைதான் சித்தார்த்தரும் அன்று புரிந்தது. ஆம்! "ஹே—மா, இல்லை! தாங்கள் பகவதி" என்றுணர்ந்தேன். எனது குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்," என்றான் வைடூர்யன் கண்ணீர் பொழிய தழதழத்த வண்ணம்.

அன்பும் புன்னகையுங் கொண்ட ஆசிக் கரத்துடன், "பிக்ஷுவே! எழுந்திரும்! ஆசார்ய கௌதமரை நாடிச் செல்வோம்!" என்ற ஹேமாவின் ஓர் தனிமையான தொனி அவ்விருளில் பிரபாஸ நகரத்து மலைச் சாரலருகில் அன்று கேட்டது.

ஒரு 'கருங்கூத்து'

(ராவ்ஸாஹிப் : பண்டிதர் மு. இராகவ ஐயங்கார் எழுதியது)

"ஓங்குமலை யோங்கிமா னோங்கிமண லோங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குபுன லாறெழுத சூழலதோர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச!

கன்னியிள வாழை கனியீவ கதிர்வாலின்
செந்நெல்லுள தேனெழுத போதுமுள தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள போதா
அன்னமுள பொன்னிவளோ டன்பின் விளையாட"

என்பது கம்பர் வரைந்த கவி சித்திரம். பகவான் அகஸ்திய மஹர்ஷி ஸ்ரீராமபிரானுக்குக் கூறிய இப் பஞ்சவடிவளங்களைப் படமெடுத்ததுபோல விளங்கியது, தமிழ் நாட்டில் மற்றொரு மலைச்சாரல். அவ்விடத்தே, சிற்றருவியின் சார்பாயுள்ள பளிக்குப் பாறை யொன்றில், வெள்ளிப் பீடத்து அமைந்த மாணிக்கப்பதுமைகள்போல, இரு பெண்மணிகள் உட்கார்ந்து கொண்டு பின் வருமாறு பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருத்தி—தலைவீ! உன் வருகை, இவ்வந்தி நேரத்தில் மிகவும் அவசியமா யிருந்தது.

ஏன் இத்தனை தாமதம்? முக்கியமான செய்தியொன்றைத் தெரிவிக்கவே, உன்னை நான் அழைத்தது.

மற்றவள்—தோழீ! சிறிது காலமாக என் விஷயமாய் ஐயங் கொண்டுள்ள அன்னையின் காவலோடு, அந்தப் பார்ப்பானது தடையும் இன்று புதிதாக ஏற்பட்டது. இத் தடைகளை விலக்கி வருவதற்கே நான் சிறிது தாழ்க்க நேர்ந்தது.

தோழி—பார்ப்பான் யார்?

தலைவி—நீ அடிக்கடி எச்சரிக்கை செய்து வரும் அந்தக் கூனற்கிழவன்தான்; வழுக்கைத் தலையும் வளைந்த முதுகும் அழுகிக் குறைந்த கையுமான அவனது, கம்பளிக்குள் மறைந்த உருவத்தைக் காணும்போதெல்லாம், எனக்கு உண்டாம் அருவருப்புக்கு அளவுண்டோ? வேண்டுமென்று இன்று பிற்பகலில் எங்கள் மாளிகை வாயிலை விட்டு அவன் அகன்றானில்லை. அவன் குறுக்கிட்டதால், இங்குப் புறப்பட வேண்டாம் என்றுகூட எண்ணினேன். நல்ல வேளையாய், அவன் எங்கேயோ ஒழிந்தான். அன்னையும் வெளிக் காரியமாகச் சென்றனள். எனக்காக நீ காத்திருக்கக் கூடுமே என்று ஓடி வந்தேன். சகி! நெடு நாளாக ஒன்றுந் தெரியவாராத என் இன்னுயிர்க் காதலரைப்பற்றி ஏதேனும் புதிய செய்தி உண்டோ?

தோழி—பித்துக் கொண்ட அந்தப் பார்ப்பானா குறுக்கிட்டது? அது கிடக்கட்டும். தேவீ! நாம் எதிர்பார்த்த முக்கிய காரியம், இப்போது முற்றுப் பெறும் நிலைமைக்கு வந்து விட்டது. இன்று பகலில், இவ்விடத்தில் நம் தலைவரை நான் சந்திக்கலானேன். உன்னைத் திருமணம் புரிதற்கு வேண்டிய பரிசப் பொருள் முழுமையும் அவர் தேடி அமைத்து விட்டனராம். நல்ல நாள் ஒன்றில் மகட்பேசுவதற்கு உன் தந்தையிடம் அவரினத்தார் சீக்கிரமே வந்து சேர்வர் என்று உறுதி கூறினர். இன்றிரவு அவர் உன்னை இங்கேயே சந்திப்பதற்குப் பெரிதும் விரும்புகின்றார். என் வார்த்தைகளை நம்பி உரியதைத் தவறாது செய்யவேண்டும்.

தலைவி—தோழி! இனியும் இவ்வொழுக்கத்தையே அவர் விரும்புகின்றார் போலும்! எங்கள் கூட்டுறவு; ஊரில் பெருத்த சந்தேகங்களை எழுப்பி விட்டது. அந்நியர்சிலர் மகட்பேச வேண்டி எந்தையிடம் அடிக்கடி வந்து நெருக்குகின்றனர். இனி என்னிலைமை என்னாகுமோ? என் காதலரின் உறுதி மொழிகளில் உனக்குள்ள நம்பிக்கையளவு எனக்கு ஏற்படவில்லை. ஆயினும், உன் விருப்பத்துக்கும், அவரைக் கண்டுகளிப்பதில் உள்ள என் விருப்பத்துக்கும் நான் இணங்க வேண்டியவள் ஆகின்றேன். எப்படியும் அவரைச் சந்தித்து நீ சொல்லிய உண்மையை இன்றிரவு அறிந்து கொள்ளுவேன்.

தோழி—தேவீ! மிகவும் சந்தோஷம். இது தான் நான் விரும்பியழைத்த காரியம். வேறில்லை. அந்தியிருள் வந்து நெருங்குகின்றது. நம்மைப் பிறர் காண்பதன்முன் நாம் மெல்ல மனைகட்குச் செல்வோம்.

என்று கூறவே, அவ்விருவரும் எழுந்தனர். ஏதேதோ பேசிக்கொண்டே சென்று, அடுத்த ஊர்க்குள் அவர்கள் புகுந்தார்கள். அவ்வூர் சிறியதேயாயினும் மலைவளத்தால் மாட்சிமை பெற்று விளங்கியது. அவ்வூரின் மத்தியில், அலங்காரமாகத் தோன்றிய மாளிகை யொன்றில் அப் பெண்களுள் ஒருத்தி பிரவேசித்தாள். இரண்டு மலைகட்கு இடையில் இருந்த அவ்வூரில் இரவும்வந்து கவிந்து கொண்டது. அவ்விரவில் மக்களின் ஆடல்பாடல்களும் குன்றக் குரவைகளும் பக்கத்துள்ள மலைகளைப் பிரதிபலிக்கும்படி செய்தன. நெடுநேரத்துக்குப் பின்பு, ஊரரெல்லாம் செய்தொழிலோய்ந்து அயர்ந்து தூங்கிவிட்டனர். ஆனால் ஓர் உருவமட்டும் அவ்வூரில் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தது. சில சமயங்களில் ஊர்க்கு வெளியிடத்தும் அது காணப்படும். ஆனால், அது ஒருபேயோ எனின் அன்று, வெளியூரில் ஏதோ குற்றமொன்றைச் செய்துவிட்டு, அதற்கஞ்சிச் சில காலமாக அவ்வூர்க்கு வந்து ஒளித்துத்திரியும் மேற்கூறிய கூனற் பார்ப்பானது தோற்றமே அது. வயது முதிர்ச்சியும் உடல்நோயும் கூனலுருவும் கொண்ட அவனைப் பகலில் குழந்தைகள் தூரத்திற் கண்டபோதே அஞ்சியோடி விடும்.

இவற்றோடு காமப்பித்தும் கொண்ட அவன், ஒரொருகால் பெண்டிரிருப்பிடத்தை அடைந்துவிட்டால் அங்குண்டாகும் குழப்பத்துக்கு அளவில்லை. இருட்சி மிக்க அந் நள்ளிரவில் தூக்கம் பிடிக்காமல், அவ்வூரின் புறச்சோலையிலே வாய்க்கு வந்ததைப் பிதற்றிக் கொண்டு அவன் திரிந்து கொண்டிருந்தான். அந்தச் சோலையில், நடுச் சாமத்துப் பேய்கள் நடமாடுவதுண்டு என்று அவன் கேள்விப்பட்டவனாதலால் உருவெளியாகக் கண்ட தோற்றங்களால் அவன் வாயினின்று குழறி வந்தவையும் உண்டு. இவ்வாறு அலைந்து திரிந்த அம் முதியவன் ஓரிடம் வந்ததும் எதையோ கண்டு அஞ்சித் திடுக்கிட்டு நின்றான். அவன் முன் விரைந்து வந்துகொண்டிருந்த சிறிய உருவமொன்றே அவனுக்கு அந்தப் பெருந்திகிலை உண்டாக்கியது. அது, பேயா மனிதவுருவா என்ற சங்கை முதலில் அவனுக்கு எழுந்தது. தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, தன்னை அது நெருங்கியதும் குனிந்து உற்று நோக்கி, 'யார் அது' என்றான். பதில் கிடைக்க வில்லை. ஆயினும் ஏதோ ஒரு பெண்ணின் உருவாக அக் கிழவனுக்குத் தோன்றினமையால், அவன் கொண்ட அச்சம், நிமிஷத்தில் காமப் பித்தாக மாறியது. 'என் கையில் அகப்பட்டுக் கொண்டாய் சிறுமி! இனி உன்னை விடேன். இந்தா, இந்தத் தம்பலத்தை வாங்கித் தின்பாயாக' என்று தன் மடியிலிருந்த வெற்றிலைபாக்குப் பையை எடுக்கலானான். வந்த தோற்றமோ, ஒன்றுக்கும் வாய்திறவாமலும் அசைவில்லாமலும் நின்ற வண்ணமே இருந்தது. அக் கிழவன் என்னென்னவோ அதனை நோக்கிக் கேட்டும் ஒன்றுக்கும் உத்தரம் பெற்றானில்லை. அதனால், மனம் குழம்பி 'இது ஒரு பெண் பிசாசுதான், இச் சோலையிலே திரிவதுபோலும் என்ற சங்கையோடும், 'ஏ! பெண் பேயே! நான் ஓர் ஆண்பேய். நீ ஏதேனும் கேடு சூழ்வையானால், ஊரார் உனக்கிடும் பலிகளை யெல்லாம் நானே கவர்ந்து, உனக்கு ஒன்று மில்லாமற் செய்து விடுவேன்!' என்றான். இது சொல்லி முடிந்ததுதான் தாமதம். மணல்களை இருகைகளாலும் வாரிக்கொண்டு முன்னின்ற அவ்வுருவம் கிழவன்மேல் இடைவிடாது வீசி யிறைத்தது. அதற்கு ஆற்றாத அவன் தன்னைக் கொல்லவந்த பிசாசு தான் அது என்று தீர்மானித்தவனாய், ஒரே பெருங் கூச்சலுடன் வீறிட்டுக் கொண்டு ஊரை நோக்கி ஓடலானான். என்றுங் கேட்டறியாத அப் பெருங் கூக்குரலால், ஏதோ ஆபத்தென்று அச்சிறிய ஊர் மக்களெல்லாம் துயிலெழுந்து கிழவனை நோக்கித் திரண்டு வந்துவிட்டனர். அப்பொழுதும் நடுக்கத்துடன் அவனிட்ட கூச்சல் அடங்கவில்லை. வெகு சிரமத்துடன் கிழவனைச் சமாதானப்படுத்தி ஊரார் அவனது துயரின் காரணத்தை உசாவியபோது, புறச் சோலையிலே ஒருபெண் பிசாசு தன்னைத் துரத்திக் கொல்லவந்ததை விவரமாகக்கூறிப் பிரலாபித்தனன். அதைக் கேட்ட பலரும், கிழவனியல்புகளை முன்னமே தெரிந்த வராதலால், அவனது பைத்தியச் செயல்களுள் இதுவும் ஒன்று என்று நகையாடலாயினர். சிலர் இதன் காரணம் வேறென்று தங்கட்குள் மறைவாகப் பேசிக் கொண்டனர். அவனால், இரவில், பெண்டு பிள்ளைகள் அடைந்த பெருங்குழப்பத்துக்கு வெகுண்டு, அவனைத் தாக்கவந்தனர் வேறு சிலர். ஒவ்வொரு வீட்டிலும் இதுவே பேச்சாகிக் கலகல சப்தம் விடியுமளவும் அவ்வூரில் குடிகொண்டது.

அதே வைகறையில், ஊர்நடுவில் இருந்த மாளிகைப் புறத்திலே, இருவர் தனியே இருந்து கொண்டு பேசிய பேச்சும் இது பற்றியதே. தாங்கள் பேசும்போது யாரோ ஒருவர் ஒதுக்குப்புறமாகச் செல்வது போலத் தோன்றியதால், தங்கள் குரல்களைத் திடீரென்று அவர்கள் மெதுவாக்கிக் கொண்டு சம்பாஷித்தவை பின்வருமாறு:—

தலைவி! இரவு நடந்த கூனற்பார்ப்பானது பேய்க்கூத்து இவ்வூராரால் என்றும் மறக்க முடியாததாகும். அது கிடக்கட்டும். இரவுக் குறியின் முடிவு என்ன?

தோழி! என்ன முடிவு? இந்தக் கருங் கூத்துத்தான். இக் கூத்தில் பேயால் துரத்தப்பட்ட பார்ப்பானை எல்லாருந் தெரிவார்கள். பேயாய் நடித்தது யார் என்று தெரிய வேண்டாமா?

இது கேட்டதும், தோழி சிறிது மருண்டு —தேவி! என்ன துணிவு! எத்தனை பெரிய சாகஸம்! என்றாள். இது கேட்ட தலைவி—

தோழி! புலி பிடிக்கப்போட்ட வலையில் நரி அகப்பட்டது போன்ற இக்கூத்தை நம் அருமைக் காதலர் அறிவரோ? அறிந்திலராயின், நம்மை மறந்து நெகிழ்வரோ? என்று கண் கலங்கிக் கூறினாள். இவள் கூறி முடித்ததுதான் தாமதம்—

"மறவேன், துறவேன், மங்கலம்பொலிக" என்ற குரலொன்று வெளியே எழுந்து சென்றது.†

† இச் சிறுகதை, கலித்தொகையுள், குறிஞ்சிக்கலியின் இறுதியிலுள்ள "திருந்திழாய் கேளாய்" என்ற செய்யுளையும் அதன் துறைக்குறிப்பையும் பெரும்பாலும் அடியொற்றி எழுதப்பட்டது.

கலியின் முதல் தாவா.

பிரம்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.,

குறிப்பு:—இந்நாடகம் இவ்வாசிரியராலேயே வடமொழியில் இயற்றப்பட்ட "கலி *ப்ராதுர்பாவ"த்தின் மொழி பெயர்ப்பு. இதைப்பற்றிய எல்லாவித காபிரைட் பாத்யங்களும் இந்நாடகாசிரியருக்கே உரியன.

நாடக பாத்திரங்கள்.

சாத்யாயனர் : ஓர் அந்தணர்
வைசியன்
த்வாபரன்
கலி புருஷன்
வைசியன் மனைவி
சலதர்மா : அரசன்
முதல் மந்திரி
உபமந்திரி
புரோகிதர்
சேனாதிபதி
சபையோர்கள்
பிராமணர்கள் { முதலாவது, இரண்டாவது, மூன்றாவது }
பறை அறைவிக்கும் சேவகன்
நியாயாதிபதி
குமாஸ்தா
சேவகன்
நகரக்காப்பாளர்

கலிவணக்கம்

தன்னுடைய திரிதலினால் தன்மையவாம் நல்வழியை
பின்னம்படச் செய்பவனும் பேர்பலத்தன்— தன்வாழ்வின்
காலச் சகடத்தின் கடைசியரு நக்காலாய்,
சாலுங் கலியைத் துதி.

களம் 1.

[துவாபரயுகத்தின் முடிவு தினத்தில், ஒரு பிராமணர் ஒரு வைசியனுக்குத் தன் நஞ்சைநிலம் ஒன்றைக் கிரயத்திற்கு சாஸனம் செய்துகொடுத்தார். அந்த வைசியன் நிலத்தை உழும் பொழுது ரத்நங்கள் புதையலாக, அடங்கிய ஒரு பொற்குடத்தை கண்டெடுத்தான். பிராமணருடைய சொத்து நமக்கு ஆகாதென்று நினைத்து, அவ்வைசியன் பிராமணர் முன்னிலையில் அப்புதையலைக் கொண்டு வந்து சமர்ப்பித்துப் பேசுகிறான்:—]

* ப்ராதுர்பாவம்—தோற்றம்.

வைசியன்:—இந்தப் புதையல், தங்கள் நஞ்சைவயலில், கண்டெடுக்கப் பட்டது. இதைத் தங்களிடம் சேர்ப்பித்து விட்டேன். தயவுசெய்து எடுத்துக் கொள்ளுங்கள்.

பிராமணர்:—அப்பா, நீ இந்த விஷயத்தில் ஒன்றும் யோசிக்கவேண்டாம். நான் உனக்கு என் பூமியை விற்றபோதே அதில டங்கிய, சகல சொத்துக்களும், உனக்கே சொந்தமாகி விட்டன. உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். இந்தத் திரவியத்தை வைத்துக்கொண்டு, உன் குடும்பஸம்ரக்ஷணை செய்து கொள்.

வைசியன்:—சுவாமீ, தாங்கள் உதார குணத்தால் இவ்விதம் சொல்லுகிறீர்கள். இந்த விஷயத்தில் தர்மம் என்னவென்று ஆலோசிக்கவேண்டும். நான் கிரயம் கொடுத்தது பூமிக்குமட்டுமே யல்லாது வேறில்லை. இந்த விலை மதிக்கத்தகாத திரவியத்தை நான் வாங்கினவன் அல்லன். தாங்களும் எனக்கு விற்றவரல்லர். வெகுகாலமாக, தாங்கள் அனுபவித்துவந்த பூமியில் புதைந்து கிடைந்த இந்த தனம் யதேச்சையாக என் கையில் சிக்கின காரணமாகப் பிராமண சொத்தை நான் அபகரிப்பது எப்படித் தருமமாகும்? என் க்ஷேமத்தையும், குடும்ப அபிவிருத்தியையும், கோருபவரான தாங்கள், இந்த விஷயத்தில் எனக்கு ஆக்ஷேபணை சொல்லக்கூடாது. அவசியம் இந்த தனத்தை அங்கீகரித்துக்கொண்டு, என்னை, கிருதார்த்தனாகச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

[என்று நமஸ்கரிக்கிறான்.]

பிராமணர்:—அப்பா? எழுந்திரு. நீ நிரம்ப தர்மசிந்தனை உள்ளவன் ஆனபடியால், மேன் மேலும் க்ஷேமங்களை அடைவாய். ஆனால், இந்த விஷயத்தில் என்னை, நிர்ப்பந்தம் செய்யாதே. எவ்வளவோ காலமாக என் பூமியில் இருந்தபோதிலும், தெய்வமானது, எனக்கு இந்த தனத்தைக் கொடுக்கவில்லை. அந்த பூமி உன் கைக்கு வந்தவுடனேயே, உன்னுடைய பாக்கிய விசேஷத்தால் அதே தெய்வமானது, உன் மீது, இருக்கும் அளவு கடந்த அருளால், இந்த தனத்தைத் தந்து, வெளிப்படுத்தியிருக்கிறது. ஆகையால் எந்த விதத்திலும் இது உன்னுடையதே ஆகும். வீணாக ஆயாசப்படவேண்டாம். விலைக்கு விற்ற பிறகு, அந்த பூமிக்கும் எனக்கும் என்ன ஸம்பந்தம்?

வைசியன்:—சுவாமி! தங்கள் சொல்லை மறுத்துப் பேசுவதற்கு, மன்னித்தருள வேண்டும். தாங்கள் இவ்விதம் விளக்கிக் கூறியும் என் உள்ளம் தெளிவடைய வில்லை. தானறியாமல் கொடுத்துவிட்ட பொருள் எப்படிக் கொடுக்கப்பட்ட பொருளாகும். இந்தப் புதையலானது, தங்கள் முன்னோர்களால் சேர்க்கப்பட்டு புதைத்துவைக்கப்பட்டது என்பதற்கு சந்தேகமேயில்லை. பிராமண சொத்து என் குலத்தை நாசம் செய்துவிடும். எனக்கு வேண்டாம்.

பிராமணர்:—[தனக்குள்] இது ஏதடா? தர்மசங்கடமாயிருக்கிறது. ஆகிலும் இவ்விதம் உரைப்பேன். [வெளிப்படையாக] அப்பா! ஸாதுவே! இதை நீ இப்பொழுது எடுத்துக் கொண்டு வீடுபோய்ச்சேருவாய். நாளைக் காலையில், பெரியோர்களை மத்யஸ்தர்களாக வைத்துக்கொண்டு, இந்த விவாதத்தில் தர்மத்தை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம், போய் வா?.

வைசியன்:—நல்லது, சுவாமி, தங்கள் இஷ்டப்படியே.

[புதையலுடன் போகிறான்.]

பிராமணர்:—தெய்வத்தின் போக்கு ஆச்சரியமானது. நல்லது! பரம ஸாதுவான இந்த வைசியன் வெகுகாலம் சுகமாக வாழட்டும். நாளைக் காலையில் பெரியோர்களைக் கொண்டு, அவன் மனதிற்கு அமைதி உண்டாகும்படி செய்விக்கிறேன். [போகிறான்.]

களம் 2.

(ஆகாயத்தில், துவாபர புருஷன் பிரவேசிக்கிறான்.)

துவாபரன்:—இப்பொழுது, நடு நிசி; என் அதிகாரமும் முடிந்து விட்டது. இரண்டு பாதங்களோடு கூடிய தர்மத்தை, நான் வெகு காலமாகத் தாங்கி வந்தேன். கடைசியில்,

என்பெருமை சிதறிப்போகும் ஸமயத்தில், பல கஷ்டங்களைப் பார்த்துவிட்டேன். இந்த பாரதயுத்தம் க்ஷத்திரியர்களை, பெரும்பான்மையும் அழித்துவிட்டது. இன்றே ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒரு வேடனால் அடிக்கப்பட்டு இப் புவியைவிட்டு அகன்றார். இனி ஒரு நிமிஷமும் என்னால் ஆட்சி நடத்த இயலாது. ஆஹா? திக்குகள் கறுத்துவிட்டன. திடீரென்று பரவின மேகங்களால், சந்திரனும், நக்ஷத்திரங்களும் மறைந்து போயின. மண்ணை வாரித்தூவும் காற்றுக்கள், வீசுகின்றன. பல விருக்ஷங்கள், ஜடைகள்போல் தோன்றும் பறவைக் கூடுகளுடன் சுழல்கின்றன, ஓர் புறம் கோட்டான் கூவுவதும், மற்றோர்புறம் நாய்கள் அழுவதும் பயங்கரத்தை உண்டு பண்ணுகின்றன. ஸரி, கலிபுருஷன் வந்துவிட்டான் இதோ, என்முன்.

(கலிபுருஷன் பிரவேசிக்கிறான்)

கலிபுருஷன்:—துவாபரரே? பற்பல விகல்பங்கள், ஸந்தேஹங்கள், அவநம்பிக்கை முதலியவைகளைத் தன் சுழலுதலாகக்கொண்டதும் பணம் என்ற நடு நாபியை உடையதும் ஆகிய என் ஆக்ஞா சக்கிரத்தை நான் இனி நடத்துவேன். நீர் போகலாம்.

[போகிறான்]

துவாபரன்:—அப்படியே.

கலிபுருஷன்:—நல்லது இப்போது துவாபரனை நீக்கிவிட்டு காலதேச வர்த்தமானங்களை என் கைவசப்படுத்திக் கொண்டேன். இனி என் ஆக்ஞைப்படி

உலகினர்க் குயிர்நிலை உயர்பண மாகிட
பணம்அடை மனிதர்கள் பேராசை
உடையராய்
குறுகலும் கோணலும் சோண்டஅறி
வுடையராய்
தனைஅடை மனிதருக் கிடர்தனைச்
செய்வராய்
அவரவர் உயர்ந்திட அளவிலா நினைவெய்தி
பற்பல பிரிவுடன் பற்பல நிலை கோள்கை
அவ்ரவர் போக்கினால் அறமெலாம்
அழியவே.

[போகிறான்]

களம் 3.

[வைசியனும், அவன் பத்னியும் வீட்டின் அறையில் பிரவேசம்.]

மனைவி:—[படுக்கையில் விழித்துக்கொண்டு] ஆஹா? இதென்ன, திடீரென்று, புயல் அடிக்கின்றதே, மேகங்கள், திரண்டெழுந்து வானத்தைக் கவிந்து கொண்டனவே? என்ன மழை! என்ன காற்று! நாதா! எழுந்திருங்கள். பார்த்தீர்களா, மழையை?

வைசியன்:—[எழுந்து] ஆமாம், எது இவ்வளவு பயங்கரமாயிருக்கிறது? இந்த சைத்ர மாதத்தில், எங்கிருந்து வந்தது, புயல்காற்று. இதுவும் எனக்குப் புதையல் கிடைத்த விந்தை போல், ஒரு விந்தையாக இருக்கிறது. எல்லாம் தெய்வச் செயல். எத்தனை வருஷகாலமாக இந்தப் பிராமணன், இந்த நஞ்சை நிலத்தை உழுது சாகுபடி பண்ணிப் பலன்களை அடையவில்லை! அப்படி இருந்தும் இந்தப் புதையல் அவருடைய கையில் கிடைக்கவில்லை. நான் அந்த நிலத்தை வாங்கி ஒரு முகூர்த்தமாவதற்கு முன், திடசித்த மில்லாதவன் ஒரு ரகசியத்தை வெளியிட்டு விடுவதுபோல், அது இந்த தனத்தை என்னிடம் வெளிப்படுத்தி விட்டதே.

மனைவி:—[அருவருப்புடன் சூக்கொட்டிக்கொண்டு] ஆமாம், ஆமாம், அப்படிப் பக்ஷபாதம் பண்ணி, தெய்வம் கொடுத்தால்கூட, நீங்கள், உடன்படுகிறீர்களா, என்ன? அந்த பிராமணனுக்கு இது தகாதென்று உங்களுக்கு, இச்செல்வத்தைக் கொடுத்தால், அதைத் தொலைத்துக் கையை, கழுவவேண்டுமென்று, தலைகால் தெரியாமல், பறக்கிறீர்கள் அல்லவா? உங்களுக்குக்கூட இவ்விதம் புத்தி கெட்டுப்போனது ஆச்சரியமாகத் தானிருக்கிறது. பிராமணன் ஏழைத்தனத்தையே தனமாகக் கொள்ள வேண்டியது தர்மம். வைசியர்கள் பணத்தைச் சம்பாதித்துச் சேர்க்க ஏற்பட்டவர்கள். எல்லாம் தெரிந்த நீங்கள், உங்களுக்குக் கிடைத்த புதையலை, பிராமணனுக்கு அர்ப்பணம் பண்ணத் தலைகீழாய், நிற்கிறீர்கள். இந்தச் செல்வம் அகப்பட்ட

விஷயத்தை, அந்தப் பிராமணனுக்கு தெரியப் படுத்தியதே, முதல் முதல், எனக்குப் பிடிக்க வில்லை.

வைசியன் :—என் அன்புடையாளே! இப்பொழுதுதான், என்ன கெட்டுப்போய் விட்டது. புதையல் குடம் என் வசத்திலே தான்,இருக்கிறது. மேலும், ஸாதுவான, அந்தப் பிராமணர், ஏற்கனவே, தனக்கு வேண்டா மென்று, ஒரே பிடிவாதமாய்ச் சொல்லி விட்டார்.

மனைவி :—மனுஷ்யர்களின், புத்தி நிலை யற்றதென்று உங்களுக்குத் தெரியாதா? அதிலும், அந்தணர்கள் நிரம்ப, சஞ்சல புத்தி யுடையவர்கள். அவர் பிராமணராயிருப்பினும் பேராசை உடையவராக இருக்க மாட்டாரென்று, யாரால் நிச்சயமாய்ச் சொல்லக் கூடும். அதையும் தவிர, நாளைக்கு மத்யஸ்தர்களாயிருப்பவர்கள் அந்தணர்களாகவே இருப்பார்கள். ஆதலால், அவர்கள் தங்கள் ஜாதிக் காரர்கள் சார்பாகவே தீர்மானம் செய்து விடுவார்கள். என்ன போராத வேளையோ, எவ்வளவோ தீர்க்காலோசனைகள் அறிந்த உங்களுக்குக்கூட, முன்பின்யோஜனையில்லாத இந்த அறிவீனம் ஏற்பட்டு விட்டது. ஏன், உங்களைச் சொல்வானேன்! பிராணன் போகிற வரையில், துர்பாக்கியவதியான நான், இந்தக் குடும்பத்தில், தரித்திரப் பட்டுக்கொண்டே உழைத்துத் தொலைக்க வேண்டுமென்று, என் தலைவிதி இருக்கும்போது, தெய்வம் கொடுத்தாற்கூட வேண்டாம் என்று சொல்லத்தானே உங்களுக்குத் தோன்றும்.

[அழ ஆரம்பிக்கிறாள்.]

வைசியன் :—என் அருஞ்செல்வமே! நீ ஏன் துக்கப்பட வேண்டும்? மனதைச் சமாதானப் படுத்திக்கொள்; நான் வாஸ்தவமாகவே முட்டாள்தனம் போய்விட்டேன். என் அறியாமையை நினைப்பதற்குக்கூட இப்போது எனக்கு லஜ்ஜையாய் இருக்கிறது. ஆனாலும் ஒன்றும் தவறிப் போய்விடவில்லை. நம் கையிலேயே இருக்கிறது உபாயம். உன் புருஷனின் சாமர்த்தியத்தை நாளைக் காலையில் பார். ஒருநாளும், நான் இப்பொற்குடத்தை கொடுக்கப் போவதில்லை. இந்தக் கிழட்டுப் பிராமணன் என்னை என்ன செய்துவிட முடியும்?

மனைவி :—நாதா பார்த்தீர்களா, இப் பொற்குடத்தில் இருக்கும் இரத்தினங்களையும், ஆபரணங்களையும்! இக்குடம், குபேரனது கஜானாவிலிருந்து தடுமாறி இங்கு வந்தது போலும். இத்தகையை இரத்தினங்களை, இப்போது, லோகத்தில் எங்கும் பார்த்தல் அரிது. தான் பணம் படைத்த இறுமாப்புக் கொண்ட உங்கள் தமையனுருடைய சொத்துக்கள் முழுவதும் இக்குடத்திலிருக்கும் இரத்தினங்களில் ஒன்றுக்குக்கூட ஈடாகாது. அவர்கள் எல்லாருக்கும் இனிப் பொறாமையால் வயிறு வெடிக்கும்; நன்றாக வெடிக்கட்டும். என்ன, தூங்கிவிட்டீர்களா, என்ன?

வைசியன் :—(ஸ்வப்னத்தில்) ஏதய்யா புதையல்? எப்படி அய்யா இருக்கும் புதையல்? புதையலும் கிடையாது, ஒன்றும் கிடையாது. போம், போம். போகிறீரா, கல்தா கொடுக்கட்டுமா? (என்று சிரிக்கிறான்.)

மனைவி :—நல்லது. இவர் மனது திடப் பட்டு விட்டது. இனிக் கவலையில்லை, தூங்குகிறேன்.

[திரை விழுகிறது.]

களம் 4.

[இதற்கு மத்தியில் அந்தணர், விடிவதற்கு ஒரு ஜாமம் முன்னதாகவே, துயில் விட்டெழுந்து, வெளியில் புறப்படுகிறார்.]

பிராமணர் :—ஆஹா! காற்று மழைகளினால் அலசப்பட்ட பூதலமானது, இவ்விரவின் இறுதியில் ஒரு விதமான கலங்கின தோற்றத்தை உடையதாயிருக்கிறது. சிதறின மேகத்துணுக்குகளின் பரவுதலால், இன்னும் நக்ஷத்திரங்கள் மங்கின வண்ணமே இருக்கின்றன. சிண்டைப்பிடித்து ஆட்டியதுபோல் உதறி விடப்பட்ட மரங்கள் வெறிச்சென்று நிற்கின்றன. பாதையெல்லாம் சதசதவென்று ஈரமாயிருக்கிறது.

(நடந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்தவராய்) கஷ்டம் ஏன் ஸரஸ்வதியினிடத்தில் லக்ஷ்மி இவ்வளவு பகை பாராட்டவேண்டும்? இத்தெய்வத்திற்குத்தான் என்ன இவ்வளவு வஞ்சனை? இந்தப் புதையல் திரவியமானது என் பூர்விகர்களால் சம்பாதிக்கப்பட்டதென்பதற்கு, ஒரு தடையுமில்லை. என் பிதுரார்ஜித சொத்தை என்னிடமிருந்து ஒளித்து, வழியில் போகும் வைசியனை அதைக் கொண்டு பெருமைப் படுத்திய இந்தத் தெய்வத்தின் பொல்லாங்கை, நான் என்னென்று கூறுவேன்! நாளை பொழுது விடிந்தால், கடன் உபத்திரவத்தினால் தத்தளிக்கிறேன். அந்தப் பாக்கியசாலி விலை கொடுத்து வாங்காததும், பாடுபட்டு விருத்தி செய்யப் படாததும், ஸ்வப்னத்தில் கூட எதிர்பாராததுமான லக்ஷ்மீ கடாக்ஷத்தின் அபரிமிதமான வெள்ளத்தை அனுபவிக்கப் போகிறான். ஆனால், தெய்வத்தினை நொந்து கொள்வதில் என்ன பயன்? அந்த வைசியன் வெகு ஸாது. ஸர்ப்பத்தைக் கண்டு பயந்தவன்போல், அந்த செல்வத்தினைக் கண்டு பயந்து, ஓடிவந்து, என் கால்களைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டான். அக்குடத்தை எடுத்துக் கொள்ளும்படி, என்னை கெஞ்சிக்கேட்டுக் கொண்டான். மஹாமூடனான நான், வெகு காலத்திற்குப் பிறகு என்பேரில் தயைகூர்ந்து என் ஏழைத்தனத்தை ஒழிக்க எண்ணிய ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளினேனல்லவா? எல்லாவற்றிற்கும், நான் இடைவிடாது பூஜித்து வரும் மஹேச்வரன் இன்று ஒரு இரவு மட்டும், அந்த வைசியனுக்கு புத்தி மாறாதபடி காத்தருள வேண்டும். பொழுது விடிந்ததும் அவனுக்குப் பிரமாணங்களை எடுத்துக் காட்டி, பிராமண சொத்தை அபகரிப்பதில் உள்ள தீப்பயன்களை எடுத்துக்காட்டி விளக்குகிறேன். ஆனால் அவன் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் புண்ணிய பாவங்களை புறக்கணித்துவிட்டு "நாளை வருவதை நினைத்து இன்றிருப்பதை ஏன் விட்டுவிட வேண்டும்" என்று நிச்சயம் செய்து கொண்டால், சலதர்மா என்ற நம் அரசனிடம் வழக்காடவேண்டியது தான். எனக்கு மட்டும் தோன்றுகிறது, இந்த வைசியன் என் கண்ணில் கூட அகப்பட மாட்டானென்று. அகப்பட்டாலும் சம்மதிக்கப் போவதில்லை. "பாப்பானுக்குப் பின்புத்தி" என்று உலகம் சொல்வது பொய்யல்ல. இருக்கட்டும். என்ன ஆகிறது, பார்ப்போம். மேல்மேல் பரிகாரம் தேடிக் கொள்வோம். இப்போது எவ்வளவு தான் முன்யோஜனை செய்ய முடியும்? ஸ்நானத்திற்கு நாழிகையாகிறது, ஆகையால் சீக்கிரம் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு, அவனைப்போய்ப் பிடிக்கிறேன்.

[போகிறார்]

களம் 5.

[அரசர் மாளிகையில், மந்திராலோசனை சபையில் சலதர்மா என்ற அரசன், முதல் மந்திரி, இரண்டாவது மந்திரி, புரோஹிதர் முதலியவர்கள் பிரவேசம். அவரவர்கள் யதோசிதமாய் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர்.]

அரசன் :—ஸபையோர்களே, ராஜாதி ராஜனான துர்யோதன மஹாராஜனின் நீதியைப் பின் பற்றுபவரான நாம் காலவித்யாசத்தால் நம் தலைவன் வீரசுவர்க்கம் அடைந்த பிறகு யுதிஷ்டிரராலே ஏற்படுத்தப்பட்ட கட்டளையை மிக்க வெறுப்புடனும் ரோஷத்துடனும் வஹித்து வருகிறோம். இந்த நிலைமை, இராஜ தந்திரிகளுக்கு ஸஹஜம்தான். பலம் பரிபூர்ணமாக இல்லாத வரையில் கீழ்ப்படிந்தவர்போல் இருந்து விட்டு பலம் கூடினவுடன், திடீரென்று எழுந்து பாய்வது நமக்கு நீதியாகும். தற்சமயம் இராச்சிய நிர்வாகங்கள் நன்கு நிலை நிறுத்தப் பட்டும், பிரஜைகளின் நட்பு பெருகியும் மற்ற அரசர்கள் தோழமை கூடியும், செல்வப் பெருக்கும் பலவித ராணுவ தளவாடங்களின் பலமும் பெற்று, உன்னத நோக்கம் உடையவர்களாக இருக்கும் நமக்கு இந்தக் கப்பம் கட்டும் ஈன நிலையிலிருந்து தலை தூக்க நற்காலம் பிறந்துவிட்டது என்றே எனக்குப் புலப்படுகிறது. மேலும், இன்று நமது பகைவர்களுக்கு அழியும் காலம் நெருங்கியிருக்கிறது. ஏனெனில் அந்த யாதவ குலத்தவன்—வஞ்சகம் என்ற கடுங் கானகத்தில் திரிபவன்—ஒரு வேடனால் அடிக்கப்பட்டு உயிர் துறந்தானென்று தெரிகிறது. அவன் இன்றிப் பாண்டவர்கள் பஞ்சுப் பொதிக்குச் சமமானவர்கள். அவர்களை வெல்வது

ஒரு பெரிய காரியமல்ல. ஆனல் இந்த விஷயத்தை நீங்களும் ஆலோசித்து முடிவு சொல்லுங்கள்.

முதல் மந்திரி :—அரசே! இந்த விஷயமாகவே விஞ்ஞாபனம் செய்து கொள்ள நாங்கள் கொஞ்ச காலமாக ஸமயத்தை எதிர்பார்த்திருந்தோம். நான்கு வித அணிவகுப்போடு கூடிய நம்முடைய சேனைகள் முன்னிருந்ததைவிட இருமடங்கு பெருக்கப்பட்டு யுத்தத்தை எதிர்பார்த்த வண்ணமாய் நிற்கின்றன. தங்களுக்கும், இன்று யுத்த ஆலோசனை உதித்து இருக்கின்றது. இன்றிரவே, ஆகாயத்தில் ஏற்பட்ட மேகமுழக்கங்களை நினைத்துப் பார்த்தால், நம்மை யுத்தத்திற்கு உற்சாகப் படுத்துவதற்கென்றே தெய்வம் அவ்விதம் படாடோபம் செய்ததென்று ஊஹிக்க இடமிருக்கின்றது. இப்பொழுது இந்த ஸபையில் வீற்றிருக்கும் நமது சேனதிபதி சிம்ம விக்கிரமன், தேவப்படைகளோடு கூடிய இந்திரனைக்கூட யுத்த களத்தில் முறியடித்துவிட வன்மை பொருந்தியவர். எவ்விதத்திலே பார்த்தாலும் மஹாராஜா அவர்கள் இப்பொழுதே யுத்த தளவாடத்தைக் கிளப்புவதற்கு யாதொரு தடையுமில்லை.

[சபையோர்கள் எல்லோரும் ஆமோதிக்கிறார்கள்]

புரோஹிதர் :—ஸாதுவான யுதிஷ்டிரர் நாம் கப்பம் கட்டுவதை நிறுத்திய போதிலும், திடீரென்று நம்பேரில் படை எடுத்து வந்துவிடமாட்டார்.

சேனபதி :—இருந்தாலும் யுத்தத் திமிர் கொண்ட அவருடைய தம்பிமார்கள் பாரத யுத்தத்திலேயே, பெரும்பான்மையும் சிதறிப் போய் மிகுதியாயிருக்கும் தங்கள் அற்ப பராக்கிரமத்தைக் கொண்டு சற்றுக் குதித்து ஆடுவார்கள். எதற்கும் நாம் யுத்தத்திற்குத் தயாராக இருப்பது உசிதம்.

சபையோர்கள் :—அதுதான் ஸரி! அதுதான் ஸரி!

அரசன் :—அப்படியானல் கோட்டையைப் புதுப்பிக்கவும் யுத்தத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேர்க்கவும் பற்பல வரிகளால் அதிகாரிகள் தீவிரமான முயற்சி எடுத்துக் கொள்ளட்டும். கேடயம், வாள், ஈட்டி, கவசம், முதலியன தரித்த, காலாட்படைகள் நாற்புறமும் காவல் செய்யட்டும். நான்கு திசைகளிலும் எங்கும் கண்ணும் காதுமாகக் கவனம் செலுத்தும் ஒற்றர்கள், சஞ்சரிக்கட்டும்.

சேனபதி :—அரச ஆக்ஞைப்படியே.

முதல் மந்திரி :—எவ்வித காரிய சித்திக்கும் அடிப்படையானது தனம், என்று எல்லாம் அறிந்த இச்சபையோர்க்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. இப்பொழுதும் பொக்கிஷ அறையில் தனம் குறைந்திருப்பதாக நான் சொல்லவில்லை.

ஆனல் யுத்தத்திற்குத் தயார் செய்து கொள்பவர்கள், வெகு காலத்திற்குத் தேவையான உணவு முதலிய பதார்த்தங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் பற் பல வழிகளில் பொக்கிஷத்தை விருத்தி செய்யும், வழியைத் தேட வேண்டும். பணம் சேகரிப்பதற்குப் பல நீதிகள் அனுஷ்டானத்தில் இருக்கின்றன. அவைகளுக்குள், ஜனங்களிடம் வரி வசூலிப்பது என்பதே சிலாக்கியமானது. ஏனெனில் ஒரு வண்டு பல புஷ்பங்களிலிருந்து, தேனைத் திருடுவது போல அரசன் கொஞ்சம் கொஞ்சமாக, பலர்களிட மிருந்து வரியை வசூலிப்பதால், அதில் யாருக்கும், சிரமம் ஏற்படாது. வருமானமும் சமயோசிதம் போல் அதிகமாகும்படி செய்து கொள்ளலாம். ஆகையால் இப்பொழுது நடைமுதலில் இருந்து வருகிற வரி விஹிதங்களுக்கு வேருக, மற்றும் சில நூதன வரி விஹிதங்கள் ஏற்படுத்த நான் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறேன். அதை இச்சபையில் நான் விவரிக்கத் தொடங்குவதற்கு முன்னதாக நமது உபமந்திரியால் பிரேரபணை செய்யப் படப் போகிற ஒரு விஷயத்தை நீங்கள் நிதானித்துக் கேட்டு அபிப்பிராயம் சொல்ல வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

உபமந்திரி :—முதல் மந்திரி அவர்கள் கட்டளையாலும் மஹாராஜா அவர்களின் அனுமதியின் பேரிலும் நான் பின் வருமாறு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சமீப

காலத்திற்குள் இங்கரத்தில், பற்பலர் வறுமையிலிருந்து திடீரென்று பணப் புதையல்கள் கண்டெடுத்து, பெரும் சீமான்களாக ஆகிவிட்ட விஷயம் அடிக்கடி காதில் படுகிறது. இவ்விதம் ஒரே ஸமயத்தில், நிதிகளைப் பூதேவியானவள் ஈந்து வருவது தர்மம் தவறாமல் அதிக தயவுடன் லோக பரிபாலனம் செய்துவரும், நமது மஹாராஜர் அவர்களுக்கு அவள் கொடுக்கும் பாத காணிக்கை என்றே நான் எண்ணுகிறேன்.

சபையோர்கள் :—அதற்கென்ன ஸந்தேகம்?

உபமந்திரி :—ஆகையால் நிதிகள் விஷயத்தில் அரசனுக்கே பூரண பாத்தியம், என்று நாம் திட்டம் செய்து விடுவது, இந்த சந்தர்ப்பத்தில் நமக்கு நன்கு பயன் தரக் கூடியதாகும்.

புரோகிதர்:—இந்த விஷயத்தில் மனுவின் கட்டளை இவ்விதமாகும் :—

அதி புராதனமான நிதிகளில், ரக்ஷிப்பவனை அரசனுக்குப் பாதி பாகம் உண்டு. ஸமீப காலத்தில் ஏற்பட்ட புதையலில் ஒருவன் அது தன்னைச் சேர வேண்டியது என்று நியாயமான வழியில் பாத்தியம் கொண்டாடுவானேயானால், அப்பொழுது அரசன் அதில் ஆறில் ஒரு பாகத்தையாவது, பன்னிரண்டில் ஒரு பாகத்தையாவதுதான் கொள்ள வேண்டும். இந்த நியாயப்படி அதிபுராதனமல்லாத நிதிகளில் ஆறில் ஒரு பாகத்தையும், புராதன நிதிகளில் பாதியும் தான், அரசன் அடையலாம் என்று ஏற்படுகிறது. அதற்கு மேல் தங்கள் சித்தம்.

உபமந்திரி :—தாங்கள் கூறியது கருதத்தக்கதே ஆனாலும், இவ்விஷயத்தில் நாம் யோசிக்க வேண்டியது என்ன வேன்றால், பிரஜைகளுககு நிதி கிடைப்பது, உழவு, கைத் தொழில், இவைகளின் மூலம் ஏற்படும் லாபத்தைப் போல அல்லாமல் ஒரு பிரயாசையு மில்லாமல் சித்திக்கும் வருமானமாக ஆகிறது. ஒருவன் பணத்தைப் புதைத்து வைத்துவிட்டு இறக்கிறான். காலாந்தரத்தில் அது மற்றொருவனால் கண்டெடுக்கப்படுகிறது. அப்படி எடுப்பவனுக்கு அதை முதல்முதலில் பார்த்ததைத் தவிரப் பாத்தியதை கொடுக்கக்கூடிய காரணம் யாதொன்று மில்லை. அது அவனால் சம்பாதிக்கப்பட்ட பொருளாகாது. அர்த்த சாஸ்திரத்தில் ஒரு முக்கியமான நியாயம் உண்டு. அதாவது எந்த சொத்தும் உடையவனில்லாமல் ஒரு நிமிஷமும் இருக்காது என்பது. அம் முறையில் பார்த்தால் எந்த நிமிஷத்தில் சொத்துக்கு உரியவன் அதைப் புதைப்பதன் மூலம் விட்டு விடுகிறானோ, அந்த நிமிஷத்திலேயே அப்படி விடப்பட்ட தனம் அரசனுக்கு உரியதாகின்றது. ஏனெனில் தனிப்பட்ட ஒரு மனிதனுடைய சொத்து என்று எதையெதை நாம் குறிப்பிட முடியாதோ அவைகள் அனைத்திற்கும் அரசன் உரியவனாகிறான். இவ்விதமாகக் குறிப்பிட்ட, உடையவனில்லாத புதையல் அரசனுடைய தனம் தான். அதைத் தன்னுடைய தென்று பிறகு பாத்தியம் கொண்டாட, புதைத்தவனுடைய வமிசத்தைச் சேர்ந்தவனுக்குக்கூட அதிகாரமில்லை. இவ்வித மிருந்தால் அதி புராதனமான நிதியின் விஷயத்தில் கண்டெடுத்தவனுக்கு பாத்திய மில்லை என்று சொல்லத் தேவை யில்லை. ஆனால் மனுவின் கட்டளையை மீறலாமா? என்ற கேள்விக்கு நான் இவ்விதம் சமாதானம் சொல்லுகிறேன். மனுவின் திட்டத்தை வஸிஷ்டர், கௌதமர், யாக்ஞவல்கியர் முதலான ஸ்மிருதிகாரர்களே கொஞ்சம் மாற்றி யிருக்கிறார்கள். அதாவது :— ஆறில் ஒரு பாகம் என்பதை ஐந்தில் ஒரு பாகம் அரசனுக்குரியது என்று சொல்லுகிறார்கள். இதனால் தார்மீகர்களும், லோக க்ஷேமத்திற்காகப் பாடுபடுபவர்களும், அவசியம் ஏற்பட்ட பொழுது மனுவின் திட்டத்தை மாற்றிக் கொள்ளலாம் என்று விளங்குகிறது. ஆகையால், இப்பொழுது தேசகாலங்களை அனுசரித்து, ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கருதுபவர்களும், லோபம் முதலான தோஷங்கள் இல்லாத, பெரியோர்களுமான இச்சபையோர்களின் அனுமதிக்கு என் திட்டம் பாத்திரம் ஆகட்டும், என்பது என் வேண்டுகோள்.

சபையோர் :—மிகவும் உசிதம். அப்படியே செய்ய வேண்டும்.

அரசன் :— அப்படியானால் அவ்விதமே பறையறைவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்— நிதியைப் பார்த்தவன், அதை ராஜ திரவிய மாகக்கருதி உடனே நம்மிடம் சேர்ப்பித்து விடவேண்டும். அப்படிக் கொடுப்பவனுக்கும், நிதி கிடைத்த விபரம் தெரிவிப்பவனுக்கும், சம்மானம் செய்யப்படும். எவன் பார்த்தோ அல்லது கேட்டோ, அவ்விஷயத்தை மறைக் கின்றானோ, அவனுக்கு அரசன் பொருளைத் திருடுபவனுக்கு உரியதான தண்டனை விதிக் கப்படும்—என்று.

முதல் மந்திரி :—அரசன் கட்டளைப்படி. இரவும் முடிந்து விட்டது. மற்ற விஷயங்கள் நாளை ஆலோசிப்போம்.

அரசன் :—சரி அப்படியே, ஆகட்டும்.

களம் 6

(ஆற்றங்கரை மடத்தில் பிராமணர்கள் பிரவேசம்)

முதல் பிராமணர்:—காத்தியாயனர் ஏன் இன்னும் வரவில்லை ?

இரண்டாவது பிராமணர்:— எனக்கும் தோன்றுகிறது, அந்த வைசியன் அகப்பட மாட்டானென்று. ஏன், இந்தப் பிராமணன் அவஸ்தைப்படவேண்டும்? அவசரக்காரன் பச் சாத்தாபப்பட வேண்டியதுதான். எப்படியா னாலும், தர்மமோ, அதர்மமோ அன்புடன் வந்த லக்ஷ்மியானவள், மேன்மையை விரும்பு கிறவனால் உபேக்ஷிக்கத் தக்கவள் அல்லள். இந்த முட்டாள் பிராமணனோ, தும்பை விட்டு வாலைப்பிடிக்க முயலுகிறான்.

மூன்றாவது பிராமணர்:—இதுதான் ஆச்சரி யமாக எனக்குத்தோன்றுகிறது. யாதேனில் அவ்வைசியன் அந்தப்புதையல் குடத்தை எடுத்துக்கொண்டு காத்தியாயனரிடம் வந்து இது உம்முடைய சொத்து எடுத்துக்கொள் ளும் என்று முதலிலேயே மன்றாடினான் என் பதுதான். ஆனால் இப்பொழுது பணம்போய் விடுமே என்ற பயத்தினால் இவன் ஓடுவது, பிறப்பினாலேயே பணத்தைச் சேர்க்கும் சுபா வமுள்ள இவன் விஷயத்தில் ஆச்சரியமல்ல.

முதல்வர்—எனக்குத்தோன்றுகிறது, இந்தப் பிராமணனின் பேராசையை மூட்டிக் கடைசி யில் அவரை மோசம் செய்வதற்காகவே இந்த துஷ்டப்பயல் நேற்று யோக்கியன்போல நடித் திருக்கிறான்.

[பார்க்கிறான்]

அடே! நல்ல வேளையாய் இந்த வைசியப் பயலை இழுத்துக்கொண்டு காத்தியாயனர் வரு கிறார்.

இரண்டாம்பிராமணர்:—பாருங்கள், பாருங் கள். இவன் பலிக்கு இழுக்கப்படும் ஆட் டைப்போல இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு வரப்படுவதைப் பார்த்தால், ஏது நமது மத் யஸ்தம் ஒன்றும், பிரயோசனப்படாதென்று தோன்றுகிறது.

மூன்றாவது பிராமணர்:—இருக்கட்டும் பார் க்கலாம். கடைசியில் இருக்கவே இருக்கிறான், பலவீனர்களுக்கு ஆதரவான அரசன்.

[காத்தியாயனரும் அவருடைய வற்புறுத்தலால் பின் தொடரும் வைசியனும் பிரவேசம்]

மூன்றாவது பிராமணர்:—காத்தியாயனரே! உமது நண்பர் என்ன சொல்கிறார்? இவர் ரொம்ப நல்ல மனிதராச்சே. அனேகம் சந் தர்ப்பங்களில் இவரை எனக்குத் தெரியுமே! ஏனையா? நீரே கொடுத்து விடுவதாக ஒப்புக் கொண்டதை இப்பொழுது இல்லை என்று சொல்லிவிடப் போகிறீரா என்ன ? நேற்று கூட நீர்—

வைசியன்:—பெரியோர்களே ? இது தர்ம மா? இது நியாயமா? இந்தப் பிராமணர் வயலை விற்று விட்டபிறகு, என் கையில் கிடைத்த புதையலில் இப்பொழுது ஒரு கடுகளவிற்குக் கூட ஆசைப்படுவது முறையாகுமோ? நியா யம் தெரிந்த நீங்கள், அதிருஷ்ட வசமாக எனக்கு ஏற்பட்ட ஸம்பத்தை, அழிக்க நினைக்கும், பேராசைகொண்ட இந்தப் பிரா மணனுக்கு அனுஸரணையாகப் பேசுவீர்களா ?

இரண்டாவது பிராமணர்:—கவனியுங்களே யா? கடுகளவு கூட ஆசைப்படுவது முறை யாகாதாமே.

முதல் பிராமணர்:—பிராமணர் பேராசை கொண்டவர்!

(125-ம் பக்கம் பார்க்க)

அனுஷ்டானப் பகுதி.

*மாட்டுப் பொங்கல்

(டாக்டர். வே. ராகவன் எழுதியது.)

முடிந்தது மார்கழி. விடிந்தது தை. பனியும் பிணியும் நீங்க சூரியனும் தெற்கிலிருந்து திரும்பினான். வீட்டுக் கூரைகள்மேல் பரங்கிகளும், பூஷணிகளும் காய்த்துப் பாரந்தாங்காமல் நிற்கின்றன. சோலைகள் மங்கள மஞ்சளாயும் கற்கண்டுக் கரும்பாயும் நிறம்பி நிற்கின்றன. செங்கதிர்களால் பொன் மயமாயின வயல்கள். இன்றே நம் புதுவருஷம்.

நாம் இதுகாறும் பாடு பட்டோம். இனி பலன்களை அனுபவிக்கப் போகிறோம். கர்ம காலம் முடிந்தது. போக காலம் துடங்கிற்று. இதைக் குறிக்கத்தானே தையில் முதல் நாளில் நாம் எண்ணை நீராடி போகி பண்டிகையைக் கொண்டாடினோம்? எவ்வுயிருக்கும் பயிருக்கும் ஆத்மாவாக விருக்கும் சூரியன் கொடுத்ததே நம் தான்யமும் தனமும் என்றன்றோ நாம் நேற்றுச் சூரியனைப் புதுக் கரும்பையும் புது நெற்பொங்கலையும் கொண்டு தொழுதோம்? வானத்திற்கும் மழைக்கும் அதிபதியான இந்திரனுக்கு நன்றி காட்டவோ இந்திரனையும் உபேந்திரனையும் பூஜை செய்தோம்? இன்று காலை நம் வீடுகளில் சிறுமிகள் சிறு இலைகளில் வைத்த 'காக்காப் புடி கனுப்புடி'கள் எதற்கோ? அவைகள் நம் பயிர்களைக் கொத்திக் குலைத்து விடாமல் விட்ட புள்ளினங்களின் விருந்து போலும்.

'மாடாய் உழைத்தான்' என்பது வசனம். இப்படி நமக்கென்று பாடுபடும் ஜீவன்களில் மாட்டுக்கு ஒப்புண்டோ? அவையின்றி நமது தரிசுத்தடல்கள் இப்படிக்கதிர்களைக் காய்க்குமா? தூரத்திலிருக்கும் சூரியனையும் இந்திரனையும் பூஜை செய்து விட்டு, அருகிலிருக்கும் துணையான நம் பசுக்களையும் மாடு கன்றுகளையும் மறக்கலாமா? அவற்றின் உதவியால் நாம் பெற்ற தானியங்களின் ருசியை அவை கொஞ்சமும் அறிய வேண்டாமா? அவை எவ்விதத்திலும் சூரியனுக்கும் இந்திர்னுக்கும் குறைவு பட்டனவல்ல. இன்று ஒரு நாள் அவைகளுக்கு விடுமுறை. அவைகளுக்கு நீராட்டுகிறோம். குங்குமத்தால் நம் பசுவின் முகத்தை அலங்காரம் செய்து அதன் கழுத்தில் நெட்டி முதலியவற்றால் பல வர்ணங்களில் மாலை சாத்திச் சுத்தஞ் செய்யப்பட்ட கொட்டிலில் அதற்குப் பூஜை செய்து, பொங்கலும், வெல்லமும், இளந் *தேங்காயும், அதற்

* இது 15—1—39 தேதியன்று சென்னை அகில இந்திய ரேடியோவில் உபந்யாசம் செய்யப்பட்டு மேற்சொன்ன ரேடியோ நிர்வாஹகர்கள் அனுமதி பெற்று இங்கு பிரசுரிக்கப்பட்டது.

களிக்கிறோம். மாலையில் காளைகளுக்குக் கொண்டாட்டம். காளையின் மூக்குக் கயிறுகள் புதிதாக்கப்படுகின்றன. மணிகளெல்லாம் துலக்கப்பட்டுப் பளபள வென்று பிரகாசிக்கின்றன. கழுத்தில் பல விதமான மாலைகள். கொம்புகள் சீவப்பட்டு வர்ணங்கள் பூசப்பட்டன. ஊரிலுள்ள எல்லா மாடுகளும் சேர்ந்து விட்டன. நாகஸ்வரம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்கின்றன. நம் மாடுகளின் ஊர்வலம் நடக்கிறது. தார்க்குச்சி ஒவ்வொரு தரம் மாட்டின் மேல் ஏறும் பொழுதும், ஏரில் கட்டிய மாட்டின் மீது ஒவ்வொரு தரம் சாட்டை விழும்போதும், மடியிலிருக்கும் பாலைக் கடைசித் துளிவரையில் வற்றக்கறக்கப் பசுவிற்குப் 'பூக்கா' செய்யும்போதும், 'ஐயோ இப்படியா என் குழந்தைகள் மடிய வேண்டும்', என்று கண்ணீர் விட்டுக் கதறும் காமதேனு இன்று நம் மாட்டுப் பொங்கலையும் மாடுகளின் ஊர்வலங்களையும் கண்டு ஆனந்தத்தால் பூரிக்கிறாள்.

நம் இந்தியா முக்கியமாய் விவசாயத்தை ஆதாரமாய்க் கொண்ட நாடு; இந்தியாவின் நாகரீகத்தை நாகரீகம் என்று சொல்லக் கூடாது; உண்மையில் 'கிராமரீகம், என்றே சொல்ல வேண்டும். நமது கிராம வாழ்க்கை நலப்பட்டுச் செழித்து வளர்ந்தால் நமது நாடு தனித்த ஓர் அழகையடையும். இதர நாடுகளின் மேன்மையினின்றும் மாறுபட்டுத் தன்னுடைய மேன்மையும் அழகும் வேறென்ற தனிச்சிறப் பொன்று நம்நாட்டுக்கு வேண்டும். நகரங்களில் புளியடைக்கப் படுவதுபோல் அடைக்கப்பட்டு, மெஷின்களுக்கு அடிமையாகித் தம்மையும் மெஷினை அடித்துக் கொண்டுபோகும் போக்கு நமதல்ல. அது வேறானது; விதேச பந்தா; நாகரீகம் அது. நம் சுதேசிய பந்தா கிராமத்தை ஹ்ருதய மாகக்கொண்ட வாழ்க்கை; நம் கிராமத்தின் மூலாதாரம் நம் ஆடுமாடுகளே.

ஸிந்து மாகாணத்தில் வெட்டி வெட்டி நம் பண்டை வாழ்க்கையை ஆராய்ச்சி செய்கிறார்கள். அதில் என்ன தெரியவருகிறது என்றால், அப்பண்டைக் காலங்களிலும் நாம் விவசாயத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தோம் என்பதே. விவசாயமிருந்தால் பஞ்சமில்லை யென்று சொல்லுகிறது ஒரு ஸம்ஸ்க்ருதப் பழமொழி. வேதங்களைப் புறட்டிப் பார்த்தாலும் அதே தெரிகிறது. "நமது பசுக்கள் தேனைக் கறக்கட்டும்" என்று ரிக் வேதத்தில் ரிஷி வேண்டிக் கொள்ளுகிறார். நமக்கு உயிரைக் கொடுக்கும் சூர்ய கிரணங்களை 'கோ'க்கள் என்று சொல்லுகிறார்கள். பூமியே 'கோ' என்று கருதப்படுகிறாள். கோக்களுக்குக் காமதேனு என்ற தேவதையொன்றை நாமெல்லோரும் வணங்கி வருகிறோம். கோவின் சரீரத்தில் எல்லா தேவதைகளும், க்ஷேத்திரங்களும், தீர்த்தங்களும் இருக்கின்றன வென்பது நமது நம்பிக்கை. மாடு, பசுக்கள் இருக்குமிடத்தில் 'ஸம்ருத்தி' இருப்பது நிச்சயம் என்று ராமாயணத்தில் வால்மீகி சொல்லுகிறார். நாம் எப்பொழுதுமே மாடுகளையும், பசுக்களையும் போற்றியே வந்தோம்.

பண்டைத் தமிழ் நாட்டில் ஜல்லிக் கட்டில் ஒரு மாட்டை யடக்கின வாலிபனையே தனக்குக் கணவனாக தமிழ்ப் பெண் வரித்தாள். இன்றும், மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை முதலிய விடங்களில் இவ்வத்புதமான விளையாட்டு நடந்து வருகிறது. இது எவ்விதத்திலும் 'கிரிக்கட்'டுக் குறைவுபட்ட விளையாட்டல்ல. இந்த ஜல்லிக் கட்டென்ற மாட்டு விளையாட்டாவது இன்று நாம் தமிழ் நாடு முழுவதும் கொண்டாடுகிற மாட்டுப் பொங்கல் என்ற கொண்டாட்டமாவது, நம் தமிழ் நாட்டுக்குமட்டு முண்டானதல்ல. நம் இந்தியாவுக்கே பல பொதுவான மாட்டு விழாக்கள் உண்டு. 'கிராமத்தை மறுபடியும் உத்தாரணம் செய்ய வேண்டும்; நமது ஆடு மாடுகளே நம் தனம்' என்று சொன்னால் அது நம் பொது மக்களிடம் ஏறாது. அதற்காக நம் முன்னோர் மாடுகளின் நன்மையைக் காப்பதற்கென்றே மாடுகளைத் தெய்வீகமாய்ச் செய்து அவற்றை வருஷத்தில் சிற்சில காலங்களில் நாம் தொழும்படி செய்திருக்கின்றனர். இப்படி பல மாட்டுப் பொங்கல்கள் உண்டு.

வேதத்தில் மாடுகளும் பசுக்களுமே தவமிருந்து வேள்வி நடத்தின வென்றும் அந்த வேள்விக்கு 'கவாம் அயனம்' அதாவது, மாடுகள் போவது என்றும், அது மிகவும் மேன்மையான வேள்வி யென்றும் சொல்லப் படுகிறது. புராணங்களில் பல கோவிரதங்கள் அதாவது

மாடு பசு ஸம்பந்தமான நோன்புகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. நம் வாழ்க்கையை நம் மரம் செடி கொடிகளுடனும் நம் ஆடுமாடுகளுடனும் அப்படி இணைத்து ஒன்றாய்ச் செய்திருந்தனர். இந்த மாடு பசு நோன்புகளில் சொல்லப்படும் பிரார்த்தனைகளில் முக்கியமான அர்த்தமென்ன வென்றால், 'செல்வம் நிறம்பிய மாடுகளே! உங்களுக்கு நமஸ்காரம். தர்மத்தின் மக்களான மாடுகளே, உங்களுக்கு நமஸ்காரம். பரிசுத்தமான மாடுகளே! உங்களுக்கு நமஸ்காரம். என் முன், மாடுகளும் பசுக்களுமிருக்கட்டும். என் பின், மாடுகளும், பசுக்களுமிருக்கட்டும். என்பக்கங்களில், மாடுகளும் பசுக்களுமிருக்கட்டும். என் ஹிருதயத்தில், மாடு பசுக்கள் இருக்கட்டும். நானே மாடு பசுக்களிடையே வாழ்வேனாக!'' என்பது.

இப்படி மந்திரங்களைச்சொல்லி மாடுகளைத் தொழும் விரதங்களில், கோத்ரிராத்ர விரதம் என்று ஸ்கந்தபுராணத்தில் சொல்லப்பட்டது ஒன்று. இது ஐப்பசியில் தீபாவளி சமயத்தில் கிருஷ்ணபக்ஷத்திரயோதசியிலிருந்து மூன்று நாட்கள் நடத்தப்படுகிறது. மாட்டுக் கொட்டிலில் பூஜாமண்டபம் ஒன்று தயாரித்து அதில் காமதேனு முதலிய தெய்வபசுக்களையும் கிருஷ்ணனையும் பூஜைசெய்து, பசுக்களுக்கு நீர்காட்டி, புல் முதலியவை கொடுக்கவேண்டும். பசுக்களைப் பூஜைசெய்து, ஸுமங்கலிகளையும் பூஜை செய்யவேண்டும். இரவு தூங்காமல் பாட்டுடனும் கூத்துடனும் ஜனங்கள் இம்மூன்று நாட்களையும் கழிக்க வேண்டும்.

புரட்டாசி சுக்ல திருதியை அல்லது சதுர்த்தியன்று காலை ஆணோ பெண்ணோ ஒவ்வொருவரும் பட்டினி இருந்து, ஸ்நானம் செய்து கோபத்ரிராத்ரி என்ற விரதத்தை நடத்திவந்தனர் என்று பவிஷ்ய புராணம் சொல்லுகிறது. இதில் மாடுகளை நன்றாய் நீராட்டி குங்குமம் முதலியவற்றால் அலங்கரித்துக் கிரமமாய்ப் பூஜைசெய்வார்கள். பசுவின் காலடிபோல் தங்கத்திலோ வெள்ளியிலோ வார்த்து அதைப்பூஜைசெய்து தானம் செய்வார்கள். தன் வீட்டு வாசலிலோ, கிராமத்துள் நுழையுமிடத்திலோ, மாட்டு மந்தைகளிலோ, பெருங்கொட்டில்களிலோ நின்று கொண்டு, வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கும் ஒவ்வொரு மாட்டிற்கும் புல்லோ வேறு எந்த ஆகாரமோ கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இப்பொழுது சென்னையில் தெருவில் வரும் மாட்டிற்கு நாம் எச்சில் இலைகளைக்கூடப் போடுவதில்லை. மேய்ந்துவர அவற்றிற்கு இடமில்லாமல் அவை, கிடைக்கும் நியூஸ் பேபரையே தின்றுவிட்டுப்பாலைக்கறந்து விடுகின்றன. அதனால்தான் போலும் நம்மில் பலர் பத்திரிகைகளுக்கு 'வசவச' என்று எழுத ஆரம்பித்து விடுகிறார்கள்.

தேவி புராணத்தில் இளந் தம்பதிகள் தாம் பிரியாதிருக்கும்பொருட்டுச் செய்யும் 'கோயுக்ம' விரதம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதில் காளையையும் ஒரு பசுவையும் கொண்டாடுவார்கள். இதுபோலவே 'கோரத்ன' விரதம் என்று மற்றொரு விரதமும் இப்புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மாடுகளுக்கு முக்யமாய் உத்விக்னம், ஹிருதயக்ராஹி, மோகனம், பாதனம், பூதனுக்ரஹம், கலிலம், ஸுதாருணம், கர்ணக்ஷேபகதி, ஸ்வைரகம், கர்ணலம்பகம் என்று பத்து நோய்கள் வரும். இவற்றை வாராமல் தடுக்க கோசாந்தியென்ற ஒழுக்கத்தைச் சிவதர்மத்தில் விதித்திருக்கிறது.

காளைகளை விசேஷமாய் நாம் பண்டைக் காலங்களில் கார்த்திகை மாதத்தில் 'விருஷ விரதம்' என்ற காளை நோன்பில் பூஜைசெய்து வந்தோம். இது பத்ம புராணத்தில் சொல்லிய விரதம்.

பொது நலத்திற்காகக் காளை வாங்கிவிடுவது முதலிய பொது நலத் தொண்டுகளும் பண்டைகாலத்தில் உண்டு. ஒரு நல்ல காளையை வாங்கி விட்டு விட்டால் அது 'விருஷோத்ஸர்கம்' என்ற பெரிய புண்யம் என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. விடப்படும் காளைக்கு மணிகட்டிப் பூஜையெல்லாம் நடக்கும். இது ஐப்பசியிலாவது, கார்த்திகையிலாவது நடத்தப்படும்.

மாடுகளுடன் கன்றுகளையும், சேர்த்து நாம் கார்த்திகையில் 'கோவத்ஸ த்வாதசீ'யென்ற விரதத்தில் போற்றி வந்தோம். கார்த்திகையில் சுக்லதசமியில் ஆண்மக்களோ, பெண்மக்களோ, வெளியே மேயச்சென்றிருக்கும் கன்

றையும் மாட்டையும், தாம் ஸ்நானம் செய்து. விட்டு மடியாய் எதிர்பார்த்த வண்ணமிருந்து, அவை வந்ததும், அவற்றிற்குச் சந்தனம் பூசி, பூக்களால் அலங்காரம் செய்து. குங்குமமிட்டு அர்க்யம், நிவேத்யம் முதலியன கொடுப்பார்கள். இந்த நோன்பு நடத்தும்போது நடத்துகிறவர் பசுவிடமிருந்து வரும் பொருள்களை, அதாவது பால், தயிறு, வெண்ணெ, நெய் இவைகளைத் தம் உணவிலிருந்து விலக்கவேண்டும். இது எவ்வளவு நல்ல ஏற்பாடு? நாமும் வருஷத்தில் ஒரு நாளாவது நம் காபியில் பாலை விலக்கி, நம் பசுக்களை ஒட்டவற்றடிக்காமலிருந்தால், நம் பசுக்களுக்கு எவ்வளவோ நலம். ஆனல் 'ஸெக்ரிடேரியட்'டில் ஒரு 'கிளர்க்கு' காலைக் காபியில்லாமல் ஆபீசுக்குத் தலைவலியுடன் வந்து விட்டால், அவர் தலைவலி நம் ப்ரதான மந்திரியின் பட்ஜட் வரைக்கும் போய்த் தாக்கிக் கோளாறுகளை உண்டு பண்ணிவிடும்.

கார்த்திகையிலேயே இன்னும் பல மாடுகளின் உத்ஸவங்களும் இருக்கின்றன. சுக்ல அஷ்டமின்று 'கோஷ்ட அஷ்டமீ' என்றொரு விரதம். இதில் மாடுகளைப்பூஜித்து, அவற்றிற்குப் புல் முதலியன கொடுப்பது, அவற்றைக் கண்டவிடங்களில் வலம் வருவது, அவரவர் தம்தம் மாடுகளைத் தோப்புகளில் ஸ்வயேச்சயாய் விட்டு, அவற்றைப் பின் தொடர்ந்து கொண்டுபோவது, முதலியன நடைபெறும்.

பங்குனியில் கிருஷ்ணபக்ஷப் பிரதமையில் பசுக்களை மட்டு மல்லாமல் எருமைகளையும் அலங்காரம்செய்து பூஜை செய்து வந்தனர்.

கார்த்திகையில், கிருஷ்ண சதுர்தசியன்று பலி சக்ரவர்த்தியை பூஜைசெய்துவிட்டு, சூது ஆடுவார்கள்; பிறகு கோக்ரீடனம், அதாவது மாடுகளோடு கூடிய கிரீடைகளை நடத்துவார்கள். இந்த கோக்ரீடனம், ஜல்லிக்கட்டுபோன்ற ஒரு விளையாட்டாயிருந்திருக்கலாம்.

கார்த்திகை பௌர்ணமியில் பண்டை இந்தியாவில் கௌமுதீ மஹோத்ஸவம், அதாவது நிலாப்பெருவிழா, என்றொரு கொண்டாட்டம் நடைபெற்று வந்தது. இவ் விழாவில், மாலையில் தற்கால மாட்டுப் பொங்கலில் எப்படி நடக்கிறதோ அதுபோலவே ஒரு பெரிய மாடுகளின் ஊர்வலம் நடந்துவந்தது. மணிகளெல்லாம் கட்டி, ஜோடிக்கப்பட்ட பசு, மாடு, எருமை எல்லாம் ஊர்வலமாய் வந்து, வழிகாக்கும் தேவதையான மார்கபாலீ என்ற அம்மனைத்தாண்டிச் செல்லவேண்டும். இதைத் தவிர இவ்விழாவில் ஜனங்கள் காளைச்சண்டைகளையும் எருமைச் சண்டைகளையும் நடத்தி மகிழ்ந்து வந்தனர்.

இவ்வளவு மாட்டுப்பொங்கல்கள் நம் நாட்டில் வழங்கிவந்தன. இன்னும் மஹாராஷ்டிரத்திலும் கூர்ஜரத்திலும் மேற்சொன்ன கோவத்ஸ த்வாதசீ நடக்கிறது. மஹாராஷ்டிரத்தில் கோபாஷ்டமியும் நடக்கிறது. வங்காளத்தில் பஹுலா, வஸுபாரஸா என்று மாட்டுப் பொங்கலை நடத்தி வருகின்றனர். நான்கு மாதங்கள் அந்த தேசத்தில் மாட்டின் அடிகளை எழுதித் தொழுது வருகிறார்கள். டெக்கானில் 'போளா' என்கிறார்கள். ஆகவே நம் நாடு முழுதுமே, ஒன்றல்ல, பல மாட்டுப் பொங்கல்கள் நடந்து வந்தன. அவற்றை அக்காலத்தில் அரசரும் அரசாங்கமும் மேல் பார்வையிட்டு நடத்திவந்தனர். நமது ஸுகாதார விவசாய இலாகாவிலுள்ள அரசாங்க மந்திரிகள் மாட்டுப்பொங்கலை தம் ஆதரவின்கீழ் நடத்த ஏற்பாடு செய்யலாம். இன்று ஒவ்வொரு வருஷம் மாடுகளுடைய ஓட்டங்களில் பந்தயம் (cattle-race) வைக்கலாம்; நம் மாடுகளின் ஊர்வலத்தை மிகவும் சிறப்பாய் நடத்தலாம். நமது கால்நடைகளின் காக்ஷி, அதாவது cattle-show, ஒன்று ஏற்பாடுசெய்து, மாடு பசுக்களை நன்றாய் வைத்துக்கொண்டிருப்பவருக்கு பரிசுகள் அளிக்கலாம். இதுவுமன்றி, பொது மக்களுள், சக்தியும் செல்வமும் உள்ளவர் தாமே மாடு கன்றுகளை வைத்துக்கொள்ள வேண்டும். நம் செடி கொடி மரங்களினின்றும், நம் தோப்பு துறவுகளினின்றும், நம் ஆடு மாடுகளினின்றும், நம் வாழ்க்கையைப் பிரிக்கக் கூடாது. இயற்கையுடன் ஒன்றுபடாத வாழ்வு வேரற்ற வாழ்வு. நம்முடன் கூடப்பிறந்த செடிகொடிகளுடன் ஆடு மாடுகளிடமும் ஸஹோதரபாவமே இருக்கவேண்டும். நாம் அவைகளைப் போற்ற, அவை நம்மைப் போற்ற, இருவருடைய வாழ்வும் நிறைந்திருக்கும். நம் மாடுகளுக்குப் பொங்கலானல், நமக்கும் பொங்கல்.

கீதப் பகுதி.

கான ரஸமும் கவிதையும்.

(டாக்டர் வே. ராகவன் எழுதியது.)

சில்பஸ்ரீயின் சென்ற இதழில் அகமர்ஷணர் கானரஸம் வேறு, கவிதாரஸம் வேறு என்று பகுத்தறிந்தெழுதிய நல்லுரையைப் படித்தவுடன் என் மனத்திலெழுந்த சில எண்ணங்களை இங்கு குறிக்கலாமென்று நினைத்தேன். அகமர்ஷணர் சொன்னதையே போற்றி எழுதப்படுமிது, அதற்கு வியாக்யானமாய்க் கருதப்பட வேண்டும்.

சிசுவையும், பசுவையும், பாம்பையும் வசீகரிப்பது இசை என்னும் பழமொழியை அகமர்ஷணர் எடுத்துக் காட்டினார். இந்த வட மொழி வாக்யத்தின் கருத்து என்னவென்று விசாரிப்போம். பலரும் சொல்வது என்னவென்றால் பசுவுக்கும், சிசுவுக்கும், பாம்புக்கும் கூட இசையின் இனிமை தெரியும் என்பதே. எனக்கு அதன் பொருள் என்னவென்று படுகிறதென்றால் "சிசுவுக்கும், பசுவுக்கும், பாம்புக்குமே இசையின் உண்மையான இனிமையும், பூர்ணமான ஆஸ்வாதமும் உண்டு" என்பதே. ஏனெனில் அம் மூன்றுக்கும் சொற்களின் அறிவு இல்லை; 'இவ்விசையில் பொருள்படும் பதங்களாகிய காவியமும் ஒன்றிருக்கிறது' என்ற அனாவச்யமானதும் தடையுமானதுமான அறிவு அவைகளுக்கில்லை. கடவுள் நமக்களித்த சாபம் சப்தம்; சப்தம் ஒரு களங்கம்; இந்த சப்தத்தால் கலக்கப்பட்ட நீரையே நாம் பருக முடியும்; அது நமது குறை. பசுவோ, சிசுவோ, பாம்போ, சப்தத்தால் கலக்கப்படாத தனித்த, தெள்ளிய நாதத்தை மட்டும் பருகும் பேறைப் பெற்றிருக்கின்றன. நமக்கு ஏற்படும் எல்லா அறிவுகளும் சப்த பூர்வமானவை. சப்தம், அதாவது ஒரு பெயர் இல்லாமல் நமக்கு ஒரு அறிவும் உண்டாக முடியாது. புத்தியில் தோன்றும் எண்ணம் ஒவ்வொன்றும் ஒரு சொல்லையவலம்பித்தே ஏற்படுகிறது. ஆகையால் வடமொழியில் உள்ள தத்வ சாஸ்திரங்களில் சப்தத்தை 'விகல்பம்' என்றும், நமக்கேற்படும் ஞானத்தை 'ஸவிகல்பக' ஞானமென்றும், அகக் கண்ணுள்ளாரான ரிஷிகளுக்கு சப்தம், சொல், பெயர் என்ற அழுக்கை விலக்கி, ஞானத்தை சுத்தமாய் கிரஹிக்கும் தன்மை உண்டு என்றும், அப்படிப்

பட்ட சுத்த ஞானம் 'நிர்விகல்பக' ஞானம் என்றும் சொல்லப்படுகிறது. இதுபோலவே, நமக்கு 'ஸவிகல்பகமான' தாயும் சொல்லிற்கு அடிமையானதாயு மிருக்கிற இசையே அனு பவிக்க முடியும்; சொற்சிறையுள் புகாத குழந் தைக்கும், பசுவுக்கும், பாம்புக்கும் நிர்விகல்பக மான நாதானுபவம் செய்ய முடியும்.

நமது கானத்திலும் பாடப்படும் கீர்த் தன, ச்ருதி, பத வகைகள் சொற்களில் சிறையடைக்கபட்ட இசை. ராகமாய்ப் பாடப் படுவதே ஸ்வாராஜ்யமடைந்த இசை.

நமக்குத் தெலுங்கு தெரியாத ஒரு குணத் தால்தான் நாம் பாடுமிசையில் கல்பனை யிருக் கிறது; தெலுங்கர் பாடுமிசை பத்யமாய்ப் போய் விடுகிறது.

சொற்களின் பொருள் என்ற பாவம் வேறு; ராகத்தின் பாவம் வேறு. அப்பகுத் தறிவில்லா சிலர் ஸாஹித்யத்தை முறிக்கக் கூடாது, அங்கு நிறுத்த வேண்டும், இங்கு நிறுத்த வேண்டும் என்று பிடிவாதம் செய்கி ருர்கள். இது மட்டும் தவறல்ல; இசையை யும் கவியாய் நினைத்துக் கொண்டு, கச்சேரி யையும் நாடகமாக்கிவிடும் சில ஸங்கீத வித் வான்களுமுளர்; அவர் செய்வதும் தவறே. பதங்களையும் சொற்களையும் அமுக்கிக் கொண்டு, சொற்களும் பதங்களும் சொல்லக் கூடாத உயரங்களுக்கு உயரும் தன்மையே இசையினுடையது. ஆயிரம் பதங்களால் சொல்லி முடிக்கும் ஒரு உணர்ச்சியை ஒரு ஸ்வரஸ்தானத்தைத் தொட்டே முடிப்பது இசை. "ஓக்ஞயீ" "தோயாயீ" என்று ஸாமத்தில் பாடுகின்றனர்; இதன் ஸாஹித் யம் ரிக் வேதத்தில் எப்படி இருக்கின்றது? "அக்ன ஆயாஹி வீதயே" என்று.

கானத்தின் ரஸத்திற்கும் சொற்களாலா கிய கவியின் ரஸத்திற்கும் சொல்லப்பட்டத னைத்தும் நாட்டியத்திற்கும் பொருந்தும். பதங் களில் தோன்றும் அர்த்தத்தால் அவற்றைப் போற்றி, அபிநயம் அதிகமா யிருக்கட்டும் என்று நண்பர் பலர் சொல்லுகின்றனர். பதங் களின் மூலம் ஏற்படும் இழுக்குகள் நாட்யத் தில் இரண்டு; ஒன்று பாடப்படும் இசை; இரண்டு, அந்த பதத்தின் சொற்களின் அர்த் தம். இவ்விரண்டையும் தாண்டித் தனித்தி ருக்கும் அபிநயம், அபிநயமாய் அனுபவிக்கப் பட வேண்டுமே யல்லாது, பதம் பாடும் பின் பாடகியின் இசையின் இனிமையைக் கொண்டோ, பதம் எழுதியவரின் கவி சாதுர் யத்தைக் கொண்டோ, அனுபவிக்கப்படக் கூடாது. நாட்யம் சுத்தமாய்த் தனியாய் மன தில் பிரிக்கப்பட்டதாய்ப் பட வேண்டும். ஆகையாலேயே, அபிநயத்தை விட ஆட்டம் என்ற சுத்த நிருத்தமே மேல். நிருத்தத்தில் ஆனந்தம் அப்படியே உருவெடுத்ததாய்க் காணப்படுகிறது. மனிதரின், ஸுகதுக்கங்களா லான பாவங்களின் கற்பனையால் ஏற்பட்டு, பதங்களின் மூலம் செய்யப்பட்ட ஸாஹித்யம் என்ற வேறென்றின் மூலமே அபிநயத்துள்ள நாட்ய வழகும் நாட்யரஸமும் பிரகாசிக்க வேண்டியிருக்கிறது. இசையில் ராகம் எப்படி சுத்தமான நாதானுபவமோ, அதுமாதிரி நாட் யத்தில், நிருத்தம் சுத்தமான நாட்யானுபவம். சொல்லைக் கடந்த வெளியிலேதான் "ஏஷ ஸாம காயந் ஆஸ்தே" 'இதோ ஆத்மா பேரி சையைப் பாடிக் கொண்டிருக்கிறது' என்று உபநிஷத் கூறுகிறது. சொல்லுலகிற்கப்பா லுள்ள வெளியில்தான் குஞ்சிதத்தாளானும் தனக்குத்தானே ஸபையாய் ஆடிக்கொண்டி ருக்கிறன்.

பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் கீர்த்தனம்

(மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் எடுத்துதவியது.)

[ஸ்ரீ வாஞ்சி நாதர் விஷயமானது]

தாளம் : ஆதி

ராகம் : சஹாணு

பல்லவி

ஆராலும் சொல்லத்தர மல்லக் காணேன்
ஐயாவுன் திருவடி மகிமையை (ஆரா)

அநுபல்லவி

பாராளுங் கர்த்த கமல பவன் துதி
பகரும் ஸ்ரீ வாஞ்சி நாதரே உலகில் (ஆரா)

சரணங்கள்

கண்மலரா லருச்சனை செய்த மாலுக்குக்
கண் களித்துச் சக்கரமோன் றளித்த
உண்மைப் பொருளா யுலகெங்கணும் நிறைந்த
ஒருரு வாகிய பேரொளியே
வெண்மதிக் கலையும்பொற் கடுக்கையுங் கங்கையும்
வேணியில் தரித்த தாணுவே
விண்முழு தாளும் இந்திரன்முதலனைவரும்
மிகுந்துமன துவந்து நிதமும் வந்து அகந்தழுவி
வணங்கவருஞ் சோதியே (ஆரா)

பாசக் கயிற்றுடன் வருங் காலனை யுதைத்துப்
பரிந்து மார்க்கண்டர்க் கென்றும் பதினாறுக
ஆசி லாத ஆயுஸு தந்து விளங்கும்
ஆனந்தத் தாண்டவ மூர்த்தியே
பாசுப தாஸ்த்ரம் வில் விஜயனுக் களித்த
பரம புருஷபஞ் சாட்சரஸ்வரூபா
தாஸஸம் ரட்சண உல் லாஸஜக தீச
தரங்க முறு துரும்பெனவே அலைந்து தியங்கும் உளம்
இலங்கு பணி பூஷணு (ஆரா)

அங்கஜ னையுந்த்ரிபு ராதியை யும் எரித்த
அமல பூர்ணபோதானந்த ரூப
மங்களாம்பிகைக் கன்பாம்முத்து வேலரை
வளர்க்கும் வாஞ்சி நகர் வாசரே
சங்கர ஹித சாரங்க தரவருஷத்து ரங்க
ஜகன்மோஹனங்க பவபங்க
கங்காதரஹர வாஞ்சிலிங்க தவளாங்க
கருவுறு பிறவிப் பிணியை விலக்கிக்
கனத்தபுக ழெமக்கருள் தயாபர (ஆரா)

மங்களம்

(ஸ்ரீ ச. சோமசுந்தர தேசிகர் எடுத்துதவியது)

[பின் வரும் கீர்த்தனம் நாகப்பட்டணம் வேதாரணியம் முதலாய இடங்களில் கல்யாணம் முதலிய சுபகாரியங்கள் நடக்கும்போது பாடப்படுகின்றது. இது அச்சானதாகத் தெரிய வில்லை. பாடியவர் பேரும் தெரிய வில்லை. ச. சோ.]

இராகம் : சுருட்டி | தாளம் : ஆதி

பல்லவி

மங்களம் தியாகேசருக்கு மங்களம்

அனுபல்லவி

மாலை செங்கழுநீர்த் தோடையர்க்கு செய மங்களம்

சரணங்கள்

வீதிவிடங் கேசர்க்கு விண்ணமரர் பூஜிதர்க்கு
தூதிரவிற் சென்றவர்க்குச் சுப மங்களம்

தென்றல் வாசலழகர்க்குச் செவ்வந்தித் தோடணி வார்க்குக்
கொன்றைமாலை வேணியர்க்கு சுப மங்களம்

கம்பிக்கா தழகர்க்குக் கமலைத்தியா கேசர்க்கு
செம்பொன் சிங்காதனர்க்கு செய மங்களம்

சில்பப் பகுதி.

வாழ்க்கைக் கலை

(வே. ராகவன்.)

நமது நாகரிகத்தையும், நகரவாழ்க்கையையும் நினைத்தால் எனக்குக் கனகாம்பரம் நினைவுக்கு வருகிறது. செடியையே ஒடித்துவைத்துக்கொண்டாற்போல் நமது பெண்மணிகள் கூடைக்கனகாம்பரத்துடன் வெளிவருகிறார்களே, அந்தப் பூவுக்கு ஏதாவது வாஸனை உண்டா? அந்த மணமற்ற மலர்போலிருக்கிறது நமது நாகரிகம். 'விவாஹங்கள் இருக்கின்றன; காதலில்லை. படிப்பிருக்கிறது; ஞானமில்லை. நல்ல உழைப்பாளிதான், சிரமப்பட்டுதான் பாடுகிறான், சுகம்மட்டும் இல்லையே' என்றாற்போல் இருக்கிறது. இதற்கு மூல காரணம் என்னவென்றால் நமக்கிருந்த பழைய வழக்கங்களில் பலவற்றின் அருமையைத் தெரியாமல் உதறிவிட்டு நாம் பல புதுமைகளைக்கட்டிக் கொள்வதுதான். பழமையைப் பழமை யென்பதற்காக விடாமல் பிடித்துக் கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை. பழமையில் உள்ள அழகை அனுபவித்து, அதைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என் கொள்கை. இதில் பழமை புதுமை என்பதல்ல விவாதம்; நம்முடையது, ஸ்வதேசி, பிறருடையது, பரதேசி என்பதுமட்டும் அல்ல; அழகுள்ளது எது, அழகில்லாதது எது என்பது முதல் விவாதமாகும்.

நம்முடைய கச்சம் எவ்வளவு அழகாயிருக்கிறது; நமது கற்பனைபோல் நிரம்பியோடுவதான நம் ஆடை எங்கே, தூணுக்கு உரை போடுவது போன்றதும், மனிதனுக்கு கால் இரண்டே என்று எடுத்துக்காட்டும் 'டிரௌஸெர்ஸூம்' 'பாண்ட்ஸூ'ம் எங்கே? வேஷ்டியென்றால், அதில் எவ்வளவு அற்புதமான கறைகள்? அதன்மூலம் பிரகாசிக்கும் நெசவுக்கலையின் அழகு எவ்வளவு? நல்லவேளையாய் ஆங்கிலமான ஆண்களைப்போல, நாகரிகம் மாறிப்போன நம் மாதர்கள் மட்டும் தங்களுடைய புடைவையைக் கைவிடவில்லை! நம் புடைவைகளின் அழகு மேனாட்டு மாதர்களையும் கூட வசீகரணம்செய்து வருகிறது. இப்புடவைகளிலும் நல்ல பளிச்சென்ற வர்ணங்கள் கொண்டவை குறைந்து, மங்கலாய் அழுக்கேறினாற்போலும், வெண்மையாயுமிருக்கும் மில் சேலைகள் நம் தென்னாட்டில் பரவியிருப்பது மிகவும் கண்ணுக்கு நோவாயிருக்கிறது. பளிச்சென்ற ஸூர்யன்; பளிச்சென்ற சந்திரன்; பளிங்கு போன்ற நீர்; வர்ணம் நிறைந்த பூக்கள்-இப்படிப் பிரகாசமாயிருக்கும் நம் நாட்டில் மங்கலான பண்டங்கள் எப்படி ருசிக்கும்? பலவகைப் புடைவைக் கட்டுகள்போய், எல்லாம் ஒரே மாதிரியாகி வருகிறது. மஞ்சளைக்கண்டால் ஆகவில்லை; ஸோப்பினால் ஒரு வரண்ட தோற்றம் தான் ஏற்படுகிறது. யார் காட்டிய வழியோ தெரியவில்லை, பழைய அரையணா அகலத்தில் ஒரு குங்குமப்பொட்டு! நெற்றியின் நடுவில் வகிடு எடுப்பதின் அர்த்தம் என்னவென்று தெரியாமல் கோணல் வகிடு எடுக்கிறார்கள்; நேர் வகிடு முகத்தின் நடுவே மூக்குடனும் மோவாய்க்கட்டையின் நடுவிலுள்ள குழிவுடனும் சேர்த்து முகத்தை இரு

பிரிவாகப்பிரித்து நம் மனதுக்கு ஒரு மத்ய ஸூத்ரத்தைப் போட்டுக்கொடுக்கிறது; முகத்தின் அங்கங்களின் ஸன்னிவேசத்தைச் சரியாய்க்காட்டும் தன்மை அங்நேர் வகிடுக்கு இருக்கிறது. கோணல் வகிட்டைவிட விகாரமானது, காதுகளை மயிரால் மூடிக்கொள்வது.

பழம் பெண் ஒருத்தியை விடப்புதுப் பெண் அதிக அழகு படைத்தவளா? இல்லை. அவள் அலக்ஷ்யமாய்த் தெருவில்போடும் கோலங்களை மேனாட்டுச் சித்திரக்காரர்கள் பார்த்துப் பிரமித்துப் போகிறார்கள். அவளுக்குத் தெரிந்த அபூர்வ ராகங்களிலுள்ள நாடோடிப்பாட்டுகள், லாலி, ஊஞ்சல், அவள் ஆடும் கும்மி, கோலாட்டங்கள், அவள் நடத்திவந்த பஸவன் முதலிய கன்னி விழாக்கள்—இவற்றில் என்ன தெரியும் புதுப்பெண்ணுக்கு? குழந்தையே வேண்டாமென்கிறாள் புதியவள்; அது இவள் முயற்சியை எதிர்த்துப்பிறந்து விட்டால், தன் இன்பத்திற்கு அது இடையூறென்று நினைக்கிறாள்; கத்தினால் தொட்டிலில் இட்டுப் பாடமாட்டாள்; அதன் வாயில் ஒரு 'ரப்பரை' அடைத்துவிடுவாள். முன், குழந்தைகள் தொட்டிலின் மேல் ஆலிலையில் கிருஷ்ணன் குழந்தையாய்த் தொங்கும் காட்சி; அதற்கு ஏற்பட்ட லாலியை மஹாகவி கனவில் கண்டு ஏற்படுத்தியதாகத்தான் சொல்லவேண்டும்; இப்பொழுது குழந்தைக்குத்துணை என்ன? தலையில் தட்டினால் கத்தும் நாய், பூனை, 'ஸெலுலாய்டி'ல் ஜப்பானிய பொம்மைகள்.

ராமாயணத்தில் அயோத்தி, லங்கை முதலிய நகரங்களிலுள்ள மாளிகைகளை வர்ணிக்கும் பொழுதும், மத்ஸ்யபுராணம் முதலிய புராணங்களில் சிற்ப விஷயங்களைச் சொல்லும் பொழுதும், நாம் கேள்விப்படும் பலவிதமான அமைப்பும், ஆகிருதியும், அழகும் வாய்ந்த மாளிகைகள் எங்கே? எல்லாம் புதுமாதிரியாய், சிமிட்டியில் வழித்து விட்டாற்போலும் கோடு கிழித்தாற்போலும், உள்ள கட்டிடங்கள்; முகவுரையே இல்லாத புத்தகங்கள் போல எடுத்ததும் வாசற்படியோடு ஆரம்பிக்கும் வீடுகள்! இவ்வளவு வீடுகள் மாம்பலம் முதலிய இடங்களில் ஸமீபத்தில் கிளம்பியிருக்கின்றனவே, இவைகளுள் அழகாவது இந்தியரீதி என்று சொல்லப்படுவது ஏதாவது உண்டா? யூனிவர்ஸிடி முதலிய கட்டிடங்கள் புதியனவாய் எழுப்பினார்களே, அவற்றில் ஏதாவது இந்திய, ஸ்வதேசக்கலையின் அம்சங்கள் உண்டா?

கிராமங்களில் ஆற்றங்கரைகளில் ஆடியில் பதினெட்டாம் பெருக்கன்று நாம் நீரிலும், கரையிலும் கூடிச் சித்திரான்னங்களை அனுபவிக்கும் ரஸம், நம் நகரத்தில், நடக்கும் டீ பார்ட்டிகளில் ஒன்றிலாவது காணவில்லை. பலிஞ்சடார், நொண்டி, உப்புக்கோடு, கிட்டிப்பந்து முதலிய நாட்டு விளையாட்டுகள்—காலணா செலவில்லை-உடம்பின் வலியை ஏற்படுத்துவதுபோல் 'ஹாக்கி'யும், 'கிரிகட்'டும், 'டென்னிஸ்' ஸூம் செய்யுமென்று ஒருவரும் சொல்லமுடியாது. பொம்மலாட்டத்தை ஒழித்துவிட்டோம்; வெள்ளைக்காரஸ்த்ரீ ஒருத்தி அதன்பெருமையைப்பற்றி நமக்கு உபதேசம் செய்யும் நூல் ஒன்று எழுதியிருக்கிறாள்! இப்படி மேனாட்டார் எடுத்துக்காட்டினாலொழிய நமக்கே நம்மழகு தென்படுவதில்லை; தென்படுவதற்குள் அவ்வழகு அழிந்தும் போகிறது! அழகிய வாழ்வு வாழவேண்டுமென்றால், வாழ்க்கையையும் கலையையும் பிரிக்கக்கூடாது. இவற்றைப்பிரித்து அனுபவிப்பது மேனாட்டு நாகரிகம்; சேர்த்து அனுபவிப்பது நமக்குத்தான்தெரியும். சித்திரமென்றால் நம் வீடுகளிலேயே சுவடிகளிலும், புத்தகங்களிலும், கோயில்களிலும், சுவற்றிலும், ஆடைகளிலும் காணலாம். பாத்திரங்களே வேலைப்பாடு நிரம்பினவாயிருக்கும்; கிளி போன்ற பாக்குவெட்டி; அன்னம்வைத்த குத்துவிளக்கு; நகைகளிலோ இவ்வித வேலைப்பாட்டைச் சொல்லிமுடியாது. சித்திரக்கலையின்அழகை அனுபவிக்கச் சித்திரசாலை, 'ம்யூஸியம்', என்று யாத்திரை செய்யவேண்டியதில்லை. பாட்டென்றால், ஸபைகளுக்குப்போகும் அவசியத்தை ஒழிக்கவேண்டும். நமக்குத் தெரிந்து, ஊஞ்சல் நம் ஸ்த்ரீகள்பாட ஆரம்பித்துவிட்டால், நாயனக்காரர்கள் கன்னம் வீங்கிப்போய்விடுமாறு பாடும் யோக்கியதை நம்மிடமே இருந்தது. திருமருகல் நடேசனும், தலைஞாயிறு என்ற ஊர்ப்பெண்மணிகள்பாடும், கல்யாணப்பாட்டுகளை வாசிக்க பயப்படுவான் என்று சொல்வதுண்டு. இப்படிக் கலை வாழ்க்கையினின்றும் பிரிக்கமுடியாமல் கலக்கவேண்டும்; அப்படித்தான் அது பண்டை இந்தியாவில் கலந்திருந்தது. நமது கொள்கைப்படி வாழ்க்கையே பெரிய கலை.

மரங்கள், குடிசைகள், கோயில்கள் *

(வே. ராகவன்.)

இந்தியாவின் சில்பச் செல்வங்களில் இருப்பது இரண்டொன்று, அழிந்தது ஆயிரம். கருங்கல் இந்திய ஆலயங்களின் நிர்மாணத்தில் ஸஹஜமாயும் மிகையாயும் உபயோகப்பட்டதில்லை; சுட்ட கல்லாலும், மரத்தாலும் திருப்பணி செய்தவன் அடைவதைவிட மேலான புண்யத்தைக் கருங்கல்லால் தேவாலய கைங்கர்யம் செய்தவன் அடைவதில் ஸந்தேக மில்லையென்றே சாஸ்திரம் சொல்லுகிறது. காலந் தாங்கும் கருங்கல் அரியது. இந்தியாவில் அவ்வப்போது அங்கங்கே அழியும் தன்மையுள்ள சுட்ட கற்களாலும், மரத்தாலும் செய்யப்பட்ட கணக்கில்லாக் கோயில்கள் இருந்து, மழை வெய்யில்களாலும், அன்னியர் படையெடுப்பு, சண்டை முதலியவற்றாலும் அடிக்கடி அழிந்து கொண்டு வந்திருக்கவேண்டும். அடிக்கடி கையாளப்படுவது சுட்டகல்லும் மரமுமேயன்றி, கருங்கல் அல்ல. கருங்கல் ஒரு போதும் ஹிந்து ஆலய அமைப்பின் போக்கை உண்டாக்கினதில்லை, புது வழியில் மாற்றினது மில்லை.

இந்தியாவின் மலைக்கோயில்கள் இதர தேசங்களிலில்லாததோர் விசேஷத்தையுடையவை. இவை கற்களைக் கொண்டு மலையின் மேலோ, வெளியிலோ கட்டப்பட்டனவல்ல; மலையே கோயிலாகச் செய்யப்பட்ட நிர்மாணங்கள்; குடையப்பட்ட அற்புதங்கள்.

கட்டப்பட்ட 'கட்டிடங்களுக்கு' அர்த்தம் ஒன்று மிருக்க வேண்டாம். வெளிக்கு ஒரு உள்; ஒரு மறைவு; வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் இருளினின்றும் சத்ருவினின்றும் காப்பாற்ற ஓர் இடம். இப்படி ஒரு பிரயோஜனத்தை நோக்கி ஏற்பட்டது கட்டிடம். சில்பம் என்றதோ ஒன்றை மற்றொன்றாய் மாற்றி விடுவது; ஏதோ ஒரு பெரிய பாவத்தைக் குறிக்கும் குறி; ஒரு ஸம்ஞா விசேஷம்.

மலைக் கோயிலையே பின்பற்றிப் பிற்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்டதால், பிற்கால ஹிந்துக் கோயில்களும், கட்டிடங்கள் அல்ல; அவையும் சில்பமே; அவையும் ஒரு பரம்பொருளின் குறிப்பு தான்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மஹாபலிபுரத்தில் செதுக்கப்பட்ட கோயில்கள் எதை அனுஸரித்திருகின்றன? அறுதியாக மனிதனுடைய வீடான குடிசைகளை அனுஸரித்திருக்கின்றன. அழியும் பொருள்களால் கட்டப்பட்ட மனித வீட்டிற்கு அழியாப் பொருளான மலையினால் செதுக்கப்பட்ட பிரதிரூபங்கள்.

முதல் முதல் நம் வீடுகளைக் கட்ட நாம் உபயோகித்தவை மரங்கள் தந்த கம்பும் தழையும். மரம் நிறைந்தன கிராமங்கள்; கிராமங்களாலானதே இந்தியா. நம்மைச் சூழ்ந்திருக்கும் பெருமரங்களே நம் வீடு கோயில்களுடைய உருவை ஏற்படுத்தின. ஒரிஸ்ஸா கோயில்களின் கோபுரங்கள் பெருஞ் சோளக் கொண்டைபோல் நிற்கின்றன. வீடு, கோயில் எல்லாம் மரத்தோடு மரமாய் தோட்டத்தோடு தோட்டமாய், வனத்தோடு வனமாய் நிற்கின்றன. கல்லும் கட்டியுமாயிருக்கும் இந்த பூமியே விஷ்ணுவின் நாபியிலிருந்து பூத்த தாமரைமலர் என்று உத்ப்ரேக்ஷை செய்த புத்தி, மற்ற எல்லாவற்றையுமே விருக்ஷரூபத்தைக் கொண்டே கல்பனை செய்தது. நம்மைச் சூழ்ந்திருக்கும் விருக்ஷங்கள் நம் மனோபாவத்தையும் ஆக்ரமித்திருக்கின்றன. நாம் அறியாமலே, நமது சில்பம் விருக்ஷதர்மியாயிருக்கிறது.

ஒரு தேவாலயத்தைப் பார்த்தால் அது தன் விமானங்களைப் பல பூங்கொத்துக்களை உயர்த்தி அர்ப்பணம் செய்வதுபோல் தோற்றும். இந்திய சில்பம் நுட்பமான வேலைப்பாடு நிறைந்திருந்தும், மொத்தப் பார்வைக்கு மிக கம்பீரமான தோற்ற முள்ளது; இவ்விஷயத்திலும், ஹிந்து சில்பம் இயற்கையை ஒத்திருக்கிறது. ஒரு விருக்ஷத்தின்மேல் பூத்திருக்கும் பூக்களை தூரத்திலிருந்து பார்த்தால் அது ஒரு

* 'Trees, Huts and Temples', by Heinrich Zimmer, Dr. Coomaraswamy Commemoration Volume of the Journal of the Indian Society of Oriental Art, Calcutta.

அழகு; ஒரு பூவைப் பறித்துக் கையிலெடுத்துப் பார்த்தால் அதன் ஸூக்ஷ்மமான அழகுகள் அனந்தம்.

ஆனால் இயற்கையில் காணப்பட்ட ஒரு பொருளின் பிரதிரூபம் நம் கோயில்கள் என்பதல்ல. வீடுகள்போல் அடித் தோற்றத்திலிருப்பினும், அவற்றின் மேல் பாகங்கள் தேவர்களின் விமானங்களை ஒத்தன. பெரிதாயிருக்கும் ஒரு கோயிலைப் பார்த்தால், தங்கள் தங்கள் விமானங்களுடன் வந்து, தேவதைகள் தங்கும் மேரு பர்வதத்தின் ஞானம் உண்டாகும். இப்படியாகக் கோயில் என்பது பூலோகத்தில் தேவதைகளுக்கான வீடாக ஆகிறது.

சில பெருங்கோயில்கள் ப்ரபஞ்சத்தையே பிரதிபிம்பிப்பது போலிருக்கும்: அகண்டமான அம்பலத்தில் அமைந்திருக்கும் அளவிலா உலகங்கள், அவற்றிலுள்ள அளவிலா, வித வித தேவதா ஜீவ ராசிகள், இவைகளெல்லாம் அக்கோயிலில் காணப்படுகின்றன. பார்த்ததும் நாம் பிரமித்துப் போய், நம் மனம் சுழன்று சுழன்று, மேல் நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது.

ஆனால் இப்படி வளர்ந்தும் விரிந்தும் போன கோயிலின் உருவின் ஒவ்வொரு பாகத்திலும் கோயிலின் மூலமான வீடும், வீட்டின் மூலமான விருக்ஷமும் காணப்படும். நம் விருக்ஷங்களில் சில அனாதி காலமாய்த் தேவ ஸம்பந்தம் படைத்தனவாய் இருக்கின்றன. அவற்றுள் நெல்லி ஒன்று. நெல்லி ஆமலகம், என்ற விருக்ஷம் கடவுளுக்கும் பெரிய கடவுளின் அவதாரம் என்று கருதப் படுகிறது. ஒரு ஸமயம், மேற்கு மலைகளில் ஒரு அற்புதமான நெல்லிமரம் காய்த்து நிற்பது பிரம தேவன் கண்களுக்குப் புலப்பட, அதன் ரஹஸ்யம் என்ன வென்று பிரம தேவன் யோக திருஷ்டியால் யோசித்தான்: மேலே பார்த்தால் மஹாவிஷ்ணு தென்பட்டார்; ஆனால் அவர் வேறு நெல்லி வேறாகக் காணப்படவில்லை. மரம் என்று தோன்றியது பகவானின் அடியே என்று புலப்பட்டது. நெல்லி ரூபமாய்க் கடவுளே பூமியில் தன்னடியை வைத்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டார் பிரமதேவர். இந்த நெல்லியின் நுனியே நெல்லிக்கனி உருவாய் நம் தேவாலயங்களின் விமானங்களில் கலசத்தின் கீழ் அமைந்துள்ள பாகம். இது விசேஷமாய் ஒரிஸ்ஸா தேவாலயங்களில் தெளிவாய்த் தெரியும். ஆகையாலே கோயிலடியில் நுழையும் நாமும் பிரமதேவர் போல், கடவுளின் அடியையே நாடுகிறோம்.

நெல்லியைப் போன்ற மற்றொரு விருக்ஷம் பில்வம். இது சிவனுக்கு விசேஷமானது. இது ஸ்ரீ, அதாவது, லக்ஷ்மியிடமிருந்து உண்டான விருக்ஷம். பில்வத்தின் மூன்று தளங்களிலும் மும்மூர்த்திகளுமிருக்கின்றனர்; தளங்களின் நுனியில் சக்தியும், காம்படியில் இந்திரனும் அவனுடைய தேவக் கூட்டங்களும் இருக்கிறார்கள். தளத்தின் பின் பக்கத்திலிருப்பது அமிருதம். ஸர்வ க்ஷேத்திரங்களும் ஒரு பில்வ தளத்தில் இருக்கின்றன.

நெல்லியென்ன, பில்வ மென்ன, எம் மரத்திலுமே தேவதைகள் குடி யிருக்கின்றனர். பாஹ்யமான உபாஸனைகளை விட்டொழிக்க ஆரம்பித்த பௌத்த மதம் தான் விருக்ஷத்தை விட முடிந்ததா? இல்லை. போதியினடியிலேதான் புத்தர்களுக்கு ஒளி உதயமாக வேண்டி யிருந்தது.

மரங்களில் தேவதைகள் மட்டும்தானா இருக்கிறார்கள்? இல்லை. நம்முடைய பழம் வீடும் அதே. ஏனெனில் நாமும் தேவதைகளும் முன்பு கலந்து வாழ்ந்தோம். அவர் சக்தர், நாம் அசக்தர் என்று இப்பொழுதிருப்பதுபோல் அப்பொழுது பிரிவு இல்லை. நமது வனங்களிலும், மலைகளிலும், குளங்களிலும் தேவர்கள் நம்முடன் கூடி விளையாடி வந்தார்கள். நம்மில் பலர் தேவலோகமும் போய் வாழ்ந்து விட்டுத் திரும்புவர். அக் காலத்தில் கேட்டதைக் கொட்டும் கல்பக விருக்ஷங்கள் பூமியிலிருந்தன. நாம் இப்பொழுது வணங்கும் விருக்ஷங்களே அப்பொழுது கல்பகங்களாய் விளங்கின. இக்கல்பக மரங்களிலேயேஅளவிலா மக்கள் கூடி சுகித்து வெகு காலமிருக்கலாம்.

நாம் இன்பமாய் வாழ்ந்து வந்த கல்பக விருக்ஷங்களைக் காலக்கிரமத்தில் நமக்கு தெய்வ

(136-ம் பக்கம் பார்க்க)

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றுவது பிராமணர்:—வணிகர் நாயகமே! அது நிச்சயமாக இவர்களுடைய முன்னோர்களால் சேகரிக்கப்பட்ட பொருள். ஏனெனில் இந்த க்ஷேத்திரமானது எண்ணிறந்த தலை முறைகளாக இவர்களுடைய குடும்ப சொத்தாகவே இருந்து வந்திருக்கிறது.

காத்தியாயனர்:—என் போதாதகாலம் அதை விற்கப் புறப்பட்டேன்.

மூன்றுவது பிராமணர்:—மேலும் அறியாமல் கொடுத்தது கொடுக்கப்பட்டதாகாது. நீ கொடுத்தது நிலத்தின் கிரயம்தானே. மற்றும் மனுவின் விதிப்படி புதையல் கண்டெடுத்தவனிடமிருந்து புதையல் வைத்தவர்களின் பரம்பரையைச்சேர்ந்தவன் அதை அடையபாத்திய முடையவனென்று விளங்குகின்றது.

முதலாவது பிராமணர்:—ஓய் வணிகரே, இன்னும் ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக் கொள்ளும். குலநாசம் செய்யக்கூடிய பாதகங்களில் பிராமணசொத்தை அபகரிப்பது மிகவும் கொடியது.

மூன்றுவது பிராமணர்:—ஆதலால் இருவரும் சமரஸமாகப்போகும்பொருட்டு அப்புதையலை பேருக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். கண்டெடுத்தவனுகிய உனக்கும் பயன் இருக்கட்டும். முன் பாத்தியக்காரராகிய அவருக்கும் ஏமாற்றம் வேண்டாம்.

காத்தியாயனர்:—நான் ஏழ்மையால் வருந்துகிறேன். இல்லாவிடில் ஏன் குல பரம்பரையாக ஏற்பட்ட இந்த சொத்தை இவ்விதம் தொலைக்கப்போகிறேன்? நீயோ செல்வவந்தன். பலவழிகளில் சம்பாதித்திருக்கிறுய். என்னை மோசம் பண்ணுமல் இருப்பாயே ஆனல் உனக்கு சிரேயஸு உண்டாகட்டும்.

முதல் பிராமணர்:—சரிதான். அப்படியே செய்யும். இருவருக்கும் வருத்தம் வேண்டாம். நேற்றுச் சாயங்காலம் நீர் இந்த பிராமணரிடம் தெரிவித்துக் கொண்ட விஷயங்களை சற்று ஞாபகப்படுத்திக் கொள்ளும். இப்பொழுது புரட்டிப்பேச உமக்கு கூச்சமில்லையா?

இரண்டாவது பிராமணர்:—எங்கே அந்தப் புதையல் குடம்? சீக்கிரம் இவ்விடம் கொண்டு வாரும். எங்கள் முன்னிலையிலேயே பிரிவுசெய்யும். என்ன தாமதம்?

வைசியன்:—நீங்கள் ஒருவருக் கொருவர் ஒத்துப்பேசிக்கொண்டு பக்ஷபாதத்தின்பேரில் தர்ம விரோதமாய்ப் பேசுகிறீர்கள். என் பூமியில் கிடைத்த என் சொத்தை பிராமணருக்குப் பிரித்துக்கொடுப்பது என்பது முடியாதகாரியம். நீங்கள் கடைத் தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைக்கப்பார்க்கிறீர்கள். நியாயமில்லாத உங்களுடைய தீர்ப்பு என்னைக் கட்டுப்படுத்தாது.

[என்றுசொல்லிவிட்டு படபடப்புடன் போய்விடுகிறான்]

காத்தியாயனர்:—அட அநியாயமே! போய் விட்டானே பாவி! ஐயோ, கஷ்டம்! கஷ்டம்! நான் என்ன செய்வேன்.

முதலாவது பிராமணர்:—ஓய் காத்தியாயனரே? இப்பொழுது தானே ஐயா, எங்களை மத்தியஸ்தத்துக்கு அழைக்கிறீர்? உடைப்பு எடுத்துக்கொண்டபின் அணைபோடுவதற்கு ஆயிரம்பேர் கட்டினுலும் என்னசெய்ய முடியும்? நேற்றுச் சாயந்திரமே பக்கத்து வீட்டிலிருக்கும் என்னைக் கூப்பிட்டு ஒருவார்த்தை கேட்டிருந்தால் இப்பொழுது இந்த துக்ககரமான நிலைமைக்கு நீர் வந்திருக்கமாட்டீர். போனத்தைப்பற்றிப் புலம்புவதில் பிரயோஜனம் என்ன? அவனவனுக்குக் கிடைக்க வேண்டியதுதான் கிடைக்கும்.

இரண்டாவது பிராமணர்:—நம்முடைய தாய் இருந்தால் பிறர் கைக்குப்போகாது.

மூன்றுவது பிராமணர்:—நண்பா. அரசனிடம்போய்த் தெரிவி. தர்ம சாஸ்திர வசனபடி அரசனுக்கு இந்தப் புதையலில் ஆறில் ஒரு பாகமும் உண்டு. உன்மூலமாகப் புதையல் வெளிப்பட்டால் உனக்கு ஏதாவது சம்மானம் கிடைத்தாலும் கிடைக்கும்.

காத்தியாயனர்:—எனக்கும் அப்படித்தான் யோசனை. எனக்குக் கிடைக்கட்டும் அல்லது கிடைக்காமல் போகட்டும். இந்த வஞ்சகன் இப்புதையலை வைத்து அனுபவிப்பது தகாது. அடே துஷ்டா! இரு. அடே தயவற்றவனே!

என் குல சொத்தை அபகரித்தவனே! பெரியோர்களை அவமதித்தவனே! உன்னைவிட்டேனு பார்!

[என்று பரபரப்புடன் போகிறான்]

முதலாவது பிராமணர்:— காத்தியாயனர் புலம்புவதைப் பார்த்தால் பரிதாபமாய் இருக்கிறது.

இரண்டாவது பிராமணர்:—இந்த வணிகனுக்குத்தான் என்ன கடு நெஞ்சமையா?

மூன்றாவது பிராமணர் :—வர்த்தகனல்லவா அவன்? கையில் கிடைத்த பொருளை விட்டுவிடுவானு? ஐயோ பாவம்! இந்த காத்தியாயனருடைய தரித்திரம் நீங்காது போலும்!

[திரைக்குள் சப்தம்]

மூன்றாவது பிராமணர்:— இதென்ன ஐயா, தெருவில் அரசாங்கத்து தெண்டோரா போலிருக்கிறதே.

மற்ற இருவரும்:—பார்ப்போம், பார்ப்போம்.

[பறையறையும் அரசதூதன் பிரவேசம்]

அரச தூதன்:—மஹா ஜனங்களே! கேளுங்கள். மந்திரிசபையின் ஆலோசனைக்கிணங்க அரசரால் ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டம் இது:—எவரொருவர் பூமியில் கண்டெடுத்த புதையலை உடனே அரசரிடம் சேர்ப்பிக்காமல் தனக்கென்று கருதுகிறார்களோ, அவருக்குக் கொலைதண்டனை வரை விதிக்கப்படும்.

(போகிறான்)

முதலாவது பிராமணர்:—எது பயங்கரமாய் இருக்கிறதே கட்டளை.

இரண்டாவது பிராமணர்:—அது தான் தெரிந்த விஷயமாயிற்றே.

மூன்றாவது பிராமணர்:— அப்படியானல் காத்தியாயனரால் விவரம் தெரிந்துகொண்ட அரசன் இந்த வைசியனைப் பொறியில் அகப்பட்டுக்கொண்ட எலியின் கதிக்கு உள்ளாக்கி விடுவான் என்பது நிச்சயம்.

இரண்டாவது பிராமணர்:— பார்ப்போம் அந்த வேடிக்கையையும்.

முதலாவது பிராமணர்:— உலக நடவடிக்கை போகிற போக்கைப் பார்த்தீர்களா? என்ன ஆச்சரியம்.

[போகிறார்கள்]

களம் 7

[நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி, குமாஸ்தா, காத்தியாயனர், வைசியன், பரிஜனங்கள் பிரவேசம்.]

நியாயாதிபதி:—ஓய்! நீர் உயர்ந்த வணிகர் குலத்தில் பிறந்தவராயிருக்கிறீர். என் இப்படி முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்! நேற்று சாயந்திரம் நீர் புதையல் குடத்தை பிராமணரிடம் கொண்டுவந்து சேர்ப்பிக்க வில்லையா?

காத்தியாயனர்:—இல்லை என்று ஒருநாளும் சொல்லமுடியாது.

வைசியன்:—யஜமான்மார்களே! புதையல் குடம் கிடைத்தது என்பதே கட்டுக்கதையாயிற்றே, நான் குடத்தை பிராமணர்முன் சேர்ப்பிப்பதெப்படி? நிலத்தைவிற்று விட்டோமே என்று ஏக்கம்பிடித்த இவ்வந்தணர் அருமையினுலும் பொருமையினுலும் கடோரமான எண்ணம்கொண்டு எனக்குத் தீங்கு வருவிக்கப் புதையல் குடக் கதையைக் கட்டிவிட்டு, என் மீது உங்களுக்குக் கோபம் மூட்டிவிடுகிறார். வணிகத்தொழில் புரியும் எங்களுக்குப் பொய் சொல்லத் தெரியாது.

காத்தியாயனர்:—ஆஹா! என்ன வஞ்சகத் துணிவு இந்த துஷ்ட வைசியனுக்கு. இவன் செய்கிற மாமாலத்தில் உண்மையின் உருவமே மூழ்கிப்போய்விடும் போலிருக்கிறதே.

நியாயாதிபதி:—ஓய் வைசியரே நீர் இன்று காலை மத்யஸ்தர்களான பிராமணர்களின் முன்னிலையில் புதையலைக் கொடுப்பதைப்பற்றி வாக்குவாதம் செய்யவில்லையா?

வைசியன்:—இவ்வந்தணர் கட்டிவிட்ட புதையல் கதையை நம்பி உண்மையறியாத

வரும் இவரிடம் பக்ஷமாக முள்ளவர்களுமான, அவர்கள் ஏதோ மத்யஸ்தம் செய்தார்கள்.

நியாயாதிபதி:—என்ன மத்யஸ்தம்?

வைசியன்:—பேருக்குப் பாதியாகப் பிரித்துக்கொள்ளுங்கள் என்று.

நியாயாதிபதி:—அப்போது நீர் என் வயலில் என்னால் கண்டெடுக்கப்பட்டதை இவ்வந்தணருடன் நான் ஏன் பிரித்துக்கொள்ளவேண்டும், என்று சாக்ஷிசொல்லவில்லையா.

வைசியன்: அவ்விதமாக நான் சொல்லவில்லை.

நியாயாதிபதி :— அவர் முன்னிலையில் அப்பொழுது நீ புதையலே கிடையாது என்ற கட்சியைச் சொல்லவில்லை. ஆனால் புதையலை ஒப்புக் கொண்டு அதைப் பிரித்துக் கொடுக்கும் விஷயத்தில்தான் ஆட்சேபணை செய்தாய்.

வைசியன்:—புதையல் இருப்பதாக வைத்கொண்டு பேசினதெல்லாம அவர்கள் வார்த்தையே ஒழிய நான் அந்தப் பிரஸ்தாபமே எடுக்கவில்லை. நேற்றுக் காலையில் தான் பூமி என் கைக்கு வந்தது. அஸ்தமனத்திற்குள்ளா, புதையல் கிடைத்து விடும்? இவ்வந்தணருடைய பெரும்பொய்க் கல்பனையை யார் நம்புவார்கள்?

நியாயாதிபதி :—ஓஹோ, அப்படியா, சரி இரு. அடே யார் அங்கே?

[சேவகன் பிரவேசித்து]

சேவகன் :—யஜமான்.

நியாயாதிபதி :—நகரக் காப்பாளரிடம் இதைத் தெரிவி—இப்பொழுது இந்த வைசியனுடைய வீட்டைப் பரிசோதனை போட்டுப் புதையல் குடம் பறிமுதல் செய்யபட வேண்டும் என்று. பொருள் கிடைக்கும் வரையில், பெண்ணா யிருந்தாலும் குழந்தையாய் இருந்தாலும் யாரிடத்திலும் தயவு காட்ட வேண்டாம். இந்த அற்பன் தன்னுடைய போக்கிரித் தனத்திற்குரிய பலனை இப்பொழுது அடையப் போகிறான்.

வைசியன் :—யஜமான்களே நானும் கூடச் செல்கிறேன். என்னிடத்தில் குற்றம் கிடையாது. காப்பாளர் உள் புகுந்தால் என் வீட்டு ஜனம் பயத்தினால் தத்தளிக்கும். யஜமான்கள் தயவு செய்ய வேண்டும். தாராளமாகப் பரிசோதனை நடக்கட்டும். "மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்?" ஆகையால் காப்பாளர் உடனிருந்து நானும் அந்தப் பரிசோதனைக்கு உதவி செய்கிறேன்.

நியாயாதிபதி :—ஐயா, காத்தியாயனரே, நீர் நகரக் காப்பாளருடன் உடன் சென்று, புதையல் குடத்தை வெளிப்படுத்த வேண்டியதற்குச் சகாயம் செய்யும்.

காத்தியாயனர் :—அப்படியே.

[என்று சொல்லிச் சேவகனுடன் வெளியே போகிறார்]

நியாயாதிபதி :—ஓய் வைசியரே, அரசருக்குரிய சொத்தை நீர் வஞ்சகமாக மறைக்கிறீர் என்ற விஷயம் நீர் அறிய வில்லைபோலும். இவ்வந்தணரைத் தானே மோசம் செய்கிறோம், நமக்கு என்ன வந்து விடப்போகிறது என்பதல்லவா, உமது எண்ணம்.

வைசியன் :—அரசரின் கோபத்தைத் தாங்க இந்த ஏழை, எம்மாத்திரம். அரசருக்கு புதையலில் பாத்தியம் உண்டென்பது தங்கள் அபிப்ராயமாயிருந்தால் புதையலே இல்லா விட்டாலும், அரசருக்குப் பிரீதியாக இருக்கும்படி என் மற்ற சொத்துக்களில், ஒரு பாகத்தைக் காணிக்கையாகக் கொடுக்க நான் தயாராய் இருக்கிறேன்.

நியாயாதிபதி :— அடே துர்ப்புத்தி உடையவனே! உனக்குக் கஷ்ட காலம் நெருங்கி விட்டது. அரசனுக்குச் சரிஸமான யோக்கியதை உள்ளவன் போல, உன் பணத் திமிரினால் காணிக்கை கொடுக்கவா நினைக்கிறாய்? இன்று புதிதாக ஏற்படுத்தி யிருக்கப்பட்ட சட்டத்தை நீ அறியாய் போலும். அதன்படி நீ புதையலைக் கண்டெடுத்தவனாக இருந்தாலும் அதில் பூர்ண பாத்தியம் உடையவர் அரசரே யாவர். [குமாஸ்தாவைப் பார்த்து] அரசர் உத்தரவை இவனுக்குப் படித்துக் காண்பியும்!

[குமாஸ்தா பறையறைவிக்கப்பட்ட உத்தரவைப் படித்துக் காண்பிக்கின்றார். வைசியன் இடி விழுந்தவன் போல் ஸ்தம்பித்து நிற்கிறான். நகரக் காப்பாளரும் புதையல் குடத்தை எடுத்துக் கொண்டு சேவகனும் காத்தியாயனரும் பிரவேசம்.]

நியாயாதிபதி :—(நகரக் காப்பாளரைப் பார்த்துப் புன்சிரிப்புடன்) கிடைத்து விட்டதல்லவா?

நகரக்காப்பாளர் :—ஆம். நங்கள் அரசரின் உத்தரவைத் தெரிவித்தவுடன், இவ்வணிகரின் மனைவி, இவருடைய பிராணனை ரக்ஷிப்பதில் கவலை கொண்டவளாய்ப் பரபரப்புடன் குடத்தைக் கொண்டு வந்து ஒப்புவித்தாள். தன் கணவனின் பிராண பிக்ஷையை மிகுந்த பரிதாபத்துடன் அவ்வம்மை யாசிக்கிறார்கள்.

நியாயாதிபதி :—ஓய் வைசியரே, உம்மை உயிருடன் விடுகிறோம். ஏனெனில் அரசன் கட்டளைப்படி முதல் முதல் பறி முதல் செய்தது, நீர் எடுத்த புதையல்தான் என்ற காரணத்தினால். ஆனால் நீர் அளவு கடந்த பொய் சொல்லி வஞ்சகம் செய்ய நினைத்த குற்றத்திற்காக உமக்குப் பின் வருமாறு தண்டனை விதிக்கின்றோம் :—நீர் குடியிருக்கும் வீட்டையும் உமது வியாபார மூலத்தையும் தவிர உமது ஸர்வசொத்தும் அரசாங்கத்துக்குப்பறி முதல் செய்யப் படுகிறது. அதில் இவ்வந்தணர்க்கு முன் சொந்தமான பூமியானது அவர் புதையல் விருத்தாந்தம் தெரிவித்ததற்காகப் பரிசாக அவருக்கே திருப்பி அளிக்கப்படும். இப்புதையல் குடம் பொக்கிஷ அறைக்குக் கொண்டு போகப்படட்டும்.

[வைசியன் கையின்மேல் தலையைச் சாய்த்து வருந்துகிறான்]

காத்தியாயனர் :—[தனக்குள்] தெய்வம் சரியான வழிதான் விட்டிருக்கிறது. பிராமணன் பேராசைக்கும், வணிகன் வஞ்சகத்திற்கும் இதுவே உசிதமான முடிவு. [வெளிப்படையாக] என் புராதன பூமி என்னிடம் திரும்பி வருவதால் நான் கிருதார்த்தனானேன்.

[பரதவாக்கியம்]

சாதுக்கள் நிலைநிற்கும் தர்மத்தின் தன்மையினால்
சாதுக்கள் விரும்பியதின் மிக்கபலன் கிடைத்திடுமே
சாதுக்கள் எவருக்கும் சங்கடங்கள் விளைப்பவரை
சாதுக்கள் நேசனும் கலிபுருஷன் கண்பார்ப்பான்
விவேகம் உடையவர்கள் வார்த்தை என்ன வாருலகில்
வாழைதென்னை நெற்கதிர்கள் மலிந்ததாமிப் பூமியென்ன
சுவைமிக்க பால்கொடுக்கும் பசுக்களென்ன பங்கஜனின்
வேதமென்ன வேத மாந்தரென்ன எனுமைவர்,
நாளும் உலகினற்குநயமளித் திடவே.



மொழி பெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்

(டாக்டர் வே. ராகவன் M.A., Ph. D.)

நரவாஹனதத்த ஜனனம் என்ற நான்காவது லம்பகம்

இரண்டாவது அலை

பிறகு சீக்கிரமாகவே வத்ஸராஜனுடைய ஹிருதயத்திற்கு விழாவையளிப்பதாயும் மன்மதனின் அம்சமே அவதரிப்பதால் ஒளிமிக்கதுமான கர்ப்பம் வாஸவதத்தைக்கு உண்டாயிற்று. எப்பொழுதும் அசைந்து கொண்டே இருக்கும் கண்களையுடையதும் வெளுத்துப் போன காந்தியையுடையதும், கர்ப்பத்தில் இருக்கும் காமதேவனிடமுள்ள அன்பினால் தானும் அவ்விடம் வந்த சந்திரன்போல் தோன்றுவதுமான முகத்துடன் வாஸவதத்தை மிகவும் பிரகாசித்தாள். வாஸவதத்தை உட்கார்ந்திருக்கும்போது அவளுடைய பளிங்குப் படுக்கையின் இருபக்கங்களிலும் பிரதிபலிக்கும் அவளுடைய இரண்டு பிரதிபிம்பங்கள், தம் கணவனை காமதேவனிடமுள்ள ஸ்நேகத்தால் தாமும் அவ்விடமே வந்து சேர்ந்த ரதி, ப்ரீதி என்ற காமதேவனின் மனைவிகள்போல் தோன்றின. பிறக்கப் போகும் வித்யாதர சக்ரவர்த்தியின் கர்ப்பத்தை சுச்ரூஷை செய்வதற்காக, விரும்பியதை யளிக்கும் வித்தைகள் உருவெடுத்து அவ்விடம் வந்தனவோ என்று தோன்றும் தோழிகள் வாஸவதத்தையைச் சுற்றியுட்கார்ந்திருந்தனர். கருந்தளிரையொத்த முகத்தோடு கூடிய தன் இரு ஸ்தனங்களையும், கர்ப்பத்திலேயே தன் மகனுக்கு அபிஷேகம் செய்வதற்குரிய தளிருடன் கூடிய கலசங்களைப்போல் வஹித்தாள். தெளிந்தொளிக்கும் நற்காந்தி கொண்ட மணிகள் வைத்த தளங்களையுடைய அரண்மனையின் நடுவில் ஸுகமாய் விச்ரமித்திருப்பதற்கான வசதிகளோடு கூடிய படுக்கையொன்றில் வீற்றிருந்த வாஸவதத்தை, 'அவளுக்கு வரப்போகும் பிள்ளையின் காந்தியால் நாம் தோல்வி யடைந்து விடுவோம்' என்ற பயத்தால் நடுங்கும் உள் நீரோடு கூடிய இரத்தினக் குவியல்களால் கிட்டிவந்து நான்கு பக்கங்களிலும் ஸேவிக்கப் படுவாள்போல் காணப்பட்டாள். அவள் தலைக்குமேலுள்ள விமானத்திலிருந்த இரத்தினத்தில் பிரதிபலித்த அவளுடைய உருவம் ஆகாயவழியாய் அவளை வணங்கவந்த வித்யாதர லக்ஷ்மிபோலத் தோன்றியது. தான் கேட்டுக்கொண்டிருக்கும் கதைகளுக்கு நடுவில், மந்திரங்களை ஸாதிப்பதையும் ஸாதனஞ் செய்தவர்களைப் பற்றியும் கதைகள் வந்ததால், அவற்றில் மசக்கையுள்ளவளானாள். ஸ்வப்னத்தில்தான் ஆகாயத்தில் ஏறியிருப்பதாயும் தன்னை இன்னிசையுடன் வித்யாதரமங்கையர் பேணுவதாயும் கண்டாள்.

விழித்ததும் அதேமாதிரி ஆகாயத்தில் உலவ வேண்டுமென்றும் அங்கிருந்து பூலோகத்தின் மகிழ்ச்சிகளைக் காணவேண்டுமென்றும் ஆவல் கொண்டாள். தேவியின் அந்த மசக்கையையும் மந்திரி யௌகந்தராயணன் யந்திரம், மந்திரம், இந்திரஜாலம் முதலிய ஏற்பாடுகளால் நிறைவேற்றிவைத்தான். பட்டினத்து நங்கையரின் விழித்த கண்களுக்கு வியப்பையளிக்கும் ஆகாய யந்திரங்களில் வாஸவதத்தை ஏறி விளையாடினாள். மாளிகையிலிருக்கும்போது ஒரு நாள், வித்யாதரர்களின் மேன்மையான கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆவல் வாஸவதத்தையின் மனதில் உண்டாயிற்று. அதன்மேல் மஹாராணியால் வேண்டிக் கொள்ளப்பட, மந்திரி யௌகந்தராயணன், எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்க, தேவிக்கு இக்கதையைச் சொன்னான்.

உபகதை. 1*

மலைகளால் மட்டுமல்ல, பார்வதியின் பதியான சிவனாலும் வணங்கப்படுவோனும் பார்வதியின் தகப்பனுமானவன் ஹிமவான் என்ற மலையரசன்; வித்யாதரருக்கு இருப்பிடமான அந்தப்பெரிய மலையில் வித்யாதரருக்கு அதிபனாக ஜீமூதகேது என்ற அரசன் இருந்தான். அவனுக்குத் தன் தகப்பன் மூலம் கிரமமாய் வந்த கற்பகவிருக்ஷமொன்று அவனுடைய வீட்டில் இருந்தது; அது 'மனோரத தாயகம்' அதாவது, விரும்பியவற்றைக் கொடுக்கும் மரமென்ற உண்மையான பெயரால் புகழ்பெற்றது. ஒருபொழுது அந்த ஜீமூதகேது என்ற வேந்தன், தோட்டத்தில், அம்மரத்தை யடைந்து, தேவதாம்சம் பொருந்திய அதை யாசித்தான்: "தைவ விருக்ஷமே, எப்பொழுதும் நாம் விரும்பியவற்றை யெல்லாம் உன்னிடம் பெற்றுக்கொள்கிறோம்; பிள்ளையில்லா எனக்குக் குணமுள்ள பிள்ளையொருவனைக்கொடு," என்று. அதற்குமேல் கற்பக மரம் மொழிந்தது: "அரசே, உமக்கு ஒரு பிள்ளை பிறப்பான்; அவன் தன் பூர்வஜன்ம நினைவு உள்ளவனும், தானவீரனும், எல்லா உயிர்களுக்கும் அனுகூலனும் இருப்பான்," என்று. அதைக்கேட்டு மிகவும் மகிழ்ந்தவனாக அவ்வரசன், அக்கற்பகத்தை வணங்கிவிட்டு, அரண்மனைக்குச்சென்று, தன் மஹாராணியிடம் அதைத் தெரிவித்து, அவளையும் மகிழ்வித்தான். பிறகு அதிக நாளாகாமலேயே அம்மன்னனுக்கு ஒரு மகன் தோன்றினான். அம்மைந்தனுக்குத் தந்தை ஜீமூதவாஹனன் என்று பெயரிட்டார். தன்னுடன் கூடப் பிறந்த ஸர்வ ஜீவகாருண்யத்துடன் பெருந்தன்மை வாய்ந்த ஜீமூதவாஹனன் வளர்ந்து வந்தான். கிரமமாய் இளவரசு பதத்தையடைந்த அஜ்ஜீமூதவாஹனன், உலகத்தின் மேலுள்ள தன்கருணையால், சுச்ரூஷையால் திருப்தி செய்விக்கப்பட்ட தன் தகப்பனிடம் ஏகாந்தத்தில் தெரிவித்துக் கொண்டான்: "அப்பா, வ்வுலகில் எல்லாப் பொருள்களுமே நொடியில் நொடித்துப் போகும் தன்மையையுடையன; மஹான்களுக்குப் புகழ் ஒன்றே பிரளயம் வரைக்கும் நிலைப்பது என்று நான் அறிகிறேன். அப்புகழே பிறருக்கு உதவியதால் உண்டானதாயிருந்தால், ஆகா, பெருமனது படைத்தோர்க்கு, உயிரைவிடப்பிரியமான தனம் அப்புகழை விட வேறெது இருக்கிறது? மின்னலைப் போல் மறையுஞ் செல்வம் உலகத்தோரின் கண்களுக்குச் சிரமத்தையே கொடுக்கும். அதிலும் பிறருக்கு உபயோகப்படாத செல்வம் மிகவும் நிலையில்லாததாய் எவ்விடத்திலோ அழிந்து போகிறது. ஆகையால், விரும்பியதைக் கொட்டும் இந்தக்கற்பக மரம் நமக்கு இருக்கிறதே, அது பிறருக்குப் பிரயோஜனப்பட்டால், அது பயன் பட்டதாகும். அம்மரத்தின் செல்வங்களால் நம்மை யாசிக்கும் அனைவரும் ஏழ்மையற்றவராய் ஆகும்படி நான் செய்கிறேன்," என்று. இப்படித் தந்தையிடம் தெரிவித்து அவருடைய ஸம்மதத்தைப் பெற்று, ஜீமூதவாஹனன், கற்பக மரத்தை யடைந்து, அதைக் குறித்துச் சொன்னான்: "தைவ விருக்ஷமே! நீ அடிக்கடி நமக்கு வேண்டியவற்றை அளித்துக் கொண்டிருக்கிறாய். இன்று என்னுடைய இந்த விருப்பமொன்றை நிறைவேற்ற வேண்டும். நண்பன் போன்ற கற்பகமே! இவ்வுலகனைத்தையும் தாரித்ரியமில்லாததாய்ச் செய்துவிடு; உனக்கு நல்லது உண்டாகட்டும்; பணத்தை வேண்டும் உலகுக்கு உன்

---

*ஸ்ரீஹர்ஷ மஹாராஜன் இயற்றிய நாகாநந்த நாடகத்தின் மூலமும் இக்கதையே.

ளைக் கொடுத்து விட்டேன்,'' என்று. இப்படியாக மனவுறுதி கொண்ட ஜீமூதவாஹனனால் சொல்லப்பட்ட கற்பகம் பூவுலகில் ஏராளமான தங்கத்தைப் பெய்தது. மக்களனைவரும் களித்தனர். "தயாளுவாயும் போதிஸத்வருடைய அம்சம் பொருந்தினவனுயு மிருக்கிற ஜீமூதவாஹனனைத் தவிர வேறெந்த செயலாளன் இப்படித் தன் கற்பகத்தையும் வேண்டுவோருக்கு அளித்து விடுவான்?'' என்று அவனிடம் அன்புண்டான திக்குகளிலும் திக்கிடைகளிலும், ஜீமூதவாஹனனுடைய வெண்புகழ் ஓங்கிற்று. அதன் மேல் பிள்ளையின் கீர்த்தி மூலமாய் பலப்பட்ட ஜீமூதகேதுவின் ராஜ்யத்தைக் கண்டு பொருமை கொண்ட ஞாதிகள் மனோவிகாரத்தை யடைந்தார்கள்.

தானத்திற்காக உபயோகப்படுத்திவிட்ட கற்பகமுமில்லாததால், மஹிமையற்றுப் போன அந்த ராஜ்யத்தை ஞாதிகள் ஸுலபமாக வென்று விடலா மென்றே எண்ணினர். அதன் மேல், ஒன்று கூடி சண்டைக்காக ஞாதிகள் தீர்மானம் செய்தபோது, உறுதியான மனம் கொண்ட ஜீமூதவாஹனன் தந்தையிடம் சொன்னன்: "சரீரம் நீரின் குமிழி போன்றதாயிருக்கும்போது, காற்றிலிருக்கும் விளக்குபோல் நிலையற்ற ஐச்வர்யங்கள் எதன் பொருட்டு சேகரிக்கப்பட வேண்டும்.? அந்த ஐச்வர்ங்களையும் எந்த உயர் மனதுள்ளவன் பந்து ஹிம்ஸை மூலம் இச்சிப்பான்? ஆகையால், அப்பா, நான் நம் ஞாதிகளுடன் யுத்தஞ் செய்யமாட்டேன். ராஜ்யத்தை விட்டு விட்டு, இங்கிருந்து எங்கேயாவது காடு நோக்கிச் செல்ல வேண்டும்; நம் குலத்தை நாமே அழிக்க வேண்டாம்." இப்படிச் சொன்ன ஜீமூதவாஹனனைக் குறித்துத் தானும் ஒரு தீர்மானத்திற்கு வந்தவனுக, தகப்பன் ஜீமூதகேதுவும் சொன்னன்: ', குழந்தாய், நானும் எவ்விடமாவது செல்ல வேண்டும்; யுவாவா யிருக்கும் நீயே காருண்யத்தால் இராஜ்யத்தைத் துரும்பாய் நினைத்து விட்டு விட்டபோது, கிழவனுன எனக்கு என்ன ஆசை வேண்டியிருக்கிறது?'' இப்படி மொழிந்த தந்தையுடனும், தாயுடனும் கூடி, ஜீமூதவாஹனன் 'சரி' என்று மலயமலைக்குச் சென்றுன். ஸித்தர்களுக்கு வாஸஸ்தானமாயும், சந்தன மரக் காடுகளில் மறைந்து விழும் அருவிகளோடும் கூடிய அந்த மலையில் ஒரு ஆச்ரமத்தில் தகப்பனுக்கு ஸேவை செய்து கொண்டிருந்தான் ஜீமூதவாஹனன்.

இப்படி இருக்கும் போது, அவ்விடத்தில் ஸித்த ராஜனுன விச்வாஸு என்றவனின் மகள், மனதை வசப்படுத்தியவன், மித்ராவஸு என்பவன், ஜீமூதவாகனனுக்குத் தோழனுய் வாய்த்தான். முன் பிறப்பில் தன் மனைவியாயிருந்த, அந்த மித்ராவஸுவின் ஸஹோதரியை, ஞானியான ஜீமூதவாஹனன் ஒரு ஸமயம் ஏகாந்தத்தில் கண்டான். அச்சமயம் அவ்விரு இளைஞர்களுக்கும் ஏற்பட்ட பரஸ்பரப் பார்வை அவருடைய மனதாகிற மான்களுக்கு உறுதியான வலைக்கட்டு போல் ஆயிற்று. மூவுலகும் பூஜிக்கத் தக்க அஜ்ஜீமூதவாஹனனைப் பிறகு திடீரென ஒரு சமயம் வந்தடைந்து, பிரீதியுள்ள மித்ராவஸு சொன்னன்: "மலயவதீ என்ற கன்னிகை, என்னுடைய தங்கை, இருக்கிறுள்; நான் அவளை உனக்கு கொடுக்கிறேன்; என் விருப்பத்தை மாற்றுதே,'' என்று. அதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஜீமூதவாஹனனும் சொன்னன்: "ஸித்தர்களின் இளவரசே! முன் பிறப்பிலும் இவள் எனக்குப் பிரியையா யிருந்தவள்; நீயும் அப்பிறப்பில் என் இரண்டாவது ஹிருதயம் போன்ற தோழனு யிருந்தாய்; எனக்குப் பூர்வ ஜன்ம நினைவுண்டு! அம் முன் பிறப்பு முழுதும் நினைவுக்கு வருகிறது.'' இப்படி ஜீமூதவாஹனன் சொல்லவே, "எனக்கு ஆவலாயிருக்கிறது, முன் பிறப்பின் கதையைச் சொல்லு'' என்று மித்ராவஸு கேட்டான். இதை மித்ராவஸுவிடம் கேட்ட புண்ணியசாலியான ஜீமூதவாஹனன் பின்வருமாறு பூர்வ ஜன்ம கதையைச் சொன்னன்.

(தொடரும்.)

புஸ்தக விமர்சனம்.

மாதங்கினி : பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர், வங்காளியில் எழுதிய இந்த அரிய 'நாவல்' ஸ்ரீமான் டி. என். குமாரசுவாமி, பி. ஏ. அவர்களால் மொழி பெயர்க்கப் பட்டு, மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது. விலை ரூ. 1—0—0.

தமது அபூர்வமான கற்பனைகளால் வங்காளி பாஷைக்குப் புத்துயிரளித்த பெரியாருள் பங்கிம் சந்திரர் முதல்வராவர். மதச் சண்டை, ஜாதிச்சண்டை, சமூஹச்சண்டை, பாஷைச்சண்டை முதலிய சண்டைகளாலும், இன்னும் பெயரிட முடியாத சண்டைகள் பல வற்றாலும் பிளவுபட்டு, ஒற்றுமையைக் கனவிலும் காணாத இந்திய மக்களை, ஒன்றுபடுத்திய மஹாமந்திரமான 'வந்தேமாதரம்' என்ற அற்புத கீதத்தை நமக்கருளிய மஹா புருஷர் இவரே. இவரது கற்பனைகளைத் தமிழ்ப்படுத்தும் தொண்டை ஆரம்பித்தவர்கள், ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா அவர்களும், திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களுமே. இத்திருத் தொண்டை நண்பர் குமாரசுவாமி அவர்கள் இச்சமயம் செய்ய முன்வந்திருப்பது போற்றத்தகுந்ததே.

ரவிவர்மா என்ற பிரசித்தமான சித்திரக் காரரும் பங்கிம் சந்திரரும் ஏறக்குறைய ஒரே காலத்தவர் எனலாம். இருவரும் அப்போது புதிதாயிருந்த மேனாட்டுக் கலைகளை மோஹித்தவர்கள். ஆனால் ரவிவர்மாவின் வர்ண சித்திரங்களைக் காட்டிலும் பங்கிம் சந்திரரது சொல் சித்திரங்கள் ஆங்கில மோஹம் நிறைந்த அக்காலத்திலேயே நமது புராதன கலானுபவங்களை அடிப்படையாகக் கொண்டது அதிசயிக்கத்தக்கதல்லவா?

"பெண்மணிகள் சிலர் வெள்ளி அகல்களைத்தம் கைகளில் ஏந்தி, மெட்டிகள் ஒலிக்க, அதே வெள்ளிக்குரலில், ஒருவரையொருவர், 'அடி ச்யாமா பாமா,' என்று கூப்பிட்டுக் கொண்டே, வீடெங்கும் விளக்குவைக்க நடமாடிக்கொண்டிருந்தனர்". இது பங்கிம் சந்திரரதுசொல் சித்திரங்களுள் ஒன்று. கந்தர்வன் பெண்களுக்குத்தன் குரலைக்கொடுத்தான் என்பது சாஸ்திரம். அவர்கள் சாரீரத்தின் மாதுர்யத்தையும், அவர்கள் அழகையும் பங்கிம் சந்திரர் அனுபவிப்பது கவனிக்கத்தக்கது. கலாவஸ்துவைப் போஷிப்பதில், பெண்களின் அழகுக்குச் சமானமானபொருள் வேறில்லை என்பதை உணர்ந்தவராய், அவ்வழகைப்பற் பல வழியாக அனுபவிக்கிறார். காளிதாஸர், ஷேக்ஸ்பியர், முதலிய மஹா கவிகளைப்போல பங்கிம் சந்திரருக்கும், தமது மானஸிக புத்திரிகளிடமே பிரேமை அதிகம். அப்ஸரஸ் என்போர் ஜலத்தில் உற்பவித்த பெண் தெய்வங்களாம். இவர்களைத் தமிழர் நீரரமகளிர் என்பர். பங்கிம் சந்திரரது புத்திரிகள் வெகுவாய் அப்ஸரஸ்களே. ஏனென்றால், இவரது பெண்பாத்திரங்களுள் நீரில் மூழ்காதவளாவது, நீந்தாதவளாவது இல்லை எனலாம். பெண்ணழகை நிலத்தில் அனுபவித்துத் திருப்தி அடையாதவராய், வர்ணனைக்கென்றே நூதனமான ஜலக்கிரீடைகளைக் கற்பித்து, அவர்களை நீரிலிட்டு, அவர்கள் அழகை அனுபவிக்கிறார். இதை இவர் நாவல்கள் எல்லாவற்றிலும் காணலாம். இவர் கட்டுரைகளுள் கங்காநதியும், அதை ஆச்ரயித்த தோணி வாழ்க்கையும் கலக்காமல் இராது.

இன்னும் ஸ்ரீமான் குமாரசுவாமி, பங்கிம் சந்திரரது 'சந்திரசேகரர்' 'ஸீதாராம்' முதலிய சிறந்த நூல்களையும் மொழிபெயர்ப்பாராக.

பார்க்கவன்.

இராஜ ராஜேசுவரமும் பிறசோழர் கோயில்களும் :—ஆசிரியர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., தஞ்சை அரசர் திருக்கோயிலின் கண்காணிப்பாளர். விலை அணா நான்கு. ஆசிரியரிடம் கிடைக்கும்.

தமிழ் நாடு சிவக்ஷேத்திரங்கட்கும் திருமால் திருப்பதிகட்கும் பேர்போனது என்பது யாவருமறிந்தது. பல்லவ பாண்டிய சோழ அரசர்கள் பல கோயில்களைக் கட்டுவதில் போட்டி போட்டனர் என்றால் அது மிகைச்செய்தி யாகாது. ஆனால், யார் யார் எந்தெந்தக் கோயில்களைக் கட்டினாரென்றால், நாம் விடையிறுக்கவியலாது விழிப்போம். அக்குறைகளில் ஒரு சிறிதை நீக்குவது இப்புத்தகம் எனலாம். இதனுள் ஆசிரியர் தஞ்சை ஆலயம் அமைக்கப்பட்ட விதத்தையும் அதற்குக் கர்த்தாவாயிருந்த முதலாம் ராஜ ராஜனையுங் குறித்து தெரிந்து கொள்ள வேண்டிய அளவு எழுதியுள்ளார். அதனோடு நில்லாது, வேண்டிய படங்களையுந் தந்துள்ளார். அவைகட்கே தமிழர் நன்றி யுரியது. ஆயினும் பிற சோழர் கோயில்களைக் குறித்து ஒன்றுமே கூறாதது விசனிக்கத் தக்கது. அன்றியும் கோயில்களைக் குறித்த (பக்கம் 19-24) பொதுச் செய்திகளை முதலில் கொடுத்திருந்தால் படிப்பதற்கு மேலும் ருசியாக விருக்கும். இது ஆசிரியர் ஆங்கிலத்தில் முன்னர் எழுதி வெளியிட்ட புத்தகத்தின் மொழி பெயர்ப்பும் 'ரீபிரிண்டு'மாகையால் புஸ்தகவடிவிலே பதிப்பு திருத்தமுற வருமென நம்புகிறோம்.

பண்டிதர். ச. சோமசுந்திர தேசிகர்.

(84-ம் பக்கத் தொடர்ச்சி.)

வந்தார். அவரைக் கண்டதும் வெட்கமடைந்தவளாய், 'இதோ வந்தேன்' என்று வீட்டுக்குள்ளே புகுந்து உள்ளே யிருந்தே அவரைக் கவனித்தேன். அவர் நிலைத்து நின்று விட்டார்; அவரைப் பார்த்தால் பிச்சை போட்டாலும் போகமாட்டார் என்று தோன்றிற்று. அவர் என்னையே நோக்குவதைப் பார்த்தால் எங்கே என் அருகேயே வந்திடுவாரோ என்று பயந்தேன். உம்மூர் எது, உம்முடைய ஸ்தானம் என்ன, உமக்கு என்ன வேலை என்றெல்லாம் கேட்டுப் பார்த்தேன். மௌனமாகவே இருந்தார்" என்று தன் தோழியைப் பார்த்து ஒருத்தி சொல்வதாக அமைந்துள்ளது ஒரு பாடல். அது வருமாறு:

நென்னலையோ ரோடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்
நுந்நிலைமை யேதோநும் மூர்தா னேதோ
என்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்தனாரே.

இப்படி நாம் எதிர்பாராதபோது நம்மை அருள் வெள்ளம் மூழ்கச் செய்தபின் நம் உடைமை யெல்லாம் அவனதாகி விடுகின்றது. ஆனால் எவ்வளவுதான் அதிதிஸத்காரஞ் செய்து பழகி யிருந்தாலும் கடவுளின் அருள் வெள்ளம் பாயும்போது நம்முள் பெரும்பாலோர் அதனை முழுதும் பயன் படுத்திக் கொள்வதில்லை; முதலில் சற்றுத் தயங்குகிறார்கள்; பின்பு தாபம் அடைகிறார்கள். இவர்களுடைய நிலைமையை அப்பர் ஸ்வாமிகள் வேறொரு பாடலிலே வருணிக்கிறார்.

"என் தோழி! உண்மையாய்ச் சொல்கிறேன்; எனக்கு நேற்று நேர்ந்ததைக் கேள். நடுப்பகலிலே, வேளையில்லாத வேளையிலே ஒரு பெரியார் வந்தார்; அவருடைய வேஷத்தையும் கண்களையும் உற்று நோக்கி, அவருக்கு நான் இடத் தக்க பலி கலவியே ஆகும் என்று என்னை அவர்க்கு அர்ப்பணஞ் செய்யக் கருதினேன்; அதற்குள் அவர் மறைந்து விட்டார். இது என்ன மோசடி! இனி எங்கேயாவது அவரைக்காண்பேனா? கண்டேனானால், மீண்டும் ஏமாந்து போகமட்டேன்" என்று ஒருத்தி தன் தோழிப் பார்த்துச் சொல்வதாக அமைந்துள்ளது அப்பாடல்.

நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலந்த நோக்கிக்
கலந்து பலியிடுவே னெங்குங் காணேன்
சலப்பாடே இனியொருநாட் காண்பே னாகில்
தன்னாகந் தென்னாக மொடுங்கும் வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டேன்
ஒற்றியூ ருறைந்திங்கே திரிவானையே.

மதுரை நகர் வரலாறு :—ஆசிரியர் K. சோமசுந்தரம், லைபரேரியன், மதுரை காலேஜ், மதுரை. விலை ஐந்தணா ; கிடைக்குமிடம் நாமகள் நிலயம், 24 ஆற்றங்கரைத் தெரு மதுரை.

இந்திய தேசத்தில் பல பிரதானமான நகர்களும் முக்கியப்பட்டணங்களும் இருக்கின்றன. அவ்விடங்கட்கு யாத்திரிகர்கள் சென்றால் என்னென்ன பார்ப்பதற்குரியது என்று தெரிந்து கொள்ள இப்பொழுது போதிய சாதனங்கள் இல்லை. ஆங்கிலத்தில் 'கைட்ஸ்' (Guides) என்ற வழிகாட்டும் புத்தகங்கள் அநேக முண்டு. அவைகளைப் போலத் தமிழில் முதன் முதலாகக் காணுவது மதுரை நகர் வரலாறே. இது 20 அதிகாரங்கள் கொண்டது; பல சித்திரப்படங்களையுடையது. பார்க்க வேண்டிய பல இடங்களையும் தரிசனம் செய்ய வேண்டியவற்றையும் நன்கு விளக்குவது. திருவிழாப் பகுதியில் மாதவாரியாகத் திருவிழாக்களைக் கொடுத்திருந்தால் மேலும் நன்றாக விருக்கும். அடுத்த பதிப்பில் அண்மையிலுள்ள திருப்பரங் குன்றத்தையும் சேர்த்து வெளியிடுதல் நலம். விலை குறைவானதால் இப்புத்தகத்தை எல்லோரும் வாங்கிப் பயன் பெறுவார்களென நம்புகிறோம்.

பண்டிதர். ச. சோமசுந்திர தேசிகர்.

தமிழ் நேசன் ஆண்டு மலர் 1938 : (தமிழ் நேசன் இந்திய ஆபீஸ் 187, மவுண்டு ரோடு, மதறாஸ். விலை 40 சென்ட். கோலாலம்பூரிலிருந்து வெளிவருவது.)

இச்சிறந்த பத்திரிகை 1924-ஆம் வருஷத்தில் வாரப்பதிப்பாகத் தொடங்கப் பட்டது. இதனைத் தொடங்கியஸ்ரீ. கி. சௌந்திரராஜம் ஐயங்காரவர்கள் 1925 இலும், அவர் சகோதரர் ஸ்ரீ நரஸிம்ம ஐயங்காரவர்கள் 1938 இலும் பரகதியடைந்தார்கள். இவ்வாண்டு மலர் ஸ்ரீ நரஸிம்ம ஐயங்காரவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப் பெற்றது.

மலாய் நாட்டில் வெளியாகும் தமிழ்ப்பத்திரிகைகளுள், பற்பல உயரிய கட்டுரைகள் நிரம்பிய ஆண்டு மலர்களை பிரதி வருஷமும் தவறாமல் வெளியிட்டு உதவுவது இத் தமிழ் நேசன் ஒன்றே.

இப்பொழுது வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளின் விசேஷ மலர்கள் பலவற்றிலும் தலைமைக் கட்டுரையாக மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் எழுதி வருவது போல், இதிலும் இவர்கள் 'லாடு லட்டுச்சமை' என்றொரு அரிய கதை எழுதியிருக்கிறார்கள். வேறு பிரபல எழுத்தாளருள் ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள், ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், ஸ்ரீ பெ. கொ. சுந்தரராஜன், ஸ்ரீ ஆர். விச்வநாதன், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், 'அல்மின்', ஸ்ரீ சங்கு சுப்ரஹ்மண்யன், 'எஸ். எஸ்', கே. எ. கரீம், 'குடும்பி' 'கல்கி' 'மணி', ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி முதலிய இவர்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். கதரைப் பற்றியும் சினிமாவைப் பற்றியும் தொழிலாளர்களைப் பற்றியும் சீன ஜப்பானிய யுத்தத்தைப் பற்றியும் பரதநாட்டியத்தைப் பற்றியும் பல பிரமுகர்கள் எழுதியுள்ளார்கள். மேலே குறிப்பிட்டவர்கள் கட்டுரைகளோடும் 'ஜோதி' எழுதிய 'இளைஞனுக்கு' என்னும் இனிய பாடலோடும் பலஅழகிய சித்திரப் படங்களோடும் திகழும் இவ் வாண்டுமலர் தமிழ் மக்களுக்கு ஓர் நல்விருந்தாகு மென்பதில் ஐயமில்லை.

விசாரதன்.

பத்திரிகாசிரியர் குறிப்புகள்.

சில்பஸ்ரீயின் தைப்பகுதியை வரவேற்றுப் பாராட்டிய நண்பர்களுக்கெல்லாம் எமது மனமார்ந்த வந்தனம். இப்பகுதியாரம்பத்தில் சிலவாழ்த்துப் பாக்களையும், சில அபிப்ராயங்களையும் பதிப்பித்துள்ளோம். வாழ்த்துப்பாக்கள் உதவியர்களுள் ஸ்ரீமான், K. கிருஷ்ணமூர்த்தி, இப்பகுதியில் 'ஒரு புத்தபோதனை' என்ற அற்புதக் கட்டுரையை எழுதி உதவிய 'இளைய வாதூலன்' ஆவார். 'குழற் கோவலனே' பதினறுவயதும் நிரம்பாத V. S. வேணுகோபாலன் என்ற அண்ணுமலை யூனிவர்ஸிட்டித் தமிழ் மாணவன். குழந்தைகளின் மழலையை அனுபவிப்பதொப்ப நாமும் இச்சிறுவனுடைய இனிய கவி மழலையை அனுபவிப்போமாக.

*   *   *   *

நண்பர் பிரம்மஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் "சில்பஸ்ரீ" என்ற பெயரைப்பற்றி எழுதிய அழகும் சமத்காரமும் நிரம்பிய கட்டுரை ஒன்றை பத்திரிகை ஆரம்பத்தில் பதித்துள்ளோம். 'இவ்வளவு பொருத்தமான பெயரை என்னல் கற்பித்துத்தர முடிந்திராது என்று தோன்றுகிறது, என்கிருர் சாஸ்திரிகள். இப்பெயருக்கு இவர் எழுதியுள்ள கற்பனை நிறைந்த உரையைப்போல எம்முள் ஒருவராலும் எழுத இயலாது என்பதே, இவருக்கு விடையாகும்.

*   *   *   *

நண்பர் பிரம்மஸ்ரீ. T. K. ராமபத்ர சர்மா அவர்களது அழகான நிருபத்தையும் பாராட்டுகிறேம். இப்பெரியார், பல வருஷங்களாகக் கலைகளை ஆராய்ந்து தெளிந்தவர். இவர் நிருபத்துடன், சிற்ப சாஸ்திர எடுகள் பலவற்றையும் அன்புடன் அனுப்பி யருளினர்கள். இதுவன்றே உண்மையான கலாபிமானம்!

*   *   *   *

தமிழ் அபிமானியும், நொடிப் பொழுதில் தன் குபேர ஸம்பத்தைத் துறந்து துறவறம் பூண்ட மஹாபுருஷருமான ஸ்ரீமான், S. துரைசாமி ஐயரவர்கள் சில்பஸ்ரீ முதல் பிரதியைப் பார்த்து "மிகவும் மகிழ்ச்சியடைந்து திரும்பித் திரும்பி மகிழ்ந்தவராய் அதை எல்லாருக்கும் காட்டுகிருர்" என்று நண்பர் P. கோதண்டராமன் எழுதினர். துறவறத்தைப் பல வருஷமாய் மேற்கொண்டுள்ள கோதண்டராமனும் ஐயரவர்களின் தமையனர் மாப்பிள்ளையே. ஐயரவர்களது நன்மொழி சில்பஸ்ரீ எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவதாக!

*   *   *   *

தவிரவும், பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஆசீர்வாதத்தையும் பெற்று மகிழ்ந்தோம். ஐயரவர்கள் உதவியருளிய பெரிய திருக்குன்றம் சுப்பராமையரவர்களது சரித்திரமும், வேறு கீர்த்தனங்களும் சில்பஸ்ரீ பங்குனிப் பகுதியில் வெளியாகும்.

*   *   *   *

ஐயரவர்கள் சிஷ்யருள் ஒருவரான ஸ்ரீ V. முத்துஸ்வாமி ஐயரவர்கள் பிரியத்துடன் உதவிய பாரதக் கும்மியை இப்பகுதியில் காணலாம். 'வந்தேமாதரம்' என்ற மஹா கீதத்துக்குத் தமிழில் பல மொழிபெயர்ப்புக்கள் உள. இப்பகுதியில் கௌண்டின்யர் செய்திருப்பது, மொழி பெயர்ப்பன்றியும் ஒரு விசித்திர கற்பனையுமாகும். 'Pindaric ode (பிண்டாரிக் ஒட்) என்ற ஓர் அரிய பாவினத்தின் ஓசை யின்பமும், தமிழ்ச் சந்தமும் ஒருங்கே இயைந்து சின்னஞ்சிறு சொற்களால் அமைந்த இக்கீதம் 'சாலஅழகிதே'! இவரால் தெம்மாங்கு முறையில் மொழி பெயர்க்கப்பட்டவையான காலஞ்சென்ற W. B. யேட்ஸ் மஹாகவியின் கீதங்களும் கவனிக்கத் தக்கன.

'கில்விகான் குரு' என்ற மொழிபெயர்ப்பை உதவியவர் நல்லிச்சேரி அருணுசலமய்யர் ஆவார்.

*   *   *   *

W.B. யேட்ஸ் என்ற மஹாகவி, தற்சமயம் தமிழ் நாட்டில் சில்பஸ்ரீயை நடத்துபவர்

ஆரம்பித்துள்ள ஸேவையைப் போன்று தம் தாய் பாஷைக்கு பல வருஷங்களாக ஸேவை செய்து வந்தவர். இவர் காட்டிய வழியை நாமும் பின் பற்றுவோமாக.

* * * *

கம்பர் கவிதையில் ஈடுபட்டவரும், தமிழ்க் கலாவிநோதருமான காலஞ்சென்ற ஸ்ரீ T. N. சேஷாசலம் அவர்கள் குடும்பத்துக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

1939ஆம் பெப்ரவரிமீ 6உயன்று மஹாமஹோபாத்தியாய பாஷாபாரத துரந்தரர் மணலூர் வீரவல்லி ஸ்ரீ. இராமாநுசாசாரியர் அவர்களின் உருவப்படம் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் சென்னை ஸர்வகலாசாலையிலே திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம், அண்ணாமலைச் சர்வகலாசாலையின் தாத்காலிக உப அத்யக்ஷராக இருக்கும் சென்னை அட்வோகேட் ஸ்ரீ. டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரவர்கள் உருவப் படத்தை ஸர்வகலாசாலைக்கு உதவிய சபையாரின் சார்பாக பாரத துரந்தரரின் பெருமைகளைப்பற்றித் தமிழிலே பேசினார்கள். சென்னை ஸர்வகலாசாலையின் சார்பாக அப்படத்தை ஏற்றுக்கொண்டு உப அத்யக்ஷர் திவான் பஹதூர், ஸ்ரீ எஸ். ஈ. ரங்கநாதன் அவர்கள் ஆசாரியாரின் விடா முயற்சியைப் பெரிதும் பாராட்டித் தமிழிலே பேசினார்கள். மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் முடிவுரையாக, ஆசாரியாரின்வம்சத்தைப்பற்றியும் அவர்களுடைய அருங் குணங்களைப் பற்றியும் விரிவுரை செய்தார்கள். 'கம்மெமொரேஷன் கமிட்டி'யின் சார்பாக ஸ்ரீ. வி. டி. திருவேங்கடாசாரியாரவர்களின் வந்தனோபசாரத்தோடு சபை முடிவுபெற்றது.

(124-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையும் வணக்கமும் குறைவுபட இழந்தோம். இந்த கல்பக விருக்ஷ கிருஹங்களை இழந்ததும், நாம் நமக்கென்று வீடுகள் கட்டிக் கொள்ள ஆரம்பித்தோம்; நமக்கு நினைவுள்ள வீடு விருக்ஷமேயர்தலால், நாம் புதிதாய் அமைத்த வீடும் விருக்ஷதர்மியா யிருந்தது.

கல்பக விருக்ஷங்கள்—அதன் மூலம் மனுஷ்யாலயம்—அதன் மூலம் நம் தேவாலயம்— இப்படி ஏற்பட்டது நம் தேவாலய நிர்மாண முறை. நமது பெரிய கோயிலொன்றை பெரிய அரச (அச்வத்த) மரமொன்றுக்கு ஒப்பிடலாம். கணக்கில்லாக் கிளைகள், கணக்கில்லாத ஸபைகளையும், விமானங்களையும், கோபுரங்களையும் குறிக்கின்றன. "ஊர்த்வமூலம் அத: சாகம் அச்வத்தம் ப்ராஹு ரவ்யயம்." காடக உபநிஷத்திலும் பிரமமாகிற வேரை மேலே கொண்டு, உலகாகிற வளர்ச்சியைக் கீழே கொண்ட அரசமரம் (அச்வத்தம்) வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சமே ஒரு விருக்ஷம்; கோயில் அதற்கு ஒரு பிரதி ரூபம்.

"எல்லா பக்ஷிகளும் இதில் இருந்து பல விதமான பழங்களைத் தின்கின்றன; ஆனால் இம்மரத்தின் உச்சியில் இனிப்பான பழமிருக்கிறது" என்று வேதம் சொல்லுகிறது. இனித்த பழமாவது—பிரமஞானம், ஆத்மஞானம், அழிவின்மையைக் கொடுப்பது, அதாவது அமிருதம்.